Koviloor Digital Library

உ

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின்

5/5

முந்நூல் தெளிவு

சிவப்பிரகாசம்
திருவருட்பயன்
கொடிக்கவி
+
உண்மை நெறி விளக்கம்

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

தா.ம. வெள்ளைவாரணம்

ACC NO: 12087
R65.0 Q-23

ATTAGAM

Koviloor Digital Library

திருவாவடுதுறை ஆதீனப்புலவர்

தா.ம. வெள்ளைவாரணம்

பிறப்பு	-	06.09.1927 (குடந்தை)
இறைச் சார்பு	-	25.02.2010 (பொறையாறு)
மரபு	-	சோழபுரம் சைவ செட்டியார்
படிப்பு	-	குடந்தை நகராட்சிப் பள்ளி குடந்தை சிறுமலர் உயர்பள்ளி மாயூரம் மெய்கண்டார் தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி
பணி	-	பேராசிரியர் (1950 - 1985) திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி
பட்டங்கள்	-	1959 - திருமுறைச்செம்மல் - மதுரை ஆதீனம் 1960 - மதுரகவி - ஸ்ரீ காசி மடம் 1998 - சைவத் தமிழ்மணி - ஸ்ரீ காசி மடம் 8.02.2003 - ஆதீனப்புலவர் - திருவாவடுதுறைஆதீனம் 28.05.2004 - தொல்காப்பியச் செம்மல் - தஞ்சை பல்கலைக்கழக சார்பு மாநாடு 25.01.2010 - திருமுறை உரைச் செம்மல் - திருவாவடுதுறை ஆதீனம்
எழுதிய நூல்கள்	-	50க்கும் மேற்பட்டவை
ஆற்றிய தொடர் சமய விரிவுரை	-	திருவிடைமருதூர், சிதம்பரம், நெய்வேலி, செம்பொன்னார்கோயில்

Koviloor Digital Library

அருளாசியுடன்
திருவாவடுதுறை ஆதீனம்

5/5

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின்

முந்நூல் தெளிவு

(சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி
&
உண்மை நெறி விளக்கம் தெளிவு)
மற்றும்
(போற்றி பஃறொடை, வினாவெண்பா, நெஞ்சுவிடு தூது,
சங்கற்ப நிராகரணம் அறிமுக குறிப்புரைகள்)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12087

ஆக்கியோர்

கோடிபஞ்சாக்கரம் **தா.ம. வெள்ளைவாரணம்**
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

சீனு. அருணாசலம் - அமைப்பாளர்

திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம்
சிதம்பரம் கிளை

Koviloor Digital Library

© உரிமை வெளியீட்டாளருக்கு

முதல் பதிப்பு: ஜூலை 2010

விலை ரூ.50/-

- *Title* : **Munnool Thelivu** (Attagam Thelivu / Introduction)
- *Author* : Thiruvavaduthurai Adeena Pulavar **Tha.Ma. Vellaivaranam** Porayar 609 307.
- *Subject* : Saiva Siddhantha Philosophy by Umabathy Sivachariyar
- *Language* : Tamil
- *Edition* : First Edition, July.2010
- *Pages* : 14 + 130 = 144
- *Price* : Rs.50.00
- *Published by* : **Seenu. Arunachalam**, Organisor, Thiruvavaduthurai Adheena Saiva Siddhantha Nermuga Payirchi Mayyam, Chidambaram Br. #16, Chinnakadi Street, Chidambaram 608 001. Ph: 04144-231166

Laser Typeset at: VELRAJ
Ezhilagam, #89/1, S.P. Koil Street, Chidambaram.
Siddhantharathinam Swamy. Rajavel
✆ 04144-225426, Cell: 93600-45082

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

23-ஆவது குருமகாசன்னிதானம்

ஸ்ரீ-லஸ்ரீ **சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

திருவாவடுதுறை 609 803 - நாகை மாவட்டம் - போன்: 04364-232021

நாள்: 13.07.2005

" நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான்தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன்தாள் வாழ்க"

அருள் வாழ்த்துரை

உன்னும் உள்துஐயம் இலதுணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து - திருவருட்பயன்

சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் மலர இருக்கும் பல வண்ண மலர்களில் **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின் முந்நூல் தெளிவு** என்னும் சிறப்பு மலரும் ஒன்று என அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய சிறந்த நூல்கள் இருக்கவும், உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் எட்டு நூல்கள் அருளிச் செய்துள்ளனர். இதன் காரணத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரே கருத்தினை வெவ்வேறு விதமாக விளக்கிச் சொன்னால்தான் வெவ்வேறு ஆன்மாக்களுக்கு அக்கருத்து விளக்கமுறப் புரியும். அதுபோல பதவுரை, பொழிப்புரை போன்ற உரைகள் இருப்பினும், உரைநடை வடிவில் விளக்கினால் இக்காலத்தில் பலருக்கும் புரிந்துக்கொள்ள வசதியாக இருக்கும்.

Koviloor Digital Library

அம்முறையில் சித்தாந்தத்தில் தொடக்க நிலையில் இருப்பவர்களும் எளிதில் புரிந்துக்கொள்ள உபகாரமாகும் வண்ணம் நமது ஆதீனப்புலவர் சிவத்திரு தா.ம. வெள்ளைவாரணம் அவர்கள் முந்நூல் தெளிவினை உரைநடையில் தந்துள்ளார்கள். சந்தானாச்சாரியார் வரலாற்றினைத் தொடக்கத்தில் வழங்கியிருப்பது நூல் கற்றிட நன்கு ஊக்கமளிக்கும்.

சிவப்பிரகாசம் சார்பு நூலாகும். இந்நூல் மிகச்சிறந்து விளங்குவதாகும். திருவருட்பயன் குறட்பாக்களால் அமைந்து சித்தாந்தத்தை விளக்குவதில் ஈடு இணையற்றுத் திகழ்வது. எனவே இந்த மூன்று நூல்களையும் கற்றோர், சித்தாந்தத்தில் சிறந்த புலமை பெறுவர் என்பது திண்ணம்.

இந்நூலைத் தொடக்க நிலையினரும் கற்றிடத் துணை செய்யும் முறையில் சிறந்த உரைநடை எழுதியுள்ள நமது ஆதீனப்புலவர் ***சிவத்திரு. தா.ம. வெள்ளைவாரணம்*** அவர்களுக்கும், பதிப்பித்து தொண்டாற்றும் பெருமன்றத்திற்கும், பொருளுதவி தந்து திருவருட்பணி நிற்கும் ஆறுமுக நாவலர் அறக்கட்டளை ***சிவத்திரு க. சுவாமிநாதன்*** அவர்களுக்கும், கற்று, சிந்தித்து நெறி நிற்கும் அன்பர்களுக்கும், இருமை வளங்களும், சிவபத்தி சிவஞானங்களும் சித்திக்க நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

பெறுநர்

சிவத்திரு சீனு. அருணாசலம் அவர்கள்,
16, சின்னக்கடைத் தெரு,
சிதம்பரம் - 608 001.

Koviloor Digital Library

முன்னுரை

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுள் எட்டு நூல்கள் உமாபதிச்சாரியாரால் செய்யப் பெற்றவை. இவ் எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் என அழைக்கப்படும். இவை சிதம்பரம் தலத்தில் விளைந்தவை.

இந்த எட்டு நூல்களில் முதற்கண் நிற்பது **சிவப்பிரகாசம்.** இந்நூல், சிவஞான போதத்தை முதல் நூலாகவும், சிவஞான சித்தியாரை வழி நூலாகவும் கொண்டு செய்யப்பட்ட சார்பு நூல். இந்நூல் நூறு ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனது. முதற் கண் உள்ள 50 செய்யுட்கள் பொது அதிகாரம் எனவும் பிந்திய 50 செய்யுட்கள் உண்மை அதிகாரம் எனவும் பிரிக்கப் பட்டுள்ளன.

உமாபதி சிவம் மறைஞான சம்பந்தரிடம் தீக்கை பெற்ற காரணத்திற்காகத் தில்லைத் தீட்சிதர்கள் உமாபதியை தம் குலத்திலிருந்து விலக்கி வைத்தார்கள். மேலும் நடராசரைப் பூசிக்கும் உரிமை கிடையாது என்றும் அறிவித்து விட்டனர். அதனால் உமாபதி சிவம் குருநாதரின் குடிலில் தங்கிச் சித்தாந்த பாடம் கேட்டுத் தெளிவு பெற்றார்.

பிறகு குருநாதரின் ஆணைப்படி சிதம்பரத்தின் கிழக்கு எல்லையில் கொற்றவன் குடியில் தங்கினார். அங்ஙனம் தங்கி இருக்கும்போது சிவப்பிரகாசம் என்ற நூலைச் சிவஞான போதத்துக்குச் சார்பு நூலாகச் செய்தார். பிறகு சித்தாந்தத்தை எளிமையாக உணரும் பொருட்டுத் திருவருட்பயன் என்ற நூலை இயற்றினார்.

திருவருட்பயன் திருக்குறளைப் போல அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டு, அதிகாரம் தோறும் பத்துக் குறள் வெண்பாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. பதிமுது நிலை முதலாகப் பத்து அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது.

Koviloor Digital Library

உமாபதிசிவம் பின்னர் வினா வெண்பா, போற்றிப் பஃறொடை என்னும் நூல்களை இயற்றினார்.

பின்பு ஒருநாள் நடராசர் கோயில் திருவிழாவுக்குத் தீட்சிதர்கள் கொடி ஏற்றும் போது கொடியேறவில்லை. மற்றும், "உமாபதி வந்தாலன்றிக் கொடி ஏறாது" என்று அசரீரி எழுந்தது. தீட்சிதர்கள் உமாபதியைக் கொடியேற்றுதற்கு அழைத்தார்கள். உமாபதி உலகநலன் கருதிக் கொடி ஏற்றச் சென்றார். கொடி மரத்தின் முன் நின்று **கொடிக்கவி** பாடினார். கொடி தானாக ஏறியது.

கொடிக்கவி நான்கு பாடல்களை உடைய சிறுநூல். ஆயினும் ஆழ்ந்த சித்தாந்த நுட்பங்களைத் தன்னகத்தே உடையது. இது மெய்கண்ட சாத்திரம், பதினான்கனுள் பதினோராம் நூலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இம்மூன்று நூல்கள் செய்யுள் நடையில் உள்ளதாலும் சாத்திரக் கருத்தாக இருப்பதாலும் இதன் பொருளை விளக்கப் பதவுரைகளும் பொழிப்புரைகளும் வெளிவந்துள்ளன. இவ்வுரைகளாலும் விளக்கமுறாதவர்களும், சித்தாந்தம் கற்கும் தொடக்க நிலையாளர்களும் உணரும் பொருட்டுச் செய்யுள் நடைக் கருத்தை, எளிதில் உணரும் உரைநடையாக மாற்றித் "முந்நூல் தெளிவு" என்று பெயரிட்டு இந்நூல் வெளிவருகிறது.

சைவ சித்தாந்தம் எளிய சாமான்ய மக்களிடமும் பரவ வேண்டும் என்பதற்காகச் செய்யப் பெற்ற சிறுமுயற்சியின் விளைவு இந்நூல் என்பதைத் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சித்தாந்த அன்பர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி வேண்டுகிறேன்.

பொறையாறு - 609 307
6.7.2005

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்
தா.ம. வெள்ளைவாரணம்

Koviloor Digital Library

அணிந்துரை

பெரும்பற்றப்பூலியூர், தில்லைவனம், பொன்னம்பலம், பூலோகக் கைலாசம், புண்டரீக புரம், வியாக்கரபுரம், சிதம்பரம் எனப் பலவேறு பெயர்களைக் கொண்டது இன்றைய சிதம்பரம் என்னும் தில்லைத் திருத்தலம். இத்திருத்தலம் பற்றிப் பேசும் குமர குருபரர்.

" தீர்த்தம் என்பது சிவகங்கையே
ஏத்தரும் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே".

என இதன் தீர்த்தத்தையும் திவ்விய திருத்தலத்தையும் மூர்த்தியையும் போற்றி மகிழ்கிறார்.

இத்தகைய திருத்தலத்தில்தான் சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா நிகழ்கின்றது (சூலைத் திங்கள் 22, 23, 24 ஆகிய நாட்களில்) இந்நன்னாளில் வெளிவரும் நூல்தான் "முந்நூல் தெளிவு" என்னும் இந்நூல்.

இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் தா.ம. வெள்ளை வாரணம் அவர்கள். திருவாவடுதுறை ஆதீனப் புலவர் சிறந்த சைவச் சிந்தனையாளர். செம்மையான நூலாசிரியர். சிறப்பு மிகு தமிழ்ப் பேராசிரியர். இவருடைய கைவண்ணத்திலும் சொல் வண்ணத்திலும் பிறந்த நூல் இது.

"சந்தானாச்சாரியார் நால்வர் வரலாறு" என்ற தலைப்பிலும் "சிவப்பிரகாசத் தெளிவு" என்ற தலைப்பிலும் "திருவருட்பயன் தெளிவு" என்ற தலைப்பிலும், "கொடிக்கவித் தெளிவு" என்ற தலைப்பிலும் உருவாக்கம் பெற்றிருக்கும் இந்நூல் போற்றி மகிழ்வதற்குரியது.

சைவ சமயாச்சரியார்கள் சைவத்திருத்தலந்தோறும் சென்று பதிகங்கள் பல பாடிச் சைவ சமயத்தைப் பரப்பி நின்றவர்கள்

Koviloor Digital Library

என்றால் சந்தானாச்சாரியார்கள் சைவ சிந்தாந்தக் கோட்பாடு களை வரையறை செய்தும் விளக்கியும் பலவேறு தெளிவுரை களை வழங்கியும் சைவ சித்தாந்த நெறிகளைப் பரப்பியும் நெறிப்படுத்தியும் சைவ சமயம் வளரவும் வாழவும் வழி வகை செய்தவர்கள். இவர்களுடைய திருவருளினால்தான் சைவ சாத்திர நூல்கள் தோன்றின. சைவம் நெறிப்படுத்தப்பட்டது. சைவ சமயக் கோட்பாடுகள் நிலைபெற்றன. அறிவியல் பூர்வமான ஆக்கங்கள் பல புத்துயிர் பெற்றன. புதுப்பொலி வும் புதிய விரிவாக்கங்களும் தோன்றின.

இத்தகைய சந்தானாச்சாரியர்களான மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வர் வரலாறுகள் மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் நிலையில் மிக அருமையாகக் கூறப்படுகின்றன. தனக்கே உரிய சிறந்த பாணியில் படிப்போர் உள்ளங்களில் பதியும் வண்ணம் பேராசிரியர் அவர்கள் சைவ மணம் திகழத் தித்திக்கும் தீந்தமிழில் மிக அழகாகக் கூறிச் செல்லுவது உணரத்தக்கது. சில பல புதிய செய்திகளும் கருத்துக்களும் காணக் கிடக்கின்றன.

சைவ சித்தாந்தம் என்பது சதாரண மக்களின் சிந்தனைக்கு எட்டாத சித்தாந்தம் என்பர் சிலர். ஆனால் எளிய மக்களின் சிந்தனையைத் தொடும் விதத்தில் எளிய இனிய தமிழில் சிவப்பிரகாசம் என்னும் சாத்திர நூலினை உரைநடையில் விளக்கியுள்ளார் பேராசிரியர் வெள்ளைவாரணர் அவர்கள். சிவப்பிரகாசத் தெளிவு என்னும் தலைப்பில் ஐம்பதுக்கும் அதிகமான பக்கங்களில் கூறிச்செல்வது உண்மையில் பாராட்டத் தக்கது.

மெய்கண்டாரின் சிவஞானபோதத்தை முதல் நூலாகாவும், சிவஞானசித்தியாரை வழி நூலாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சைவ உலகில் சிறந்து விளங்கும் ஒரு நூல். சித்தாந்த அட்டகம் என்ற அழைக்கப்படும் உமாபதி சிவாச்சாரியாரின் நூல்களுல் ஒன்று.

Koviloor Digital Library

இதன்கண் காணப்படும் பதியிலக்கணம், பசு இலக்கணம், பாச இலக்கணம் ஆகியவற்றைச் சிறந்த உரைநடையில் கூறி விளங்க வைத்திருக்கிறார் பேராசிரியர் வெள்ளைவாரணம். இவற்றைப் போன்றே அவத்தை இலக்கணம் போன்றவற்றை விளக்கி ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நீங்கப்பெறும்போது ஆன்மா சிவனது திருவருளைச்சார்ந்து நிற்கிற நிலையே உண்மையான முத்தி எனச் சிவப்பிரகாசம் வழி நின்று விளக்குகின்றார் ஆசிரியர்.

உண்மை அதிகாரம் என்ற தலைப்பில் சிவப்பிரகாசம் கூறும் ஆன்ம இலக்கணம், ஐந்தவத்தைத் தன்மை, ஞான வாய்மை, அதன் இயல்பு, அதன் பயன், நேயம் போன்றவையும் நன்கு விளக்கப்படுகின்றன.

இத்தலைப்பில் பேராசிரியர் சிவப்பிரகாசம் கூறும் பொருள்கள் பலவற்றையும் இனிய தமிழில் ஏற்றம் பெறும் வகையில் கூறுவதும், கூறியவற்றை உள்ளத்தில் நிற்குமாறு உணரவைப்பதும், உணர்ந்தவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்து நிற்கச் செய்யவும் வழி செய்கிறார் எனக் கூறலாம். இந்நிலையில் ஆசிரியர் கூறுவது போன்று சிவப்பிரகாசம் தெளிவாகவே உள்ளமை கண்கூடு.

உமாபதி சிவாச்சாரியர் அருளிச் செய்த மற்றொரு நூல் திருவருட்பயன் என்ற குறள் நூல். அமைப்பில் திருக்குறளைப் பின்பற்றிப் பத்து அதிகாரங்களில் நூறு குறள் வெண்பாக்களால் ஆன இந்நூல் சித்தாந்தத்தை எளிதில் உணரும் பொருட்டு ஆக்கப்பட்டது.

பதி முது நிலை, உயிரவை நிலை, இருள் மல நிலை, அருளது நிலை, அருள் உரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்து அருள் நிலை, அணிந்தோர் தன்மை ஆகிய தலைப்புகள் சீரும் செம்மையுமாக உமாபதி சிவாச்சாரியாரின் உள்ளத்தைத் திறந்து காட்டும் நிலையில் உருவாக்கப் பெற்றது இப்பகுதி. பசு, பதி, பாச இயல்பு களும், ஆணவம், திருவருள், ஆன்மாக்களை அருள்கொள்ளும் அருள்இயல்பும் இன்னோரன்ன பிறவற்றையும் விளக்கிச் செல்கின்றது இப்பிரிவு.

Koviloor Digital Library

அடுத்து வரும் "கொடிக்கவித் தெளிவு" என்பதும் நம் சிந்தனையை தொடும் நிலையில் உருவாக்கப்பெற்றது என்று கூறினால் அது மிகையல்ல. "உமாபதி வந்தாலன்றிக் கொடி ஏறாது" என்ற அசரீரிக்குக் கேற்பக் கொடி ஏற்றச் சென்ற உமாபதி நடராஜர் திருக்கோவிலின் கொடிக் கம்பத்தின் முன்னால் நின்று பாடிய "கொடிக்கவி" என்ற அருள் நூலின் உரைநடை ஆக்கமே "கொடிக்கவித் தெளிவு". சில சித்தாந்தச் செம்மையான தமிழில் வாசகர் மனதில் சென்று உறையும் படி ஆக்கப்பட்டது இது. ஒவ்வொரு விளக்கமும் உணர்ந்து ஓதி நிற்பதற்கு உரிய நிலையில் உள்ளமை நூலைப் படிக்கும்போது உணர முடிகின்றது.

பேராசிரியர் வெள்ளைவாரணம் சிறந்த சிவபக்தர். செம்மையான சிந்தனையாளர். சித்தாந்த கருத்துக்களில் தோய்ந்து நிற்பவர். அவருடைய தெளிவான கருத்துக்கள். தெளிவு, தெளிவு என வரும் தலைப்புக்களில் காணக்கிடக் கின்றன. சித்தாந்த நூல்களை உணர்வதிலும் உணர்ந்தவற்றை உரைப்பதிலும், உரைப்பவற்றை உணரச்செய்வதிலும் அவருடைய திறன் பாராட்டுக்குறியது. பண்பட்ட அவர் உள்ளமும் பரந்து பட்ட அவரது சித்தாந்த அறிவும் நூல் முழுவதும் காணக்கிடக்கின்றன. முந்நூல் தெளிவு என்ற இந்நூல் சாதாரண மக்களும் தெளிவு பெறும் நிலையில் அமைந்துள்ளது.

இத்தகைய சிறந்த ஒரு நூலை எழுதி உமாபதி சிவாச்சாரி யாரின் உள்ளத்தை படம்பிடித்து காட்டும் பேராசிரியர் வெள்ளைவாராணம் அவர்கள் நீடுழி வாழ்ந்து நூல்கள் பல கொணரத் தில்லைக்கூத்தனின் திருவடிகளை இறைஞ்சி நிற்கின்றேன்.

155, மாரியப்பா நகர் - 608 002.
8.07.2005

ச. அகத்தியலிங்கம்
மேனாள் துணைவேந்தர்
தஞ்சை பல்கலைக்கழகம்

Koviloor Digital Library

பதிப்புரை

தில்லை மாநகரில் 18.1.1998ல் திருவாவடுதுறை சைவ சித்தாந்தப் பயிற்சி மையம் (1995-1997 தொகுப்பு விடுபட்ட நிலையில்) மீண்டும் அடியேனை அமைப்பாளனாகக் கொண்டு துவங்கியது. அற்றைய நாளில் தருமை ஆதீனம் சார்பில் இல்லங்கள் தோறும் மாதம் ஒரு முறை திருமுறை முற்றோதல் களும், சேக்கிழார் மன்றத்தில் தில்லை தமிழ் மன்றம் சார்பில் நடக்கும் மாதம் ஒருநாள் பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், திருவாசகம் சொற்பொழிவிற்கு பேராசிரியர் தா.ம. வெள்ளைவாரணம் அவர்கள் வந்து சிதம்பரம் நகர சைவ மக்களை நெறிப்படுத்தி வந்தார்கள். இக் கூட்டங்களுக்கு தவறாமல் செல்லும் என் மனதில் அடித்தளத்தில் ஐயா. தா.ம.வெ. அவர்களைக் கொண்டு நம் மையத்திலும் சிந்தாந்தமும் சிந்திக்கப்பட்டால் பலர் பயனடைய வாய்ப்புள்ளதே என்ற ஏக்கம் நிலை பெற்றிருந்தது.

ஐயா அவர்கள் 2001-2003 தொகுப்பில் நம் குருமகா சந்நிதானத்தின் உத்தரவின்படி சீர்காழி மையத்தில் தனது 75வது அகவையில் மாணவராக தன்னை இணைத்துக்கொண்டு பயிற்சி பெற்று வருகிறார்கள் என்ற செய்தி எனக்கு இனிக்கச் செய்தது. காரணம் அவர்களை நம் மையைப் பேராசிரியராக 2004ல் பெற்றுவிடலாம் என்ற தன் முனைப்பு.

21.7.2002ல் சிதம்பரம், சீர்காழி, காட்டுமன்னார்குடி கிளை மையங்களின் கூட்டு சிறப்புக்கூட்டம் சிதம்பரத்தில் இயக்குநர் பொழிவாற்ற ஏற்பாடு. தலைமையுரையில் சீர்காழி பாலசுப்ரமணிய முதலியார் பேரா. தா.ம. வெ. அவர்கட்கு பேராசிரியர் பதவியளிக்க இயக்கம் வளரும் என இயக்குநருக்கு வேண்டுகோள் வைத்தார். இயக்குநரும் உறுதியளிக்க, அக்கூட்ட நன்றி பொழிவை ஐயா தா.ம.வெ. வை செய்யச் செய்து. ஐயாபொழிவினை இயக்குநரையும் செவிமடுக்க வைக்கும்

Koviloor Digital Library

உத்தியை என் உள்ளத்தில் விதைத்து தில்லைக்கூத்தன் வெற்றி பெற்றான்.

ஐயா மாணவராக இருக்கும்போதே 16.1.2002ல் திருசிரபுறம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைவுப் பரிசும், 8.2.2003ல் திருவாவடுதுறை ஆதீனப்புலவர் விருதும் அளித்து குருமகாசன்னிதானம் வாழ்த்தியருளினார்கள். 8.2.2003 ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி சன்னதியில் ஆதீனப் புலவர் முன்னிலை யில் இயக்குநரிடம் கோரிக்கை வைத்து 2004க்கு ஐயா தா.ம.வெ. யை. சிதம்பரம் மைய பேராசிரியாராக பெற்றது குருவருளும் திருவருளுமாகும்.

29.2.2004 தொடங்கி ஆறு ஆண்டுகளுக்குமேல் ஐயா தா.ம.வெ. அவர்கள் சிதம்பரம் கிளையை வழி நடத்தி வந்துள்ளார்கள். ஐயாவைக்கொண்டு மெய்க்கண்ட சாத்திரம் 14க்கும் உரை செய்து வெளியிடும் எண்ணத்தை கூத்தன் என் மனதில் விதைத்தான். முதல் முயற்சியாக 22, 23, 24.7.205ல் தில்லையில் நடக்க இருந்த சென்னை சைவ சித்தாந்த பெருமன்ற நூற்றாண்டு விழாவில் இவ்வெண்ணம் செயல்பட வாய்ப்பாக அமைந்தது. மெய்கண்ட நூல்கள் 14ல் தில்லையில் 8 நூல்கள் விளைந்து உமாபதி சிவாசாரியாரின் "அட்டகம்" ஆயிற்று. இதற்கு தெளிவுரை எழுதி வாங்கி விழா வெளியீடாகச் கொண்டுவர முயற்சித்தேன். ஐயா அவர்கள் கால அவகாசம் இன்மையால் சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி மூன்று நூல்களுக்கும் தெளிவு செய்து "முந்நூல் தெளிவு" எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். அது 22.7.2005ல் பெருமன்ற நூற்றாண்டு விழாவில் வெளியிடப்பெற்றது. ஆறுமுக நாவலர் அறக்கட்டளை க. சுவாமிநாதன் தன் செலவில் பெருமன்றத்திற் காக வெளியிட்டு மகிழ்ந்தார்கள். ஐயாவும் ஓர் நிகழ்விற்கு தலைமைப் பொறுப்பேற்று திறம்பட நடத்தி விழா சிறக்கச் செய்தார்கள்.

அந்த அறிய நூலான 'முந்நூல் தெளிவே' இன்று மீள் பதிப்பாக தங்கள் கையில் தவழ்கிறது. இந்நிலையில் அனுமதியளித்த பெருமன்றத்திற்கு நன்றி.

Koviloor Digital Library

இவ்வாண்டு ஐயாவின் 'அட்டகத் தெளிவு' வெளியிட ஐயாவின் இசைவு பெற்று காலவரையறை செய்தோம். ஆனால் நம் தவக்குறைவினால் அது நிகழா நினைவானது. இடையில் வகுப்பு மாணவர் நலம் கருதி 'உண்மை நெறி விளக்கம்' தெளிவுரை செய்து அது 23.8.2008ல் வெளியிட்ட "ஆறாறு தத்துவம் ஏது?" என்ற ஐயாவின் நூலில் இடம் பெற்றது. ஆக அட்டகத்தில் எட்டு நூல்களில் நான்கிற்கு ஐயா உரை உள்ளது.

மற்ற நூல்களான வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடு தூது, சங்கற்ப நிராகரணம் முழு உரை ஐயா செய்ய இயலாமற் போயிற்று. ஆனால் வகுப்பரை குறிப்புகள் இவற்றிற்கு ஐயா எழுத நம்கிளை மையம் அதனை 1.1.2005ல் வெளியிட்டுள்ளது. அதனை மேலும் விரிவாகச் செய்து 6.9.2009ல் ஐயா செய்த "மெய்கண்ட சாத்திரங்கள் 14 - ஓர் அறிமுகம்'' என்ற நூலில் இணைத்து அதுவும் நூலாக வந்துள்ளது.

எனவே "முந்நூல் தெளிவு" என்ற ஐயா சூட்டிய பெயரை இந்நூல் தாங்கி வந்தாலும் நான்கவதாக ''உண்மை நெறி விளக்கம்'' முழுமையான தெளிவுரையும் மற்ற நான்கு நூல்களுக்கு ஐயாவால் செய்யப்பட்ட விரிவான குறிப்புரைகளும் சேர்த்து சித்தாந்த அட்டகமாகிய 8 நூல்களின் செய்திகளைத் தாங்கி இந்நூல் வெளியிடப்படுகிறது.

சித்தாந்தச் சைவர்கள் இந்நூலை ஏற்றுப் போற்ற அன்பு வேண்டுகோள்

சிதம்பரம் - 608 001.
4.7.2010

சீனு. அருணாசலம்
அமைப்பாளர்

Koviloor Digital Library

பொருளடக்கம்

சிவப்பிரகாசம்	1
திருவருட்பயன்	78
கொடிக்கவி	102
போற்றி பஃறொடை	111
வினாவெண்பா	121
நெஞ்சுவிடு தூது	123
சங்கற்ப நிராகரணம்	126

Koviloor Digital Library

சிவப்பிரகாசத் தெளிவு

காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும் ஆனை கழல் நாளும் மறவாமல்
அளி ஆளும் மலர்தூவும் அடியார்கள் உளமாற
வெளி ஆகும் வலிதாய வினைகூட நினையாவே.

மூத்த பிள்ளையாரின் திருவடிகள், இச்சா சத்தி, கிரியா சத்திகளின் வடிவாக இருப்பவை. அந்தத் திருவடிகளை வழிபடுகிற அடியார்களின் உள்ளம் ஞானாகாசமாகும். எனவே அந்த அடியார் களை வினை தாக்கமாட்டா.

பாயிரம்

கூத்தப் பெருமான் துதி

ஓங்குஒளியாய் அருள் ஞான மூர்த்தி ஆகி
    உலகம்எலாம் அளித்து அருளும் உமையம்மை காணத்
தேம் கமழும் மலர் இதழி திங்கள் கங்கை
    திகழ் அரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கல் அரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
    நின்று இமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
    புந்தியினும் உற வணங்கிப் போற்றல் செய்வாம். 1

சிவன் பேரொளியாயும் ஞான வடிவாயும் திகழ்கிறான். அவன், தேவர்கள் துதிக்கவும் உமை காணவும் சிற்றம்பலத்தில் கூத்தாடுகிறான். அதாவது உயிர்களின் பிறவித் தொடர்ச்சி நீங்கக் கூத்தாடுகிறான். அக் கூத்தப் பெருமானின் திருவடிகள் (உமாபதி) சிவமாகிய அடியேனது தலையின் மேலும் அறிவின் உள்ளும் நிலைத்திருக்கவேண்டி வணங்கித் துதிக்கிறேன்.

Koviloor Digital Library

சிவகாமி அம்மை துதி

பரந்த பரா பரை, ஆதி பரனது இச்சை
பரஞானம் கிரியை, பரபோக ரூபம்
தருமு கருணை உரு ஆகி, விசுத்தா சுத்தத்
தனுகரண புவன போகங்கள் தாங்க
விரிந்த உபாதானங்கள் மேவி, ஒன்றாய்,
விமலமாய், ஐந்தொழிற்கும் வித்தாய், ஞாலத்து
அரந்தை கெட, மணி மன்றுள் ஆடல் காணும்
அன்னை அருள் பாதமலர் சென்னி வைப்பாம். 2

பராசத்தியாகிய ஒருத்தியே பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்று ஐந்து நிலைகளில் பேசப்படுகிறாள். அவளே ஆன்மாக்களுக்குப் பரபோகத்தையும் ரூபத்தையும் தருகிற கருணை வடிவினள், சுத்த, அசுத்த மாயைகளின் தனுவாதி களைத் தாங்கிக் கொள்கிற விந்து, மோகினி, மான் என்னும் முதல் காரணங்களில் கூட இருப்பவள்.

இவள் இப்படிப் பலவகைப்பட்டாலும் பொருட்டன் மையால் ஒருத்தியே, மலம் அற்றவள். இந்தப் பராசத்தியே, சிற்றம்பலத்தில் கூத்தாடுகிற கூத்தனின் கூத்தைக் காண்கிறாள். அதாவது ஆன்மாக்களின் பிறவித் துயர் நீங்குவதற்காகக் காண்கிறாள். அவளே சிவகாமி அம்மை. அந்த அன்னையின் திருவடி மலர்களைத் தலை மேல் வைத்துத் துதிக்கிறேன்.

(பராசத்திக்கு அடுத்த ஆதி சத்தி என்பவளே தீரோதான சத்தி ஆவாள்)

மூத்த பிள்ளையார் துதி

நலம் தர நூல் இரும் தமிழின் செய்யுள் குற்றம்
நண்ணாமை, இடையூறு நலியாமை கருதி
இலங்கும் இரு குழை அருகு பொருதுவரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்த கயற்கண்ணி யொடும் இறைவன்
கலந்து அருள வரும் ஆனை முகத்தான் மும்மைக்
கடம் அருவி எனநிலவும் கணபதியின் அருளால்

Koviloor Digital Library

அலர்ந்து மது கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு அடியிணைகள் நினைதல் செய்வாம். 3

சிவப்பிரகாசம் என்ற இந்நூலைக் கற்பவர்க்கு நலத்தைத் தரவும், தமிழ்ச் செய்யுள் குற்றமாகக் கூறப்படுபவை இந்நூலில் வாராமல் இருக்கவும், கற்கும் போது இடையூறு தோன்றி வருத்தாமல் இருக்கவும் வேண்டி, ஆனைமுகக் கணபதியின் திருவடி மலர்களைத் தியானிக்கிறேன்.

முருகப் பெருமான் துதி

வளம் நிலவு குலம் அமரர் அதிபதியாய் நீல
மயில் ஏறி வரும் ஈசன் அருள்ஞான மதலை
அளவில்பல கலை அங்கம்ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஒத்து உரைக்கும் அண்ணல்விறல் எண்ணாது
உளம் மருவு சூரம் உரம் எனது இடும்பை ஓங்கல்
ஒன்று இரண்டு கூறுபட ஒளிதிகழ்வேல் உகந்த
களபம் மலி குறமகள் தன் மணிமுலைகள் கலந்த
கந்தன் மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம். 4

தேவர்க்குச் சேனாதிபதி,மயிலேறி வரும் சிவகுமாரன், அகத்தியனுக்கு வேதப் பொருளை விளங்க உரைத்த ஸ்கந்த குரு, சூரனின் மார்பும், அடியேனது பிறவித் துயரும், கிரவுஞ்ச மலையும் ஒவ்வொன்றும் இரு கூறாகும்படிப் பிளந்த வேலன், வள்ளியை மணந்த மணவாளன். இத்தகைய முருகப் பெருமானின் திருவடிகளைத் தியானிக்கிறேன்.

சந்தான குரவர் மரபு

தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திரு நந்தி அவர் கணத்தோர் செல்வர் பாரில்
பாவிய சத்திய ஞான தரிசினிகள் அடிசேர்,
பரஞ்சோதி மாமுனிகள் பதியாவெண்ணெய
மேவியு சீர் மெய்கண்ட திறலார், மாறா
விரவு புகழ் அருணந்தி விறலார் செல்வத்

Koviloor Digital Library

தாவில் அருள் மறைஞான சம்பந்தர் இவர் இச்
சந்தானத்து எமை ஆளும் தன்மையோரே. 5

கைலையைக் காக்கும் திருநந்தி தேவரும், அவரது மாணவர்களில் ஒருவரான சனற்குமாரரும், சத்தியஞான தரிசினியும், பரஞ்சோதி முனிவரும், வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரும், அருணந்தி தேவரும், மறைஞான சம்பந்தரும் ஆகிய இவர்கள் தமது சந்தான பரம்பரையில் அடியேனையும் ஆளாகப் பணிகொள்வர். (5)

(திருநந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞான தரிசினி, பரஞ்சோதி முனிவர் என்ற நால்வரும் அகச்சந்தான குரவர்கள், மெய் கண்டார், அருணந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்ற நால்வரும் புறச்சந்தான குரவர்கள்)

மறைஞான சம்பந்தர் துதி

பார்திகழ வளர் சாம வேதம் மல்கப்
பராசர மா முனி மரபு பயில ஞானச்
சார்புதர வந்து அருளிஎம்மை ஆண்ட
சைவ சிகா மணி மருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில் புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடும் கொடியின் கரம் தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலர் அடிகள் சென்னி வைப்பாம். 6

ஆன்மாக்கள் ஞானம் பெறவும், சாமவேதம் தழைக்கவும், பராசரமுனிவரின் கோத்திரம் நீண்டு வளரவும், எம்போன் றார்க்கு ஞானநெறியை வழங்கவும் வேண்டி இவ்வுலகில் அவதரித்து அடியேனை ஆட்கொண்ட சைவ சிகாமணியும், மருதூரில் வாழ்ந்த தலைவரும், திருப்பெண்ணாகடத்தில் அவதரித்தவரும், மறைஞான சம்பந்தரும், அடியேனது ஞானத் தந்தையும் ஆனவரது திருவடிகளைத் தலைமேல் சூடி வழிபடுகிறேன்.

Koviloor Digital Library

(மறைஞான சம்பந்தர் பெண்ணாகடத்தில் பிறந்தவர், சாமவேதப் பிரிவினர். பராசர கோத்திரத்தார். அருணந்திசிவத் திடம் தீட்சை பெற்ற சைவ சிகாமணி. மருதூரில் சிலகாலம் வாழ்ந்தவர். உமாபதி சிவத்துக்கு ஞானத்தந்தை)

இந்நூல் நுதலிய பொருள்

புறச் சமயத் தவர்க்கு இருளாய், அகச்சமயத்து ஒளியாய்ப்,
புகல் அளவைக்கு அளவாகிப், பொற்பணிபோல் அபேதப்
பிறப்பு இலதாய், இருள் வெளி போல் பேதமும், சொற்பொருள் போல
பேதாபேதமும் இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடல் உயிர்கண் அருக்கன்
அறிவு ஒளி போல், பிறிவு அரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன், இங்குத் தெரிக்கல் உற்றாம். 7

(1) புறச் சமயத்தார்க்கு அறியப் படாததாய் (2) அகச் சமயத்தார்க்கு அறியப்படுவதாய், (3) காண்டல் முதலிய அளவைகளால் அளக்கப்படுவதாய், (4) பொன்னும் அணிகளும் போலும் என்ற அபேதவாதமும் இன்றாய், இருளும் வெளியும் போலும் என்ற பேதவாதமும் இன்றாய், சொல்லும் பொருளும் என்னும் பேதா பேதவாதமும் இன்றாய், (5) வேதாகமங்கள் சொன்ன சரியை முதலிய அறங்களின் விளைவாய், (6) உடலும் உயிரும் போலக் கலப்பால் ஒன்றாயும், கண்ணும் சூரியனும் போலப் பொருட்டன் மையால் வேறாயும், ஆன்ம அறிவும் கண் ஒளியும் போல உடனாயும் விளங்கும் அத்துவிதச் சிறப்பு உடையதாய்த் திகழ்கிற வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த உண்மை சிவப்பிரகாசம் ஆகிய நூலில் சொல்லப்படுகிறது.

தீக்கையின் வகைகள்

மூவகை ஆர்உயிர் வர்க்கம் மலத்தார் கன்மம்
மூல மலத்தார் மூன்றும் உடையார் அன்றே
தீவகமாம் எனஉருவாய் வந்து, நாதன்
திரு நோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்,

Koviloor Digital Library

பாவனையால், மிகு நூலால், யோகப் பண்பால்,
பரவி வரும் அவுத்திரியால், பாச நாசம்
மேவ அருள் உதவும் அவுத்திரி இரண்டு திறனாம்;
வியன் கிரியை ஞானம் என விளம்பு மாறே. 8

விஞ்ஞானகலர் ஆன்மாக்கள் ஆணவ மலம் ஒன்று மட்டும் உடையவர், பிரளயா கலர் ஆன்மாக்கள் ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலம் மட்டும் உடையவர், சகலர் ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலமும் உடையவர்கள்.

(இவர்களில் விஞ்ஞானகலர்க்கு இறைவன் நிராதாரமாய் உள்நின்று உணர்த்தி அருள்வான். பிரளயாகலர்க்கு இறைவன் மான்மழுவும் நாற்றோளும் முக்கண்ணும் நீலகண்டமும் உடைய வடிவில் முன்நின்று உணர்த்தி அருள்வான்)

சகலர்க்கு மட்டும் இறைவன் பார்வை எனக் குருநாதர் வடிவில் வந்து சட்சு தீக்கை, பரிச தீக்கை, வாசக தீக்கை, மானத தீக்கை, சாத்திர தீக்கை, யோகதீக்கை என்பவைகளால் மலநீக்கம் செய்வான். சட்சு தீக்கை முதலிய ஆறினையும் அங்கமாகக் கொண்டது ஔத்திரி தீக்கை. இதனாலும் குருவின் மூலமாக இறைவன் மலநீக்கம் செய்வான். ஓமத்துடன் செய்யப்படுவது ஔத்திரி எனப்படும். இதுவும் கிரியாவதி ஞானாவதி என இருவகைப்படும்.

(தீ-ஞானத்தைக் கொடுத்தல், க்ஷை-மலத்தை குறைத்தல், எனவே தீக்கை என்பது ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் குறைத்தல் என்று பொருள் படும். மீன் தன் முட்டையைக் கண்ணால் பார்த்துக் குஞ்சு பொரியச் செய்வது போல ஆசான் சீடனைக் கண்ணால் பார்ப்பதாலேயே தீட்சையளிப்பது சட்சுதீட்சை: கோழி தன் முட்டையை மெய்யால் தீண்டி அடைகாத்துக் குஞ்சு பொரியச் செய்வது போல ஆசான் சீடனைக் கையால் (அல்லது திருவடியால்) தொட்டுத் தீக்கை அளிப்பது. பரிச தீக்கை. ஆசான் சீடனுக்கு மந்திரத்தை உபதேசித்துத் தீக்கையளிப்பது வாசக தீக்கை: ஆமை தன்

Koviloor Digital Library

முட்டையை மனத்தால் நினைந்த அளவில் குஞ்சு பொரியச் செய்வது போல குருவும் தன் சீடனுக்கு நினைப்பு மாத்திரத்தால் தீக்கை அளிப்பது மானச தீக்கை. சித்தாந்த சாத்திரங்களை உபதேசித்து ஆசான் சீடனுக்குத் தீக்கை அளிப்பது சாத்திர தீக்கை, ஆசான் மாணவனுக்கு யோகத்தின் அட்டாங்கங்களை விளக்கி அதில் பயிற்சியும் அளித்துத் தீக்கையளிப்பது யோக தீக்கை. மேற்கூறிய ஆறுவகை தீக்கைகளைக் குண்டம், மண்டலமிட்டு ஓமம் வளர்த்துச் செய்வது கிரியாவதி. மேற்படி ஆறு தீட்சைகளை மனத்துள்ளே குண்டம், மண்டலம் இட்டு ஓமம் வளர்த்துத் தீக்கை செய்வது ஞானாவதி)

விரும்பிய மந்திர அதிகாரம், அர்ச்சனா அதிகாரம்,
மேவும் யோக அதிகாரம், எனச் சமயம், விசேடம்,
வரும் பொருவுஇல் நிருவாணம், மந்திரங்கள், பதங்கள்
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்,
இரங்கு அடைவில் தொகை பதினொன்று, எண்பத்து ஒன்று
ஐம்பத்து ஒன்று
இருநூற்றோடு இருபத்து நாலு ஆறாறு ஐந்தில்
பரந்தநெறி அறுவகையும் ஒருவி நினைவு அரிதாம்
பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே. 9

சமயதீக்கை பெற்றவர்களுக்கு மந்திரம் உச்சரிக்கும் உரிமை உண்டு. விசேட தீக்கை பெற்றவர்களுக்கு மந்திரம் உச்சரிக்கும் உரிமை, சிவபூசை செய்யும் உரிமை, யோகம் செய்யும் உரிமை ஆகிய மூன்று உரிமைகளும் உண்டு. பதினொரு மந்திரம் எண்பத்தொரு பதம், ஐம்பத்தொரு வன்னம், இருநூற்று இருபத் நான்கு புவனம், முப்பத்தாறு தத்துவம், ஐந்து கலை என்னும் ஆறு அத்துவாக்களையும் சுத்தி செய்து ஆன்மாவைச் சாயுச்சியத்தில் சேர்க்கும் தீக்கை நிர்வாண தீக்கை ஆகும்.

(நிர்வாண தீக்கை சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என இருவகைப் படும். இத்தீக்கை, செய்த அப்பொழுதே முத்தியைத் தருவது சத்தியோ நிர்வாணமாகும், தீக்கை செய்த பின்னும் உலகில் வாழ்ந்து பிராரர்த்த தேனம் நீங்கியபின் முத்தியைத் தருவது அசத்தியோ நிர்வாணமாகும்).

Koviloor Digital Library

கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும் உண்மைச்
சரியை கிரியாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்
மருவியிடும் உயர் ஞானம் இரண்டாம் மாறா
மலம் அகல அகலாத மன்னு போதத்
திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகு அறியச் செப்பும் நூலே. 10

இங்கே கிரியைகளாக எடுத்துரைத்த யாவும் பின்பு ஞானத்தைப் பெறுதற்கான வழிகளே ஆகும். சரியை, கிரியை, யோகம் என்னும் நெறிகளில் நின்றவர்க்கு முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்திகள் கிட்டும். இம் மூன்றிற்கும் மேலானது ஞான நெறி. அது இரண்டு வகைப் படும், அவற்றுள் ஒன்று, மலம் நீங்கும் பொருட்டு ஆன்மாக்களை விட்டு நீங்காத திருவருள் ஞானமாகும். மற்றொன்று அத்திருவருள் ஞானத்தைத் தெளிவாக ஓதுகிற சிவாகமங்கள் ஆகும்.

(ஞான நெறியில் நின்றவர்க்குச் சாயுச்சியம் என்னும் பரமுத்தி கிட்டும்)

நூல் வந்த வரலாறு

தெரித்தகுரு முதல்வர், உயர் சிவஞான போதம்
செப்பினர்; பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி
விரித்தனர்; மற்று அவர்கள் திருவடிகள் போற்றி
விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கிக்,
கருத்தில் உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்து, பொது உண்மை எனக்கருதி யானும்
அருத்தி மிக உரைப்பன்; வளர் விருத்த நூறு
மாசு இல் சிப்பிரகாசம் ஆகும் அன்றே. 11

"முதல் குருவான மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தை அருளினார். (இது முதல் நூல்) பிறகு அவரது மாணாக்கரான

Koviloor Digital Library

அருணந்திதேவர் சிவஞான சித்தியாரை விரித்துரைத்தார். (இது வழி நூல்). இவ்விருவர் செய்த நூல்களையும் ஆய்ந்து அடியேனது அறிவில் உறையும் திருவருளையும் இறைவனளித்த சிவாகமங்களையும் கூட்டி நூறு விருத்தப் பாக்களால் சிவப் பிரகாசம் என்னும் பெயரில் சார்பு நூலைச் செய்கிறேன். இது பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என இரு அதிகாரங் களாகப் பகுக்கப்படும்". (இவ்வாறு உமாபதி சிவம் கூறுகிறார்).

அவை அடக்கம்

தொன்மையவாம் எனும் எவையும் நன்று ஆகா; இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீது ஆகா; துணிந்த
நன்மையினார் நலம்கொள் மணிபொதியும் அதன் களங்கம்
நவை ஆகாது; என உண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினார் பழைமை அழகு ஆராய்ந்து தரிப்பர்;
தவறு நலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந்து அறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கு என ஒன்று இலரே. 12

பழைமையானவை என்ற எல்லா நூல்களும் நல்லன ஆகா, தற்காலத்தில் தோன்றியவை என்ற எல்லா நூல்களும் தீயனவாகா. உத்தமர்கள் இரத்தினத்தில் உள்ள களங்கத்தைப் பெரிதாகப் பாராட்டாமல் அம்மணியில் உளதான சிறப்பை அறிந்து விரும்புவார்கள். அதுபோல இந்நூலில் உள்ள குற்றங் களைப் பெரிதாகக் கருதாமல் இதில் உள்ள சிறப்பை அறிந்து உத்தமர்கள் விரும்புவர்.

நடு நிலையாளர் மணியின் பழமைச் சிறப்பறிந்து சூடுவார்கள். அதுபோல முந்து நூல்களின் பழமைக் கருத்துக்கள் இந்நூலில் இருப்பதால் இதனைக் கொண்டாடுவர்.

ஒரு பொருளின் குற்றம், குணம் என்பவற்றின் மிகுதி அறியாதவர், அப்பொருளைப் பலர் பாராட்டினால் தாமும் பாராட்டுவர், பிறர் இகழ்ந்தால் தாமும் இகழ்வர். அப்படிப் பட்டவர் தமக்கென ஸ்திரபுத்தி இல்லாதவர்கள், அவர்கள்

Koviloor Digital Library

இந்நூலை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் எனக்கு எவ்வித சலனமும் உண்டாகாது.

பொது அதிகாரம் - முதல் நூற்பா

பதி இலக்கணம்

பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல், பதி பரமே, அதுதான்
நிலவும் அரு உரு இன்றிக், குணம் குறிகள் இன்றி,
நின்மலமாய், ஏகமாய், நித்தம் ஆகி,
அலகில் உயிர்க்கு உணவு ஆகி, அசலம் ஆகி,
அகண்டிதம் ஆய், ஆனந்த உருவாய் அன்றிச்
செலவு அரிதாய்ச், செல்கதியாய்ச், சிறிதாகி, பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர், தெளிந்து ளோரே. 13

வேதம், ஆகமம், கலை நூல்கள் யாவற்றுக்கும் உட்கருத்தானது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளைத் தெரிவிப்பதாகும்.

அவற்றுள் பதி என்பது (1) பசு பாசம் என்ற இரண்டிற்கும் மேலானது, (2) அருவமும் உருவமும் இல்லாதது, (3) உயிரின் முக்குணமில்லாதது, (4) அடையாளமும் இல்லாதது, (5) இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியது. (6) ஒரே பொருளானது, (7) என்றும் நிலைத்திருப்பது, (8) உயிர்களின் அறிவுக்கு அறிவாக இருப்பது (9) சலன மற்றது, (10) பிரிக்க முடியாத ஒரே வியாபகமானது (11) பேரின்ப வடிவானது, (12) நினைவுக்கு அரியது, (13) ஆன்மாக்கள் சென்று சேரும் முத்தி நிலையாக இருப்பது, (14) அணுவுக்கு அணுவாய் இருப்பது, (15) மகத்துக்கு மகத்தாய் இருப்பது, இதனை மெய்ஞ் ஞானத்தால் தெளிந்தவர் சிவம் என்பர். (இது பதியின் சொரூப இலக்கணம்)

நீடு பரா சத்தி நிகழ் இச்சா ஞானம்
நிறை கிரியை தர அதனை நிமலன் மேவி
நாடரிய கருணை திரு உருவம் ஆகி
நவின்று பல கலை விந்து ஆதி

Koviloor Digital Library

கூடும் ஒளி வளர் குடிலை மாயை மேவிக்
கொடு வினை கொள் தனுகரண புவன போகம்
பீடு பெற நிறுவி அவை ஒடுக்கும் மேனி
பிறங்கிய நிட்கள சகளப் பெற்றி ஆமே. 14

பராசத்தியானவள் இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்திகளை உண்டாக்க, அவற்றைச் சிவபெருமான் கூடிக் கருணையையே திருமேனியாகக் கொள்வான். பின்பு அத்திருமேனியோடு நாதம் விந்து முதலிய தத்துவங்களைப் பொருந்திய சுத்தமாயையைப் பொருந்தி நிற்பான்.

அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளில் வினையால் பெறுகிற தனு, கரண, புவன, போகங்களை உயிர்கள் பெறும் பொருட்டுப் படைப்பான். பின்பு தோன்றிய முறையிலேயே ஒடுக்குவான்.

இங்ஙனம் ஆக்கி, ஒடுக்கும் திருமேனி அருவம், உருவம், அருவுருவம் என்று மூவகைப்படும்.

(குடிலை-சுத்த மாயை. மாயை - அசுத்த மாயை, பிரகிருதி மாயை. நிட்களம் - அருவம். 'சகளம்'-உருவம். நிட்கள சகளம்-அருவுருவம்.) (இது பதியின்

ஈங்கு இது என்றது, கடந்த இயல்பினானும்,
ஈறு முதல் நடு ஒன்றும் இலாமையானும்,
ஓங்கி வளர் ஞானம் மயன் ஆதலானும்,
உண்மை பிறர்க்கு அறிவு அரிய ஒருமையானும்,
தாங்கு அரிய வெறுப்பினொடு விருப்பும் எல்லாம்
சார்வு அரிய முதல்வன் ஆதலானும்,
நீங்கல் அரும் உயிர்க்கு உயிராய் நிற்றலானும்,
நிறுத்திடுவன் நினைந்த உரு நிமலன் தானே. 15

(1) உயிரின் அறிவினால் சுட்டியறியும் நிலையைக் கடந்தவன் ஆகலானும். (2) முதலும் நடுவும் இறுதியும் (பிறப்பு, இருப்பு, இறப்பு) என்னும் எதுவும் இல்லாதவனாக லானும், (3) ஞானமே வடிவமாக இருப்பவன் ஆகலானும்,

Koviloor Digital Library

(4) அவனது இயல்பு பிறரால் அறிய முடியாத அதி சூக்குமச் சித்தாய் இருப்பதாலும், (5) விருப்பு வெறுப்புக்காளல் உண்டாகிற இன்ப துன்பங்கள் இல்லாதவன் ஆகலானும், (6) உயிர்க்கு உயிராய் நிற்பவன் ஆகலானும் முதல்வன் தான் நினைத்த வடிவத்தைத் தானே எடுத்துக்கொள்ளக் கூடியவன் ஆவான்.

(உயிரின் பக்குவத்துக்கு ஏற்ப வடிவம் கொள்வதாலும், அவன் வடிவம் கொள்ளா விட்டால் ஆன்மாக்கள் உய்யும் வழி அறியமாட்டா ஆகலானும், உருவம் கொள்வதால் தனக்கொரு பயினல்லாத தாலும் உருவம் கொள்வதால் இறைவனுக்கு எந்தக் குறையும் நேராது.)

உலகம் எலாம் ஒருவனொடு ஒருத்தி ஒன்று என்று
உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்; பின்னும்
மலம் அதனால் உளது ஆகும்; உருவம் மாறி
வருவது போவது செல்வது ஆதலானும்,
அலைவுஇல் அசேதனம் மாயை ஆதலானும்,
அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையானும்,
நிலவு தொழில் மருவி உரு நிற்றலானும்,
நின்று எவையும் அளித்திடுவன் நிமலன் தானே. 16

உலகமெல்லாம் அவன், அவள், அது என்ற பகுப்பு உடையதாய்த் தோன்றி, நின்று, தம் கால எல்லையில் ஒடுங்கும். ஆணவம் நீங்காமையால் அது பரிபாகம் ஆவதற்காக உலகம் மீண்டும் தோன்றும். உடம்பும் வினைக்கு ஈடாக மாறி மாறித் தோன்றியும், அழிந்தும் வருவதாலும், உயிர்கள் பூத சார சரீரத்தோடு சுவர்க்கத்துக்கும், யாதனா சரீரத்தோடு நரகத்துக்கும் சென்று வருவதாலும், மாயை சடம் ஆகையாலும், தமக்குரிய உடம்பைத்தாமே எடுத்துக் கொள்ளும் அறிவு உயிர்களுக்கு இல்லாமையாலும், உடம்பானது உயிரின் தொழிலையே பொருந்தி நிற்றலாலும், சிவனே இவற்றுக்கு நிமித்த காரணனாக நின்று உயிர்கள் உய்யும் பொருட்டு மாயையிலிருந்து தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவிப்பான்.

Koviloor Digital Library

(சுதந்தரமுள்ள ஒருவனாலன்றி உலகில் எதுவும் நடைபெற மாட்டா ஆகலான் இறைவன் ஒருவன் இன்றியமையாது வேண்டும்)

கந்தமலர் அயன் படைக்கும் உலகம் எலாம்;
கண்ணன் அளித்திடும்; அவை எம் கடவுள் தானே
அந்தம்உற அழித்திடுவன்; ஆதலாலே
அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து
வந்தமுறை, தன் தொழிலே மன்னுவிப்பன்; எல்லாம்
வருவிப்பன்; விகாரங்கள மருவான்; வானின்
முந்து இரவி எதிர் முளரி உறும் ஒன்று; அலர் வான்
முகையாம் ஒன்று; ஒன்று உலரும் முறைமையின் ஆமே. 17

உலகம் அனைத்தையும் நான்முகன் படைப்பான். திருமால் காப்பான். சிவன் (நான்முகனையும், திருமாலையும்) உலகம் முழுவதையும் அழிப்பான். ஆகவே நான்முகனும், திருமாலும் சிவனது அதிகாரத்தைப் பெற்றுத் தமது தொழிலைச் செய்யும் முறைமையால் சிவன் தனது தொழிலை அவரிடம் பொருத்துவான். எனவே சிவனே முத்தொழில் செய்பவன் ஆவான். ஆயினும் சிவன் விகார மடையான்.

அதாவது, சூரியனின் முன் தாமரையில் ஒன்று அன்றே விரியும்; மற்றொன்று (நாளைக்கு விரிவதற்காக இன்று) மொட்டாக அமையும். இன்னொன்று வாடும். தாமரை முத்தொழில் பட்டாலும் சூரியன் விகாரமடைவதில்லை. அதுபோலச் சிவனது சன்னிதியில் முத்தொழில் நடந்தாலும் சிவன் விகார மடையமாட்டான்.

ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றம் மிக அருள் புரிதல் ஏதுவாக
உரை செய்வர்; ஒடுக்கம் இளைப்பு ஒளித்தல்; மற்றைத்
தோற்றம் மலபாகம் வர; காத்தல் போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்தல் ஆகும்;
போற்றல் அரும் அருள் அருளே; அன்றி மற்றுப்
புகன்றவை அருள் ஒழியப் புகழ் ஒணாதே. 18

Koviloor Digital Library

சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்களைத் திருவருளின் திருவிளையாட்டு என்று பெரியோர்கள் கூறுவார்கள். மற்றும் உயிர்களைப் பிறவிக் கடலிலிருந்து மீட்டு நிலையான பேரருளை வழங்குவதற்காகவே ஐந்தொழில் நடைபெறுகின்றன என்றும் பெரியோர்கள் கூறுவார்கள்.

ஐந்தொழில்களில் ஒடுக்கம் (அழித்தல்) என்பது பிறப்பு இறப்பில் பட்டு வருந்துகிற உயிர்களுக்கு வினைப்பயனால் உண்டாகிற களைப்பைப் போக்குவதாகும். படைத்தல் என்பது ஆணவமலம் பரிபாகம் ஆவதற்காகச் செய்வதாகும். காத்தல் என்பது கன்மங்களைத் தொலைத்தற்காக வினைப் பயனை நுகர வைப்பதாகும். திரோதாயி (மறைப்பாற்றல்) என்பது வினைப் பயனை நுகரும் போது அவ்வினைப் பயனில் சுவை தோற்று வித்தலாகும். அருளல் என்பது திருவருளை வழங்குதலேயாகும். ஆழ்ந்து நோக்கும் போது அருளல் ஒழிந்த ஏனைய நான்கு தொழிலும் கூட அருளலே ஆகும். (அணுக்கள்-உயிர்கள்)

இரண்டாம் நூற்பா

பசு இலக்கணம்

எண் அரிதாய், நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி, அவை அவராய் அதனால்
அலகு இல் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்,
புண்ணிய பாவம் புரிந்து, போக்க வரவு உடைத்தாய்,
புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால், அருளால்
உள் நிலவும் ஒள அதனால் இருள் அகற்றி, பாதம்
உற்றிடும் நல் பசுவர்க்கம் என உரைப்பர், உணர்ந்தோரே. 19

உயிர் வர்க்கமானது, (1) எண்ணுதற்கு அரியது (எண்ணிக்கை இல்லாதது). (2) என்றும் நிலைத்திருப்பது, (3) இருள் என்ற ஆணவ மலத்தில் அனாதியே அழுந்தி இருப்பது. (4) தாம் செய்த வினைகளுக்கு ஈடான உடம்பைப் பெறுவது, (5) அவன், அவள், அது எனும் இருதிணையிலும் உடம்பு பெற்று

Koviloor Digital Library

அளவற்ற போகங்கள் நுகர்வது (6) போகநுகர்வால் மீண்டும் இருவினை புரிந்து சுவர்க்கம், நரகங்களில் போக்கு வரவு புரிவது, (7) ஆணவமலம் பரிபாகமான போது குருவருள் வாய்ந்து ஆன்ம அறிவிற்கு உள்ளே விளங்கும் ஞான ஒளியால் ஆணவமறைப்பு நீங்கப் பெறுவது. (8) அந்நிலையில் இறைவன் திருவடியை அடைவது என்று வேதாகமங்களை அறிந்தோர் கூறுவார்கள்.

பாச இலக்கணம்

அ. ஆணவம், திரோதாயி

ஏகமாய்த் தம் கால எல்லைகளின் மீளும்
 எண்ணரிய சத்தியதாய் இருள் ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பில்உறு களிம்பு ஏய்ந்து, நித்த
 மூலமலமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்,
 பாகமாம் வகை நின்று திரோதான சத்தி
 பண்ணுதலான், மலம் எனவும் பகர்வர்; அது, பரிந்து
நாகம் மா நதி மதியம் பொதி சடையான் அடிகள்
 நணுகும் வகை, கருணை மிக நயக்கும் தானே. 20

ஆணவ மலமானது (1) பொருளால் ஒன்றாய் இருப்பது, (2) ஆன்மாவுக்குப் பக்குவம் ஏற்படும்போது ஆன்மாவை விட்டு நீங்குவது, (3) அளவற்ற ஆற்றல்களை உடையது, (4) இருள் கூட, ஒளி என்னும் அளவுக்குப் பேரிருளாய் நின்று ஆன்மாவுக்கு அறியாமையை விளைவிப்பது, (5) செம்பில் களிம்பு அநாதியே பற்றி இருப்பது போல ஆன்மாவோடு அநாதியே பற்றியிருப்பது, (6) அதனால் மூலமலமாய் விளங்குவது, (7) உயிரின் வியாபக அறிவு முழுவதையும் மறைப்பது.

திரோதாயி என்னும் திரோதான சத்தியானது, (1) ஆணவமலம் பரிபாகம் ஆகும் வகையில் ஆர்வத்தோடு கூடி நின்று ஆன்மா மலபரிபாகம் அடையும் படி உபகாரம் செய்வது, (2) அதனால் (திரோதான) மலம் என்று உபசாரமாகக் கூறப்படுகிறது. (3) ஆன்மாவுக்கு மலபரிபாகம் வந்த பின் ஆன்மா சிவனது திருவடியைச் சேரும்படி கருணை காட்டுவது.

Koviloor Digital Library

ஆ. சுத்த மாயை

உன்னல் அரும் பரசிவன்தன் அருளாலே, நாதம்
உதிக்கும், மிகும் குடிலை தனில்; விந்து வரும் நாதம்
தன்னில்; அதின் ஒளி வளரும் சதாசிவர் ஆம்; அவரில்
தயங்க வரும் ஈசர்; வித்தைதனை அளிப்பர்; அதனால்
மன்னுவர் இவகை ஐவர்; வாய்மையினால் முன்னே
வந்திடும் என்று உரைசெய்த விந்து, வழா வகையே
முன் உதவும், சூக்கமாதி ஒரு நான்கும் என்று
மொழிந்திடுவர்; ஒருங்கலைகள் முதிர்ந்துளோரே. 21

சிவபெருமானின் சத்தி தொழிற்படுவதால் சுத்தமாயை ஆகிய குடிலையில் நாத தத்துவம் தோன்றும்; நாத தத்துவத்திலிருந்து விந்து தத்துவம் தோன்றும்; விந்து தத்துவத்திலிருந்து சதாசிவ தத்துவம் தோன்றும்; சதாசிவ தத்துவத்தில் மகேசுவர தத்துவம் தோன்றும்; மகேசுவர தத்துவத்தில் சுத்த வித்யா தத்துவம் தோன்றும். அந்தந்தத் தத்துவப் பெயரையே தம் பெயராகக் கொண்ட கர்த்தாக்கள் ஐவரும் அவ்வத் தத்துவத்தில் பொருந்தி இருப்பர்.

சத்தி தொழிற்படுவதால் சுத்தமாயையி லிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற வாக்குகள் தோன்றும்.

இ. அசுத்த மாயை

உரு ஆதி சதுர் விதமாய், ஒன்று ஒன்று ஒவ்வா
உண்மையதாய், நித்தமாய் ஒன்றாய், என்றும்
அரு ஆகி கன்மாந்தம் அணுக்கள் யார்க்கும்
ஆவாரம் ஆய், அசித்தாய், அசலம் ஆகி,
விரிவுஆய தன் செயலின் வியாபிஆய், எல்லாம்
விரிந்த வகை புரிந்து, அடைவின் மேவி அவை ஒடுங்க
வருகாலம் உயிர்கள் எல்லாம் மருவு இடமாய், மலமாய்,
மன்னியிடும் அரன் அருளால், மாயை தானே. 22

அசுத்த மாயையானது, (1) தனு, கரண, புவன, போகம் என்னும் நால்வகைப் பொருள்களாய் இருக்கும்; (2) ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாத தூல, சூக்குமத் தன்மையுடைய தத்துவங்களாய்

Koviloor Digital Library

இருக்கும்; (3) அனாதி நித்தமாய் இருக்கும்; (4) ஒரே பொருளாய் இருக்கும்; (5) அருவமாய் நிற்கும்; (6) கன்மம் நீங்கும் வரை உயிர்களுக்கு மயக்கம் செய்யும்; (7) தான் ஒரு சடப் பொருளாய் இருக்கும்; (8) சலனமற்றது; (9) தன்னிடமிருந்து விரிந்த காரியப் பொருள்கள் யாவற்றிலும் நிறைந்திருக்கும்; (10) தன் காரியப் பொருள்கள் விரியும்படி விரிந்து கொடுத்துப் பின்பு அவை ஒடுங்கும் போது ஆன்மாக்கள் யாவும் தங்கும் இடமாய் இருப்பது; (11) மும்மலங்களில் ஒரு மலமாக இருக்கும். இந்த அசுத்தமாயை சிவனது அருளான திரோதான சத்தியால் காரியப்படுத்தப்படும்.

என்னை இது எனின், உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன் அலதுஎனின், அசித்துச் சித்தின் இடத்து உதியா;
மன்னி உளதேல், முதல்வன் என் கொல் என்னின்
மாயை தான் அசத்து; உருவாய் மருவ மாட்டாது;
அன்னவனும் இது ஒழிய ஆக்க மாட்டான்;
அசத்தனாம் எனின், அதுவும் அவன் போல் நித்தம்;
முன்னவன் அவ் அசித்தை விரித்து எவையும் ஆக்கும்;
முதன்மை அது கொடுத்தது என மொழிந்திடாரே. 23

"மாயையிலிருந்தே தனு முதலிய உலகப் பொருள்கள் தோன்றும் என்று கூறுவது" என்னை என்றால், உலகத் தோற்றத்துக்கு மாயைதான் முதற்காரணம் அதனால் அவ்வாறு கூறப்பட்டது.

"இறைவன் தான் உலகத்துக்கு முதற் காரணம்; மாயை அன்று" என்று கூறினால், அசித்தாகிய உலகம் சித்தாகிய சிவத்திடத்தில் தோன்றமுடியாது. எனவே இறைவன் நிமித்த காரணனேயன்றி முதற்காரணம் ஆகான்.

இனி, "மாயையே உலகிற்கு முதற் காரணம் என்றால் பிரமம் ஏன்? தேவையில்லையே" என்றால், மாயை அசித்து ஆகையால், அது தானே காரியப்படாது. சித்தாகிய இறைவன் காரிய படுத்தற்கு வேண்டும். அவனும் கூட மாயையால் அன்றி வேறு எதனாலும் உலகத்தைத் தோற்றுவிக்கமாட்டான்.

Koviloor Digital Library

“மாயையைக் கொண்டே இறைவன் உலகைப் படைப்பான் என்றால், மாயை இல்லாமல் அவன் உலகைப் படைக்கச் சத்தியற்றவன் ஆவானே” என்றால், மாயையும் சிவனைப் போல் நித்தப் பொருளே; என்றாலும் மாயை அசித்து; இவன் சித்து. அசித்து சித்தால்தான் காரியப் படமுடியும் என்பதற்காக “சிவன் மாயயையால் உலகைப் படைக்கிறான்” என்று கூறப்பட்டது. எனவே அறிஞர்கள் மாயைக்கு முதன்மை தரமாட்டார்கள். சிவனுக்கே முதன்மை தருவர்.

படைத்தது ஒரு படி இன்றிப்பறவை, பசு, நரராய்
பண்ணியது ஏன்? முன்னை வினைப் பான்மை என்பர்;
அடுத்த வினை உளது ஆயின், இறைவன் ஏன் என்னில்,
அதேனம்; மற்றவை ஆவிக்க அமைத்தது ஆகும்;
எடுத்த வினை உரு உறுவது உயிரேல், தானே
இருவினைகக்குத் தக்க உடல் எய்தும் என்னில்,
சடத்திரளும் கர்த்தாவாய் அறிவு ஒன்று இல்லாத்
தன்மையனும் கூட ஒரு சங்கை இன்றே. 24

”கடவுளே உலகைப் படைக்கிறான் என்றால் எல்லா உயிர்களுக்கும் உடலை ஒரே விதமாகப் படைக்காமல் பறவை, பசு, மனிதன் முதலியனவாக வேறு வேறு விதமாகப் பண்ணியது ஏன்” என்றால்,

உடம்புகள் வேறுபடுவதற்குக் காரணம் உயிர்கள் முற்பிறப்பில் செய்த வினைப் பயனே என்று கூறுவர்.

”உடம்பு வேறுபடுவதற்குக் காரணம் வினைப் பயனே என்றால், அந்த வினையே தனு முதலிய பிரபஞ்சத்தைப் படைக்க லாமே? இறைவன் வேறு எதற்காக” என்றால்,

வினைகள் யாவும் அறிவற்ற சடம். எனவே வினைக்கு ஏற்ப உடம்புகளை ஆக்குவதற்கு அறிவுள்ள இறைவன் வேண்டும்.

இனி, “வினைகளுக்கு ஏற்ற உடல்களை உயிர்களே எடுத்துக் கொள்ளும்; இறைவன் வேறு எதற்காக” என்றால்,

Koviloor Digital Library

சடமாய் இருக்கிற மாயையும் தனக்கென ஒரு செயலும் அறிவும் இல்லாத ஆன்மாவும் வினைக்கு ஏற்ப இணைவதற்கு இறைவனைத்தவிர வேறு காரணம் இல்லை. எனவே வினைக்கேற்ற உடலை உயிர்களுக்குத் தருபவன் இறைவனே என்பது பெறப்படுகிறது.

அல்லல் மிக உயிர்க்கு, இவைதான் அணைத்தது, ஈசன்
அருவினைகள் அருந்துதற்கோ, வினையோ அன்றிச்
சொல்லி வரும் மாயையோ, அணுவை முந்தச்
சூழ்ந்தது எனும் உரை முதல் ஓர் தொடக்கு இலார்பால்
ஒல்லை வரும் எனின், உளதாம்; உயிர் உண்டாவே,
உளது மலம்; மலம் உளதாய் ஒழிந்த எல்லாம்
நெல்லின் முளை தவிடு உமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர்; இது சைவம் நிகழ்த்துமாறே. 25

"உயிர்களுக்கு உடம்பை இறைவன் கூட்டி வைத்ததானது, உயிர்கள் தத்தம் வினைப்பயனை நுகருவதற்கே ஆம் ஏன் பீராயின், வினையா அல்லது மாயையா உயிர்களை முதலில் சென்று பற்றியது" என்றால்,

உயிர் என்று உண்டோ, அன்றே ஆணவமும் உயிரைப் பற்றி உள்ளது. ஆணவம் அநாதியே பற்றியது போலவே, வினையும் மாயையும் பற்றி உள்ளன. அதாவது நெல்லுக்கு முளையும், தவிடும், உமியும் அநாதியே உள்ளது போலவே உயிர்க்கு மும்மலமும் அநாதியே உள்ளன. இவ்வாறு சைவாகமம் கூறும்.

முளை	கன்மம்	முதற்காரணம்
தவிடு	மாயை	துணைக்காரணம்
உமி	ஆணவம்	நிமித்த காரணம்
அரிசி	உயிர்	

Koviloor Digital Library

ஈ. தத்துவத் தோற்றமும் ஒடுக்கமும்

அருத்தி மிகும் கலை, காலம், நியதியுடன் வித்தை,
அராகம் இவை, அனந்தரால் மாயை தனில் ஆகும்;
உருத்திரரால் கலை அதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும்; அகங்காரம் புத்திததனில் உதிக்கும்;
தெரிந்த இது திரிவிதமாம் தைசத, வைகரி
திகழ்தரு பூதாதி என; திருந்திய சாத்துவிகம்
விரித்த குணம், மனம் புத்தி இந்திரியம் என்று
விளம்பிய சோத் திராதி முதல், விளங்கியிடும் விரிந்தே. 26

அனந்ததேவரால், அசுத்தமாயையிலிருந்து கலை, காலம், நியதி என்னும் தத்துவங்கள் தோன்றும். (பின்பு கலையிலிருந்து வித்தை, அராகம் என்ற தத்துவங்கள் தோன்றும்).

ஸ்ரீகண்ட ருத்திரரால் கலை தத்துவத்திலிருந்து மூலப்பிர கிருதியும், அதிலிருந்து குணதத்துவமும் தோன்றும். (குண தத்துவதிலிருந்து புத்தி தத்துவம் தோன்றும்). புத்தியில் அகங்கார தத்துவம் தோன்றும்.

இந்த அகங்கார தத்துவம் தைசத அகங்காரம், வைகாரி அகங்காரம், பூதாதி அகங்காரம் என மூன்று வகைப்படும். இவற்றுள் தைசத அகங்காரத்திலிருந்து சாத்துவித குணம் சம்பந்தப்பட்ட மனமும் ஞானேந்திரியத்தை இடமாகத் கொண்டு உயிர்க்கு அறிவை விளக்கும் (சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்நுவை ஆக்கிரணம் - முறையே ஞானந்திரியங்களுள் ஒன்றான கேட்டல் கருவி, தோல் கருவி, கண்ணில் இருக்கும் இந்திரியம், நாக்கில் இருக்கும் இந்திரியம், மணக்கும் கருவி) சோத்திராதிகளும் தோன்றும்.

மன்னிய கன்மேந்திரியம் ஆன இராசதம் சேர்
வாக்கு ஆதி வைகாரி மருவி வரும்; சத்தம்
தன்னை முதலாகிய தாமதம் மிகும் மாத்திரை பின்
தரும்; அதனில் வான், அநிலம், அனல், புனல், மண், சத்தம்.
முன் அதனில் வெளி ஆதி ஒன்று ஒன்று ஆகும்
முறையில் உறும்; இருமை அயன் முடிவாம் முன்னே

Koviloor Digital Library

உன்னு சதாசிவர் ஆதி அதிபதிகள், ஒடுக்கம்
உதித்த அடைவு என உரைப்பர், உணர்ந்துளோரே. 27

வைகாரி அகங்காரத்திலிருந்து இராசத குணம் சம்பந்தப்பட்ட கன்மேந்திரியமான (முறையே வாய், கை, கால், எருவாய், கருவாய்) வாக்கு, பாணி, பாதம், பாயு, உபத்தம் என்னும் ஐந்து தத்துவம் தோன்றும்.

பூதாதி அகங்காரத்திலிருந்து தாமச குணம் சம்பந்தப்பட்ட ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும்.

தன்மாத்திரையிலிருந்து வான் முதலிய பஞ்ச பூதங்கள் தோன்றும். ஆகாசம் முதலிய ஒவ்வொரு பூதத்திலும் சத்தம் முதலிய குணங்களில் ஒவ்வொன்று ஏற்றமாகப் பொருந்தி இருக்கும். (அதாவது ஆகாசத்தில் ஓசை ஒன்று மட்டும் பொருந்தியும், காற்றில் ஓசை, ஊறு என்ற இரண்டும் பொருந்தியும், நெருப்பில் ஓசை, ஊறு, ஒளி, என்ற மூன்றும் பொருந்தியும், நீரில் ஓசை, ஊறு, ஒளி சுவை என்ற நான்கும் பொருந்தியும், மண்ணில் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்று ஐந்தும் பொருந்தியும் நிற்கும்.)

ஆகாசம் முதல் ஐந்து பூதங்களுக்கும் முறையே சதாசிவர், மகேசர், உருத்திரர், மால், அயன் என்ற ஐவரும் அதிபதிகள் ஆவர்.

தத்துவங்களின் ஒடுக்கமானது தோன்றிய முறைப்படியே அமையும்.

உ. கன்மம்

நண்ணியிடும் உரு அதனுக்கு ஏது ஆகி
நானா போகங்கள் ஆய், நாசோற் பத்தி
பண்ணி வரும் ஆதலால், அநாதி ஆகிப்,
பல ஆகி, அணுக்கள் தொறும் படர்வது ஆகி,

Koviloor Digital Library

எண்ணி வரும் மன வாச கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய், மதி கதமாய், இருபயனாம் பாவ
புண்ணியமாய், புலர் காலை, மாயை மேவிப்
பொருந்தும்; இது கன்ம மலம் புகலும் ஆறே. 28

கன்மமாவது, (1) உயிர்கள் பெறுகிற உடம்புக்குக் காரணமாய் இருப்பது, (2) உடம்பால் நுகரப்படுகிற பல்வேறு வகையான போகங்களைத் தருவது, (3) அழிந்தும் தோன்றியும் தொடர்ந்து வருவதால் பிரவாக அநாதியாக இருப்பது, (4) பல்வேறு வகைப்படுவது, (5) ஒவ்வொரு உயிரொடும் பொருந்தி இருப்பது, (6) மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் செய்யப்படுவது, (7) புத்தி தத்துவத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டிருப்பது, (8) இன்பம் துன்பம் என்னும் இரு வகைப் பயனைத் தருகிற நல்வினை தீவினை என இரு வடிவமுள்ளது. (9) ஒடுக்க காலத்தில் மாயையில் பொருந்தியிருப்பது.

கன்ம நெறி திரி விதம்; நல்சாதி ஆயு போகம்
கடன் அது என வரும்; மூன்றும் உயிர் ஒன்றில் கலத்தல்
தொன்மையானது; ஊழ் அல்லது உணவு ஆகா; தானும்
தொடங்கு அடைவின் அடையாதே தோன்றும் மாறி;
தன்மை தரு தெய்விகம் முன்பவுதிகம் ஆன்மிகமாம்;
தகையில் உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்;
நன்மையொடு தீமை தரு சேதனனுக்கு இவண் ஊண்
நாடில் அதன் ஊழ் வினையாய் நணுகும் தானே. 29

கன்மமானது பலன் கொடுக்கிற முறைமையானது, மூன்று வகைப்படும். அவை நற்சாதியில் பிறத்தல், நீண்ட ஆயுள் பெறுதல், அனுபவங்களைப் பெறுதல் என்பனவாம். இந்த மூன்று பலனும் ஒரு ஆன்மாவில் பொருந்துவதானது பழவினை யின் காரணத்தால் தான் ஆகும். முன்வினைப் பயனான ஊழ்வினை அல்லாத வேறு எதுவும் ஆன்மாவுக்கு அனுபவமாக வாராது.

அவ்வினைப்பயனும் கூடச்செய்யப்பட்ட முறையாலே யன்றிப் (பக்குவ முதிர்ச்சிக்கு ஏற்ப) பின் செய்தன முன்னும், முன் செய்தன பின்னுமாக மாறியும் வரும்.

Koviloor Digital Library

வினைப்பயன் என்பது ஆதி தெய்வீகமான தெய்வத்தாலும், ஆதி பௌதிகமான சடப்பொருளாலும், ஆதி ஆத்மீகமான பிற உயிர்களாலும் வரும்.

நன்மை, தீமை செய்து வருகிற அறிவுள்ள உயிருக்கு இப்பிறப்பில் நுகர்வினை எப்படி அமையும் என்று கேட்டால், அவ்வுயிர் முற்பிறப்பில் செய்த வினையின் பயனாக வரும்.

(சஞ்சிதம் - பழவினை; பிராரர்த்தம் - நுகர்வினை)

மேலைக்கு வருவினை ஏது என்னில், அங்கண்
விருப்புவெறுப்பு என அறி; அவ்விளைவும் எல்லாம்
மூலத்த வினைப்பயல்வாம் என்னின், நாம் என்
முற்றி, அதன் பயன் உனக்கு முளைக்கும் என்பர்;
ஞாலத்து வினைகள் இரு திறன் ஆகும் புந்தி
நண்ணாதவினை, நணுகும்வினை எனை; ஒன்று இரண்டாய்
ஏலத்தான் இதம் அகிதம் ஆம்; இதனால் வழுவாது
எய்தியிடும், புண்ணிய பாவங்கள் என்றே. 30

"இப்பிறப்பில் வருவன எல்லாம் முற்பிறப்பில் செய்த ஊழ்வினையின் பயன் என்றால் இனி வரும் பிறவிக்கு ஏதுவாக வருகிற ஆகாமிய வினை உண்டாவது எப்படி" என்று கேட்டால், முந்திய வினைப் பயனை நுகரும் போது அப்பொருளிடத்தில் வைத்த விருப்பு வெறுப்புக்களால் ஆகாமிய வினை உண்டாகிறது.

"அந்த விருப்பு வெறுப்புக் கூட முந்திய ஊழ்வினையே" என்றால் அது பொருந்தாது.

ஏன்னெனில், ஒருவினைப் பயனை முந்திய ஊழ்வினைப் பயனாகக் கருது அனுபவித்து விட்டால் அது அடுத்த பிறவியைத் தோற்றுவிக்காது. ஆனால் வினைப்பயனாக வருவதைத் தன்முனைப்போடு நான் செய்தேன் எனவும் நான் நுகர்கிறேன் எனவுங் கருதி நடந்தால் தன்முனைப்பின் பயனே ஆகாமியமாக விளையும்.

Koviloor Digital Library

உலகில் செய்யும் வினைகள் தெரியாமல் செய்த வினை, தெரிந்து செய்த வினை என இருவகைப்படும். இவை ஒவ்வொன்றும் நல்வினை தீவினை என இருவகைப்படும். இவ்வினைகளால், புண்ணியம், பாவம் என்பன உண்டாகும்.

உற்றதொழில் நினைவு உரையில், இருவினையும் உளவாம்;
ஒன்று ஒன்றால் அழியாது; ஊன் ஒழியாது உன்னில்,
மற்று அவற்றின் ஒருவினைக்கு ஓர் வினையால் வீடு
வைதிக சைவம் பகரும் மரபில்ஆற்றப்
பற்றியது கழியும்; இது விலையால் ஏற்கும்
பான்மையும் ஆம்; பண்ணாது பலிக்கும்; முன்னம்
சொல்தருநூல் வழியின் வரின், மிகுதி சோரும்;
சோராது அங்கு அது மேலைத் தொடர்ச்சி யாமே. 31

மனம், வாக்கு, காயம் ஆகியவற்றின் தொழில்களான நினைப்பு, பேச்சு, செய்கை என்பனவற்றால் இருவினையும் உண்டா கின்றன. இங்ஙனம் உண்டாகும் நல்வினை தீவினை என்பன ஒன்று ஒன்றால் அழியாது. அதாவது நல்வினையால் தீவினையும், தீவினையால் நல்வினையும் அழிய மாட்டா. வினையின் நுகர்ச்சி தவராது வரும்.

ஆயினும், இருவினைகளில் ஒன்றாகிய பாவத்துக்கு நல்வினையாகிய பிராயச் சித்தம் செய்தால் பாவம் நீங்கும் என்று வைதீக சைவ நூல்கள் கூறும். அம்முறைப்படி பிராயச் சித்தமாகச் சாந்தி செய்து கொள்ள முடியாதவர்கள், பிறரைக் கொண்டு பணம் கொடுத்துச் செய்யும் சாந்தி முறையும் உண்டு.

ஆனால் பிராயச்சித்தம் செய்யாமலும் பாவத்தைப் போக்கும் வழியும் உண்டு. முன் சொன்ன நூல்களில் கூறப்பட்ட சரியை முதலிய நெறிகளில் ஒழுகி வந்தால் பாவம் பெரும்பான்மையும் நீங்கும். நீங்காது நின்ற வினைப்பகுதி பிந்திய பிறவிகளில் தொடரும்.

Koviloor Digital Library

ஊ. பஞ்சமலம்

மோகம் மிக உயிர்கள் தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று; முயங்கி நின்று
பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று;
பகர் மாயை ஒன்று; படர் கன்மம் ஒன்று;
தேகம் உறு கரணமொடு புவன போகச்
செயல் ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று; என்று
ஆகமலம் ஐந்து என்பர்; ஐந்தும் மாறாது
அருள் என்பது அரிது என்பர், அறிந்துளோரே. 32

(ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் மலங்கள் என்று கொள்வது ஒருமுறை. இனி மலங்கள் ஐந்துள என்று கொள்வது மற்றொரு முறை. உமாபதிசிவம் மலங்களை ஐந்து எனக் கொள்பவர்)

1. *அஞ்ஞானம் மிகும்படி ஆன்மாக்கள் தோறும் சகசமாய் அறிவை மறைத்து நிற்கிற மூலமலம் என்ற ஆணவம் ஒரு மலம்.*
2. *ஆணவத்தோடு பொருந்தி நின்று மலபரிபாகத்தை உண்டாக்கிற திரோதாயி என்ற திரோதான சத்தி ஒருமலம்.*
3. *மாயா மலம் ஒன்று.*
4. *உயிர்கள் தோறும் பொருந்தி நிற்கும் கன்மம் ஒரு மலம்.*
5. *தனு, கரண, புவன, போகமான மாயா காரியங்களாய்த் திரண்ட மாமாயை என்கிற மாயேயம் ஒரு மலம்.*

இவ்வைந்து மலமும் நீங்கினாலன்றி ஆன்மா திருவருளைப் பெறுதலரிது.

அவத்தை இலக்கணம்

i. கேவலாவத்தை

ஓங்கி வரும் பல உயிர்கள் மூன்று அவத்தை பற்றி
உற்றிடும்; கேவல சகல சுத்தம் என உணர்வர்;

Koviloor Digital Library

ஈங்கு வரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும்
இன்றி, மலம் அன்றி ஒன்றும் இல்லை என்னும் இயல்பாய்
ஆங்கு அறிவை அறிவரிதாய், அறிகருவி அணையா
ஆதலினால், இருள் மருவும் அலர் விழிபோல் அதுவாய்,
நீங்கும் வகை இன்றி, நித்த வியாபகமாய், அங்ஙண்
நிற்பது கேவலம் என்று நிகழ்த்தும் நூலே 33

பரிபாகம் பெறும் நிலையில் உயர்ந்து வரும் ஆன்மாக்கள், மூன்ற வகையான காரண(ம்) அவத்தைகளைப் பொருந்தி நிற்கும். அந்த மூன்று அவத்தைகளும் கேவலம், சகலம், சுத்தம் என்று கூறப்படும்.

அவற்றுள் <u>கேவல அவத்தை</u>யாவது. (1) கலாதி முதலிய தத்துவங்களும் குறி என்ற சூக்கும சரீரமும் உருவம் என்ற தூல சரீரமும் இல்லாமல் ஆன்மா ஆணவத்தோடு பொருந்திய நிலை; (2) ஆணவ மலம் ஒன்றேயன்றி வேறெதுவும் இல்லை என்ற இயல்பாய் ஆன்மா ஆணவத்தோடு பொருந்திய நிலை; (3) ஆன்மா அறிகருவிகளைப் பெறாமையால் அது எந்தப் பொருளையும் அறிய முடியாததாய் ஆணவத்தோடு இருக்கும் நிலை; (4) இருளில் விழித்த கண் எதையும் காண முடியாமல் இருளோடு மட்டும் கூடி இருப்பது போல, ஆணவத்தில் ஆன்மா எதையும் அறியமுடியாமல் ஆணவத்தோடு மட்டும் கூடியிருக்கும் நிலை; (5) ஆன்மா ஆணவத்தை விட்டு நீங்குவதற்கு வழியறியாமையால், பிறப்பின்றி ஆணவத்தின் வியாபகமாய் இருக்கும் நிலை

இன்மை மலம்; மாயை கன்மம் என்று இரண்டே; இறைதான்
இலங்கு பல உயிர்களும் முன் புரிந்த இருவினையின்
தன்மைகளால், எவர்களுக்கும் தனு கரண புவனம்
தந்திடும் இங்கு; இதனாலே, இரு பயனும் சார்ந்து
கன்மம் எலாம் நேராக நேராதல் மருவக்,
கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன்; அதனால்
பின் மலமானவை அணுகா; பெருகு ஒளிமுன்பு உளதே
பெற்றிடும் என்று இத்திறம் என் பேசுமாறே. 34

"ஆணவ மலம் என ஒன்று இல்லை; மாயை கன்மம் என இரண்டு மலங்களே உள்ளன" என்றும்,

Koviloor Digital Library

"உயிர்கள் முன் செய்த இருவினை களுக்கு ஈடாக இறைவன் உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைத் தருகிறான். அதனால் உயிர்கள் இன்ப துன்பங்களை நுகர்ந்து, கன்மங்கள் ஒத்து வரும் போது இறைவன் குருவாக வந்து வினைகள் அனைத்தையும் திருவருளால் நீக்குவான். அதன் பிறகு மாயா கன்மங்கள் வந்து அணுகமாட்டா. அப்போது ஆன்மா முன்புள்ள பேரறிவைப் பெறும்" என்றும் ஐக்கியவாத சைவர் கூறுவர். இது பொருந்தாது.

மாயை முதல் என வினையின் பான்மை முதல் எனவே
மன்னு பனை விதை மரபின் மயங்கும்; மலம் சுத்தற்கு
ஏயும் நெறி என்கொல்? அதன் இயல்பு ஆயின், முத்தி
என்பது என்? மற்று இவை நிற்க; இருக்கலாதி உணர்வாய்
மேயபினர், தன் உருவம் விளங்காமை விளக்கும்
மிகும் உலகம் தனில் என்னில், இவை விடுங்கால் உணர்வுள்
தோயும் நெறி இலதாதல், அறியாமை என நீ
சொல்லியது மலம் என்பர் துணிந்துளோரே. 35

1. "மாயை, கன்மம் என மலம் இரண்டே" என்றால், இவ்விரண்டில் மாயை முந்தியதா? கன்மம் (வினை) முந்தியதா? என்ற வினா எழும். இந்த நிலை மரம் முந்தியதா வித்து முந்தியதா என்ற நியாயம் போல மயக்கத்தையே தரும்.
2. மேலும் சுத்தனாகிய ஆன்மாவுக்கு மாயை, கன்மம் வந்தது எப்படி என்ற தடை எழும்.
3. "ஆன்மாவை மாயை, கன்மம் பொருந்துவது இயற்கை" என்று கூறினால் முத்திநிலையிலும் இவை வந்து பொருந்துமன்றோ? அதனால் முத்தி என்பது என்னாகும். (முத்தி என்பது மாயை, கன்மம் விடுபட்ட தூயநிலை என்பது தவறுபடும்.)
4. ஆன்மாவுக்கு அறிவைத் தரும் பொருட்டே கலை முதலிய தத்துவங்கள் தரப்படுகின்றன. அதன் பின்னும் ஆன்மா அறிவு விளங்காமல் கலை முதலியன பிரபஞ்ச ரூபத்தையே காட்டும் என்றால் இது கேவல நிலை போன்றதே ஆகும்.
5. "கேவலத்தில் அறிவு விளக்கம் பெறாமைக்குக் காரணம், அறியா மையே" என்றால், அந்த அறியாமையைத்தான் சைவ சித்தாந்திகள் ஆணவம் என்று கூறுவர்.

Koviloor Digital Library

(எனவே ஐக்கியவாத சைவரின் "ஆணவம் இல்லை" என்ற கொள்கை ஈண்டு மறுக்கப்பட்டது. மேலும் ஆணவம் உண்டு என்று உறுதி செய்ததும் ஆகிறது)

அந்நியம் ஆனவை உணர்த்தி, அநந்நியமாய் நிறைந்த
அறிவு அறியாமையினானும், அருள் நிலவும் காலம்
தன்னில் அவனே யாவுமாய் நின்ற தொன்மை
தாம் உணர்தலானும், உயிர்தான் என ஒன்று இலதாய்
மன்னியிடும்; மலம் மாயை கன்மங்கள் மாறி
வந்திடும்; இங்கு இது வழுவாது; ஆதலினால் மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழிய மலம் உளது என்று
உணர்வு அரிதாம்; அதன் உண்மை தெரிவரிதாம் உனக்கே.36

1. ஆணவ மலமானது, உயிருக்கு வேறாய் நிலையற்ற உலகத்தை நிலையானது என்று உணர்த்து வதோடு, உயிருக்கு வேறாகாமல் நிறைந்த அறிவாகிய சிவத்தை உயிர் அறியாதபடி மறைக்கும். ஆதலானும்,

2. திருவருள் விளக்கமுற்ற சுத்த நிலையில் திருவருளே எல்லாமா யிருந்த தொன்மை நிலையை உயிர் உணரும். ஆதலானும்,

3. உயிர் என்பதொரு பொருள் இல்லை என்னும்படி அவ்வுயிரேயாய் ஆணவம் செறிந்து நிற்கும். ஆதலானும்,

4. மாயையும், கன்மமும் சகல நிலையில் பற்றுவதும், கேவல நிலையில் விடுவதும் ஆக (ஆகந்துகமாய்) மாறி மாறி நிற்கும். ஆனால் ஆணவ மலமோ கேவலம், சகலம் என்ற இருநிலையிலும் உயிரை விட்டு நீங்காமல் நிற்கும். ஆதலானும்,

திருவருள் துணையின்றி, "ஆணவம் உளது" என்பதை உணரமுடியாது. எனவே, ஆன்மா ஆணவமல உண்மைமையை அறியாமலிருக்கிறது.

ii. சகலாவத்தை

புகலும் மலம் ஒழித்ததற்குக் கலாதி முதல் மாயை
பொருந்தியிடும், அரன் அருளால்; போதம், தீபம்,

Koviloor Digital Library

சகலம் எலாம் உடனாய ஆறு போலும்;
தரும் அருளை, மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்;
இகலி வரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை;
எய்தும் வகை தன் செய்தி; இலங்கும் விந்துப்
பகர்வு அரிய உணர்வு ஆகி, ஒளிஆய், உள்ளப்
பான்மையினால், ஒரு நாதம் படரும் தானே. 37

ஆணவ மல மறைப்பை நீக்குவதற்காக இறைவன் அருளால், தூய மாயையின் காரியமான நால்வகை வாக்குகளும் கலை முதலிய தத்துவங்களும் உயிரிடத்தே வந்து பொருந்தும்.

அப்படி அவை பொருந்தியதால் உண்டாகிற அறிவு விளக்கமானது, விளக்கின் ஒளி அதைச் சார்ந்த தண்டு, தகழி, நெய், திரிகளோடு கூடி ஒளி தருவதை ஒக்கும்.

இப்படி அறிவு விளக்கம் தரும் திருவருளைச் சென்று பொருந்தாமல் உயிர்களை ஆணவம் மறைக்கும்.

வாக்கு முதலியன அறிவு விளக்கம் செய்தலும், ஆணவம் அறிவை மறைத்தலும் மாறி மாறி வரும். இதனை ஊன்றி உணர்ந்தால் ஆணவம் இருளையும், வாக்கு முதலியன வெளிச்சத்தையும் ஒக்கும்.

இப்படி உயிர் அறிவு விளக்கம் பெறும் செயலானது எப்படி நடக்கிறது என்றால், மூலதாரத்தில் உள்ள விந்து தத்துவத்திலிருந்து - ஞானத்துக்கு ஏதுவாய்ப் பரசரீரத்தின் உள் ஒளியாய் - ஆன்மா அறிகிற அறிவுக்கு ஈடாக நாதமான சூக்குமை வாக்குத் தோன்றி மேலே உள்ள உந்தித் தானத்துக்குச் செல்லும்

வாக்குகளின் தொழிற்பாடு (38)

வந்து அடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும் அடைவு படஒடுக்கி, மயில் அண்டசலம் நேர்
சிந்தைதனில் உணர்வு ஆகும் பைசந்தி; உயிரில்
சேர்ந்து வரும் அவை மருவும் உரு எவையும் தெரித்து,

Koviloor Digital Library

முந்தியிடும் செவியில் உறாது, உள் உணர்வாய், ஓசை
முழங்கியிடும் மத்திமைதான்; வைகரியில் உதானன்
பந்தம் உறும் உயிர் அனைந்து வந்த மொழி, செவியின்
பால் அணைய, நினைந்த பொருள் பகரும் தானே. 38

மூலதாரத்தில் தோன்றும் வாக்கு, சூக்குமை வாக்கு எனப் படும். அது உந்தித் தானத்தை அடைந்து மயில் முட்டையின் நீரில் மயிலின் நிறங்கள் புலப்படாமல் ஒடுங்கி இருப்பது போல எழுத்துக்கள் புலப்படாமல் ஒடுங்கி நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாக இருக்கும். அந்நிலையில் முந்திய சூக்குமை வாக்கே **பைசந்தி வாக்கு** *எனப்படும்.*

பிறகு முந்திய சூக்குமை வாக்கு பிராண வாயுவோடு கூடி வருகிற எழுத்து நிலை பிரித்தறியும்படிச் செவிக்குக் கேளாமல் தான் மட்டும் உணர நிற்கும், சவிகற்ப உணர்வாகி மெல்லோசையாய் நிற்கும். அந்நிலையில் முந்திய சூக்குமை வாக்கே மத்திமை வாக்கு எனப்படும்.

உதான வாயு அகங்காரத் தத்துவத்தால் செலுத்தப்படும் பிராண வாயுவோடு கூடி வந்த வாக்கு தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி மனம் நினைத்த பொருளைச் சவிகேற்ப உணர்வுக்கு ஏதுவாக ஒலிக்கும். அந்நிலையில் முந்திய சூக்குமை வாக்கே வைகரி வாக்கு எனப்படும்.

(பைசந்தி, மத்திமை, வைகரி என்ற மூன்றும் சூக்குமை வாக்கின் விருத்திகளாகும். பைசந்தி முதலிய, தோன்றி நின்று அழியும். ஆனால் சூக்குமை வாக்கு சுத்தமாயா ரூபமாய் அழிவின்றி நிலைத்திருக்கும்.)

தத்துவங்கள் காரியப்படும் முறை

இத்தகைமை இறை அருளால் உயிர் அறியும் அறிவுக்கு
ஈடாக, வாடாதே ஈர்இரண்டின் உரைத்த
வித்தை முதல் ஐவரான், விளங்கும் ஞானம்
மேவியிடும் என உரைப்பர்; அசுத்த மாயை

Koviloor Digital Library

வைத்த கலைதான் மூலமலம் சிறிதே நீக்கி
மருவும் வகை தெரிவிக்கும், வாயில்களின் பயனைப்
புத்தி தர, வித்தை இடைநின்று, அறிவை உயிர்க்குப்
பொருந்தியிடும் வகை புணரும், புனித சத்தி புணர்ந்தே. 39

சிவனருளால் உயிரறிவுக்குத் தக்கபடி சூக்குமை முதலிய நான்கு வாக்குகளாலும், சுத்த வித்தை முதலிய தத்துவ கர்த்தாக்கள் ஐவரின் செயலாலும் விடயஞானம் ஆன்மாவைப் பொருந்தும்.

பொருந்துவது எப்படி எனில், அசுத்த மாயையின் கலாதத்துவம் மூலமலத்தைச் சிறிது நீக்கி விடயங்களைப் பொருந்தும்படி ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்கும்.

வித்தியா தத்துவம், இந்திரியங்களின் வழி வரும் விடயத்தைப் புத்திதத்துவம் தன்னிடம் கொடுக்க, தான் ஆன்மாவுக்கும் புத்திக்கும் இடையே நின்று ஆன்மாவை விடயஞானம் பொருந்தும்படிச் செயயும். இவைகள் சிவசக்தி உடன் நிற்பதாலே நிகழும்.

பேச அரிய அராகம், தன் கன்மத்துக்கு ஈடாகப்
பெற்றிதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும், நியதி,
தேசம் மிகும் அரசர் தரும் ஆணை; செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கம் செய்தி போல,
நேசம் உறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்;
நிகழ்காலம், கழிகாலம், எதிர்காலம் என்றே
ஓசைதர வரும் காலம், எல்லை பலம் புதுமை
உறுவிக்கும், இறை சத்தி உடனாய் நின்றே. 40

அராக தத்துவம், உயிர்களின் கன்மத்துக்குத் தக்கவாறு போகங்களில் விருப்பத்தைத் தோற்றுவிக்கும்.

நியதி தத்துவம், (அரசனின் ஆணை மக்கள் செய்த செயலுக்கு ஏற்பப் பயனை அனுபவிக்க வைப்பது போல) உயிரின் கன்மத்துக்கு ஏற்ற பலன்களை அந்தந்த உயிரே அனுபவிக்கும்படி நிச்சயம் பண்ணி நிறுத்தும்.

Koviloor Digital Library

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற காலதத்துவம், இறந்த காலத்தின் எல்லையையும் நிகழ்காலத்துப் பயனையும், எதிர் காலத்துப் புதுமையையும் உண்டாக்கும். இச் செயல்கள் எல்லாம் இறை சத்தி இவற்றுடன் கூடி நிற்பதாலேயே நிகழும்.

ஐவகையால் உறுபயன்கள் நுகரவரும் காலம்
அது புருடதத்துவம் என்று அறைந்திடுவர், அறிந்தோர்;
மெய் வகைய கலாசுத்திதனில் இதற்கும் சுத்தி
மேவியிடும் வகையானும் விரும்பிய நூல் விளம்பும்;
செய்வகையின் தொடர்ச்சி இங்குத் தோற்றவிக்கும் குணத்தின்
சேர்வு புரி பிரகிருதி திரிகுணமாம்; அவைதாம்
இவ்வகையால் சாத்துவிக ராசத தாமதமாய்
இயம்புவார்கள்; ஒன்று இரண்டு குணம் ஏற்கை உடைத்தே 41

கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்னும் ஐந்து தத்துவங்களால் பந்திக்கப்பட்டு, மெய் முதலிய ஞானேந் திரியங்கள் ஐந்தாலும் வருகிற பயனை அனுபவிக்க வரும் சமயத்தில் அந்த ஆன்மா புருட தத்துவம் என்று கூறப்படும். (கலை முதலிய ஐந்தையும் பஞ்ச கஞ்சுக மாகப்பெற்ற ஆன்மா, புருட தத்துவம். இதை ஒரு தத்துவமாகக் கூறியது உபசார வழக்கு).

உடம்பின் கூறுபாடான நிவிர்த்தி முதலிய கலைகளைச் சோதிக்கும் போது இந்தப் புருட தத்துவமும் சுத்தியாகும்.

ஆன்மாக்களுக்குப் போகத்தைச் செய்யும் குணங்களின் கூட்டமான பிரகிருதி விரியும் போது முக்குணங்களாக விரியும், அவை சாத்துவிகம், இராசதம், தாமசம் எனப்படும். ஒவ்வொரு குணத்திலும் மற்ற இரண்டு குணங்களும் பொருந்தி இருப்பதும் உண்டு.

அலகு இல்குணம், பிரகாசம் லகுதை, வியாபிருதி
அடர்ச்சி, மிகும் கௌரவம் நியமம் இவை அடைவே
நிலவியிடும்; மும்மூன்றும் உயிர் ஒன்றில் கலந்தே
நின்றும்; இவை நிறை புலனின் பயன் எவையும் கவரும்;

Koviloor Digital Library

குலவி வரும் போகம் கொள் இடமாம்; மாறாக்
குறைவில் ஒளியாம்; அலகு இல் புலனிடத்தில் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரன் அருளால் புந்தி
பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்கும் தானே. 42

1. குணங்கள் எண்ணற்றவையாகும். (எப்படி எனில்) சாத்துவிக குணம் மற்ற இருகுணங்களைத் தன்னுள் அடக்கித் தான் மேலிடும் போது பிரகாசம் (ஞானம்) என்ற குணம் தோன்றும். அதே சாத்துவிக குணம் மனம் வாக்கு, காயங்களுடன் கூடும்போது இலகுதை (எளிமை) என்ற குணம் தோன்றும்.

இராசதகுணம் மற்ற இருகுணங் களையும் தன்னுள் அடக்கித் தான் மேலிடும் போது வியாவிருதி (அசைவு) என்றகுணம் தோன்றம். அதே ராசத குணம் மனம் வாக்கு, காயங்களுடன் கூடும் போது அடார்ச்சி (குரூரம்) என்ற குணம் தோன்றும்.

தாமத குணம் மற்ற இருகுணங் களையும் தன்னுள் அடக்கித் தான் மேலிடும் போது மிகு கவுரவம் (தற்பெருமை), அநியமம் (தகாதன செய்ய விழைவு) என்ற இருகுணங்கள் தோன்றும்.

இப்படி உண்டான பிரகாசம் முதலிய ஆறும் பிரதான குணமான சாத்துவிகம் முதலிய மூன்றும் சேரக் குணம் ஒன்பதாகும். இந்த ஒன்பகு குணங்களும் புத்தி தத்துவத்தோடு, விடயங்களை அறிய ஆன்மாவுக்கு உபகாரமாய் நிற்கும்.

2. புத்தி தத்துவம் நிறை ஒளியாய் நிற்கும். மற்றும் நுகர்ச்சிக்கு உரியவற்றை நிச்சயிக்கும். இந்தப் புத்தி தத்துவமே புலன்களோடு பலவகையில் ஒற்றுமைபட்டு ஐம்பது குணபாவங்களை உண்டாக்கும்.

(அறிவு - 8; மயக்கம் - 9; அசத்தி - 28; விபரீத புத்தி - 5 ஆக குணபாவம் 50) (இப்பத்தியில் 1ம் பகுதி முக்குணங்களின் தொழிற்பாடு; 2ம் பகுதி புத்தியின் தொழிற் பாடு.)

Koviloor Digital Library

ஆனதனு அதனில் உறும் அநிலனையும் இயக்கி
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யான் அலது பிறர் ஒருவர் எனை ஒப்பார் புவியில்,
இல்லை எனும் இயல்பினதாய், இந்திரியம் புலன்கள்
தாம் நுகரும் அளவில், அதின் முந்தி உறும்; இச்சை
தான் உருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து
மானத மானது நிற்கும்; சிந்தை நினைவு; ஐயம்
வந்து தரும் மனம் ஒழிய வகுப்பு ஒணாதே. 43

ஆங்காரத்தத்துவம் (1) வினைகளுக்கு ஈடாக உண்டான உடம்பில் உள்ள பிராணன் முதலிய பத்து வாயுக்களை இயக்கும்; (2) நான் என்னும் அகந்தைக்கு மூலமாக இருக்கும்; (3) "என்னை ஒப்பார் இவ்வுலகில் என்னைத் தவிர வேறு எவரும் இல்லை" என்று சொல்லிக்கொள்ளும் இயல்புடையது; (4) இந்திரியங்கள் விடயங்களை நுகரும் போது அவ்விந்திரியங் களில் முற்பட்டு நிற்கும்.

மனத்தத்துவமானது, (1) இச்சையே தனக்கு வடிவமாய் இருக்கும்; (2). ஏதாவதொன்றை நினைப்பதை உடையது; (3). எப்போதும் அலைந்து கொண்டே இருப்பது.

சித்தமாவது நினைவு மாத்திரையாய் இருப்பது. இது ஐயத்தை ஏற்படுத்துகிற மனத்தைத் தவிர வேறாக எண்ணப்படு வதொன்றன்று.

சொன்ன முறை, செவி, துவக்கு, நோக்கு, நாக்குத்,
துண்டம் இவை ஐந்திற்கும் தொகு விடயமாக
மன்னிய சத்தப், பரிச, ரச, கந்தம்
மருவியிடும் இவை அடைவே; வாக்குப் பாதம்
பின்னர் வரு பாணி, மிகு பாயுவினோடு உபத்தம்
பேசலுறும் ஐந்திற்கும், பிறங்கு ஒலிகொள் வசனம்,
உன்னரிய கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்
உற்ற தொழில் பெற்றிடுவது உண்மையே. 44

காது, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஞானேந்திரியம் ஐந்துக்கும் விடயங்களாக முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை,

Koviloor Digital Library

நாற்றம் என்ற ஐந்தும், பொருந்தும் வாக்கு, பாதம் பாணி, பாயு, உபத்தம் (அதாவது வாய், கால், கை, எருவாய், கருவாய் என்ற) கன்மேந்திரியம் ஐந்துக்கும் வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் (அதாவது பேச்சு, நடை, கொடுத்தல், மலசலம் கழித்தல், மெய்யுறவு மகிழ்ச்சியுறல் என்ற) ஐந்தும் தொழில் களாகப் பொருந்தும்.

முந்திய ஐம்பூதங்கள் வான் ஆதியாக
முயங்கிய நற்செவி, நாசி, கண், நா, மெய்ம் முறையால்
இந்த வயன் நின்று, வரும் ஐம்புலனும் உயிர்தாம்
எய்தும் வகை தம் உருவின் இலங்கியிடும்; புறத்தும்
வந்து அடைய இடம் கொடுக்கும்; நிரந்தரமாய் வானம்,
வாயு மிகச் சலித்து எவையும் திரட்டும்; தீ வெம்மை
தந்து அவை சுட்டு ஒன்றுவிக்கும்; நீர் குளிர்ந்து பதமே
தரும்; உரத்துத் தரிக்கும், முந்த தரணி தானே. 45

அகப் பூதமான தன் மாத்திரைகள் ஐந்தும் அகப்புறப் பூதமாய்ச் சரீரத்தில் பொருந்திய செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்றும் ஐம்பொறிகளான இடங்களில் நின்று, பொறியிடமாக வருகிற ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐம்புலனையும் உயிர் நுகரும்படி தாம் சொரூப நிலையிலே நிற்கும். மற்றும், புறப்பூதமான வானமானது, புறத்தில் உள்ள மற்ற பூதங்கள் தன்னிடத்தில் தங்க எப்போதும் இடங்கொடுக் கும். காற்றானது, அசைவு உடையதாய் எல்லாவற்றையும் திரட்டும். தீயானது வெப்பத்தைக் கொடுத்துப் பிறபொருளைச் சுட்டு ஒன்று படுத்தும். நீரானது குளிர்ச்சியாக மற்றவற்றைப் பதமாக்கும். மண்ணானது கடினமாய் இருந்து பிறவற்றைத் தாங்கி நிற்கும்.

(அகப்பூதம் - ஓசை, ஊறு,ஒளி, சுவை, நாற்றம் என்ற தன்மாத்திரை. அகப்புறப்பூதம் - செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஐம்பொறிகள், புறப்பூதம் - வான், காற்று, தீ, நீர், மண் என்ற பூதங்கள்.)

இந்நிலையில், ஐந்து சுத்தம், ஏழ் சுத்தசுத்தம்,
எண்மூன்றும் அசுத்தும் எனும் இவை முப்பத்து ஆறாம்;

Koviloor Digital Library

மன்னிய தத்துவங்களின் இடைமயங்கி, நெடுந்துயர் தாம்
மருவும்; உருநிலை அழிய வரும்பொழுது, வரி ஆர்
பன்னகம், அண்டசம், கனவு படர்வகையே முன்னம்
பகரவரும் கலாதிநிலை பரவிய சூக்குமம் ஆம்;
தம் உருவின் அணைந்து பயன் அருந்தி, அரன் அருளால்
தரையின் இடைவரும் என்று சாற்றும் நூலே. 46

சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்கள் சுத்த தத்துவமாகும்; கலை முதலிய ஏழு தத்துவங்கள் சுத்தாசுத்த தத்துவமாகும்; மண் முதலான இருபத்து நான்கு தத்துவங்கள் அசுத்த தத்துவமாகும். ஆக இவை மொத்தத்தில் முப்பத்தா றாகும்.

இத் தத்துவங்களின் இடையே உயிர் மயங்கி மிகவும் துன்பப்படும். உயிரின் தூல உடம்பு அழியும்போது, பாம்பு முன்னைய தோலை உரித்து விட்டுப் போவது போலவும் முட்டையில் தோன்றும் பறவை முட்டை ஓட்டை விட்டுச் செல்வது போலவும், நனவில் கண்டவற்றைக் கனவில் மறந்து விடுவது போலவும், அவ்வுயிர் தூல உடம்பை விட்டுக் கலாதிகளால் உண்டான சூக்கும உடம்போடு, சுவர்க்க, நரகங்களில் முறையே பூதசார சரீரம், யாதனாசரீரம் பெற்று இன்ப துன்பம் அனுபவித்து முடிந்த பிறகு இறையருளால் மீண்டும் பூமியில் வந்து பிறக்கும்.

தோற்றியிடும் அண்டசங்கள் சுவேசதங்கள் பாரில்
துதைந்து வரும் உற்பிச்சம், சராயுசங்கள் நான்கின்,
ஊற்றம் மிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்,
ஊர்வ பதினைந்து அமரர் பதினொன்றோடு உலவா
மால்தரு நீர் உறைவன, நல்பறவைகள் நால்காலி
மன்னியிடும் பப்பத்து, மானுடர் ஒன்பதின்மர்
ஏற்றி ஒரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்தே. 47

முட்டையில் தோன்றுவன, வியர்வையில் தோன்றுவன, வித்தில் தோன்றுவன, கருப்பையில் தோன்றுவன என்ற நான்கு வகைப் பிறப்பிடங்களில் தாவரம், ஊர்வன, தேவர், நீர் வாழ்வன,

Koviloor Digital Library

பறவைகள், விலங்குகள், மனிதர் என்ற ஏழுவகைப் பிறப்பில் ஏதேனும் ஒன்றில் பிறக்கும். ஏழுவகைப் பிறப்பில் தாவரம் 19 நூாயிரயோனிபேதம் என்றும், ஊர்வன 15 நூறாயிர யோனி பேதம் என்றும், தேவர் 11 நூறாயிர யோனி பேதம் என்றும், நீர் வாழ்வன 10 நூறாயிர யோனி பேதம் என்றும் பறவைகள் 10 நூறாயிர யோனி பேதம் என்றும், மிருகங்கள் 10 நூலாயிர யோனியாகும், மனிதர் 9 நூறாயிர யோனி பேதம் என்றும் வகுத்துக்கூறி மொத்தத்தில் யோனி பேதம் 84 நூறாயிரம் (84 லட்சம்) என்று தொகை கூறப்படும்.

iii. சுத்தாவத்தை

இனைய பல பிறவிகளின் இறந்து பிறந்து, அருளால்
இருவினைகள் புரிந்து, அருந்தும் இது சகலம்; அகலா
முனம் மருவும் இருபயனும் ஒரு காலத்து அருந்த
முந்து நுகர்உந்து பயன் அந்தம் உறவந்த
வினையும் எதிர்வினையும் முடிவினை உதவு பயனால்
நேராக நேர் ஆதல் மேவுங்கால், முன்
சினம் மருவு திரோதாயி க்ருணை ஆகித்
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே. 48

(இறைவனருளாலே ஆன்மா பற்பல பிறவிகளிலே இறந்தும், பிறந்தும் நல்வினை தீவினைகளைச் செய்து அவற்றினாலே இன்ப துன்பங்களை நுகரும் நிலை சகலாவத்தையாகும்.)

அனுபவித்தும் நீங்காது தங்கிய சஞ்சித வினையின் இருவகைப்பயனும் ஒரே காலத்தில் நுகரும்படியாக வரும்.

பிராரத்த வினை நுகர்ந்து ஒழியும் போது அதனால் மீளவும் உண்டான சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் சிவ புண்ணியப் பயனால் சமநிலை (அதாவது இருவினை ஒப்பு) வரும். அப்போது, இதற்குமுன் கோப முற்று நின்ற திரோதாயி கருணை வடிவாக (அதாவது திருவருட் சத்தியாக) மாறும். அப்படி மாறினால் ஆன்மாவின் பரிபக்குவத்துக்கு ஏற்பச் சத்திநிபாதம் ஏற்படும்.

Koviloor Digital Library

(இருவினை ஒப்பால் மலபரிபாகமும், மலபரிபாகத்தால் சத்திநிபாதமும் தோன்றும் என்ற கூறப்பட்டாலும் மூன்றும் ஒரே காலத்தில் நிகழ்வனவாகும்)

சத்திநிபாதம்

நாடிய சத்தி நிபாதம், நாலு பாதம்;
நண்ணும் வகை; எண்ணரிய ஞான பாதம்
கூடும் அவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்தி கொடு குறுகி, மோகம்
நீடிய கேவல சகலம் நிகழாதவாறு
நிறுத்தி, மலம் அறுக்கும்; இது நிலையார் சுத்தம்;
கேடு இல் புகழ்தரும் சரியை கிரியா யோகக்
கேண்மைய ரேல், இவை உணர்த்தக் கிளர்க்கும் நூலே. 49

சத்திநிபாதமானது, மலபரிபாகத்துக்கு ஏற்ப மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும்.

சரியை, கிரியை, யோகங்களைக் கடந்து ஞானமார்க்கத்தில் நின்ற ஆன்மா, தீவிரதர சத்திநிபாதம் வாய்க்கப்பெற்றால், இதுவரை அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தி வந்த ஞானக் கூத்தன் குருநாதரின் வடிவம் தாங்கி வந்து கேவல நிலையும், சகல நிலையும், நிகழாதபடி அந்த ஆன்மாவைத் திருவருளில் நிறுத்தி மலங்களை அறவே நீக்குவான். இந்த நிலையே சுத்தாவத்தை யாகும்.

இனிச் சரியை, கிரியை, யோக மார்க்கங் களில் நிற்பாராயின் அவர்களுக்கு நால் வகைச் சத்திநிபாதங்களில் அவரவர் எய்திய நிலைக்கு ஏற்பக் குருநாதர் ஞானம் வழங்க வேண்டும் என்று ஆகமம் கூறும்.

முத்திபேதம்

அரிவையர் இன்பு உறும் முத்தி, கந்தம் ஐந்தும்
அறும் முத்தி, திரி குணமும் அடங்கும் முத்தி,

Koviloor Digital Library

விரவு வினை கெடும் முத்தி, மலம் போம் முத்தி,
　　விக்கிரகம் நித்தம் முத்தி, விவேகம் முத்தி
பரவும் உயிர்கெடும் முத்தி, சித்தி முத்தி,
　　பாடாண முத்தி, இவை பழிசேர் முத்தி;
திரி மலமும் அகல, உயிர் அருள் சேர் முத்தி,
　　திகழ் முத்தி; இது முத்தித் திறத்தது ஆமே. 50

1. பெண்களிடம் இன்பத்தை நுகர்வதே முத்தி என்று உலகாயதர் கூறும் முத்தி ஒரு வகை.

2. உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்து கந்தமும் ஆன்மாவை விட்டு நீங்குவதே முத்தி என்று பௌத்தரில் ஒரு பிரிவினரான சௌத்திராந்திகர் கூறும் முத்தி ஒருவகை.

3. ஞானாவரணீயம் முதலிய எட்டும் பசி முதலிய பதினெட்டும், கந்தம் முதலியன ஆறும் ஆகிய மூவகைக் குணங்களும் அடங்குவதே முத்தி என்று சமணரில் ஒரு பிரிவினரான நிகண்டவாதி கூறும் முத்தி ஒரு வகை.

4. உயிரோடு பொருந்திய கன்மம் கெடுவதே முத்தி என்று பிரபாகரன் கூறும் முத்தி ஒருவகை.

5. ஆணவமலம் உயிரை விட்டு நீங்குவதே முத்தி என்று பேதவாதிகள் கூறும் முத்தி ஒருவகை.

6. உயிரின் உடல் அழியாமல் நித்தியமாய் இருப்பதே முத்தி என்று உருவ சிவசமவாதிகள் கூறும் முத்தி ஒரு வகை.

7. பிரகிருதி மாயையையும் புருடனையும் விவேகித்து அறிவதே முத்தி என்று சாங்கியர் கூறும் முத்தி ஒரு வகை.

8. வியாபித்திருக்கிற ஆன்மா அழிந்து போவதே முத்தி என்று பாற்கரியன் கூறும் முத்தி ஒருவகை.

9. அட்டமா சித்தியைப் பெறுவதே முத்தி என்று சித்தர்கள் கூறும் முத்தி ஒரு வகை.

10. உடல் நீங்கியதும் உயிர் கல்லுப் போல் கிடத்தலே முத்தி என்று பாடாணவாதி கூறும் முத்தி ஒரு வகை.

Koviloor Digital Library

இந்தப் பத்துவகை முத்திகளும் பழி சேர் முத்திகளாகும். அதாவது குற்ற முடையனவாகும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நீங்கி ஆன்மா சிவனது திருவருளைச் சார்ந்து நிற்கிற நிலையே உண்மை முத்தியாகும். (பதி சேர் முக்தி)

உண்மை அதிகாரம்

மூன்றாம் நூற்பா

இங்கு இவை பொது இயம்பும் என்பர்கள் இதன்மேல் ஆன்மா
தங்கிய அஞ்சு அவத்தை தன் உண்மை, உணர்த்தும் தன்மை
பொங்கு ஒளி - ஞான வாய்மை, அதன் பயன், புனிதன்நாமம்,
அங்கு அதில் அணைந்தோர் தன்மை, அறைகுவன் அருளினாலே.51

(இதுகாறும் கூறப்பட்ட 50 செய்யுட்கள் முப்பொருள்களின் பொது இயல்பு கூறின)

இனிமேல் வரும் 50 செய்யுட்களில் 1. ஆன்ம இலக்கணம், 2. ஐந்தவத்தைத் தன்மை, 3. உயிர்க்கு உணர்த்தும் முறை, 4. ஞான வாய்மை (சிவஞானத்தின் சிறப்பியல்பு) 5. ஞான வாய்மையின் பயன், 6. இறைவனது நாமமான ஐந்தெழுத்தியல்பு 7. திருவடியை அணைந்தோரின் தன்மை என்ற ஏழையும் உமாபதி சிவாச்சாரியார் திருவருளின் வழி உணர்த்துகிறார்.

ஆன்ம இலக்கணம்

செறிந்திடும் உடலுள் மன்னி
சேர்புலன் வாயில் பற்றி
அறிந்து அதில் அழுந்தும்; ஒன்றும்
அறிந்திடாது அறியும் தன்மை
பிறிந்து அடை அஞ்ச அவத்தை
பெருகிய மலத்தால் பேணி
உறும் தனி அதீதம்; உண்மை
உயிர்க்கு என உணர்த்தும் அன்றே. 52

Koviloor Digital Library

ஆன்மா கன்மத்துக்கு ஈடாகப் பெற்ற உடலில் பொருந்திப் பொறிகளின் வாயிலாகப் புலன் உணர்வை அறிந்து அதில் ஆழும். அப்போது அனுபவிக்கும் தன்னையும், அனுபவிக்க வைக்கும் திருவருளையும் ஆன்மா அறியாது.

ஆன்மா ஐந்தவத்தைப் படும்போது ஆணவத்தைப் பொருந்திக் கருவி, கரணங்கள் ஒவ்வொன்றாக நீங்கப்பெற்றுத் துரியாதீதத்தை அடையும். ஐந்தவத்தையின் போது ஆன்மா சகல நிலை அடைவதும் துரியா தீதத்தில் கேவல நிலை அடைவதும் உண்டு.

(ஆன்மா துரியா தீதத்தில் அடையும் கேவல நிலை, சகல கேவலம் எனப்படும். இது வேறு, அநாதி கேவலம் வேறு)

உரு உணர்வு இலாமையானும்,
ஓர் ஒரு புலன்களாக
மருவி நின்று அறிதலானும்
மனாதிகள் தம்மில் மன்னித்
தருபயன் நுகர்த லானும்.
உயிர் சடம் ஆதலானும்
அருவினை உடலுள் ஆவி
அறிவினால் அறியும் அன்றே. 53

உடம்புக்கு உணர்வு இல்லாத தால் உடம்பு சடம், ஐம்பொறிகள் ஒவ்வொரு புலனைப் பற்றியே அறிதலால் ஐம் பொறிகளும் சடம்; மனாதிகளான அந்தக் கரணங்கள் இந்திரி யங்களைப் பொருந்தியே அறிவதால் அந்தக்கரணங்களும் சடம், பிராணவாயுவும் சடம். எனவே சூக்கும உடம்பில் உள்ள ஆவி என்ற உயிர்தான் திருவருள் உணர்த்த அறியும். (அறிவிக்க அறிவது ஆன்மா) (இங்கு உயிர் என்ற சொல் பிராண வாயுவைக் குறிக்கும்)

அறிவு எனில் வாயில் வேண்டா;
அன்று எனில் அவைதாம் என்னை?
அறிவதை உதவும் என்னில்,
அசேதனம் அவைதாம் எல்லாம்;

Koviloor Digital Library

அறிபவன், அறியும் தன்மை
அருளுவன் என்னில், ஆன்மா
அறிவு இலது ஆகும்; ஈசன்
அசேதனத்து அளித்தி டானே. 54

(1) ஆன்மா தானே அறியும் அறிவுடையது என்றால், இந்திரியங்கள் தேவையில்லை, (2) ஆன்மா அறியும் தன்மை உடையதன்று என்றால் அந்த இந்திரியங்களால் என்ன பயன் உண்டாகப் போகிறது, (3) இந்திரியங்களே ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்கிறது என்றால், இந்திரியம் சடமாகலின் அவை அறிவைத் தர முடியாது; (4) எல்லாம் அறியும் சிவன் ஆன்மாவுக்கு அறிவைத் தருவான் என்றால், ஆன்மா இயற்கை யாகவே அறிவற்ற சடமாக இருந்திருக்க வேண்டும், மற்றும் அசேதனமான சடத்துக்கு இறைவன் அறிவைத் தருவதில்லை. (எனவே ஆன்மா இயல்பாகவே அறிவுடையது என்பதே பொருந்தும்.)

அறிவினால் அறிந்த யாவும்
அசத்து ஆதல்அறிதி என்றும்,
அறிவினால் அறிய ஒணாதேல்,
ஆவது ஒன்று இன்மை; தொன்மை
அறிவுதான் ஒன்றை முந்தி
அது அது ஆகக் காணும்
அறிவுகாண்; அசத்தும் மற்று அது
அறிவினுக்கு அறிய ஒணாதே. 55

உயிர் தன் அறிவால் அறிந்து கொள்கிற எல்லாப் பொருளும் அசத்து (அதாவது அழிபவை) என்று அறிந்து கொள்ள வேண்டும்.

உயிர் தன் அறிவால் இறைவனை அறிந்து கொள்ள முடியாது என்றால், உயிர் அறிவால் பயன் ஒன்றுமில்லை என்று ஏற்படும்.

ஆன்மாவுக்கு இயல்பாக உள்ள அறிவானது பொறிகளின் உதவியால் முற்பட்டுச் சார்ந்ததன் வண்ணமாய்அறியும்

Koviloor Digital Library

அறிவாகும். அவ்வறிவால் உண்டான அனுபவமும் நிலையில்லாத சடமே. எனவே நிலையற்ற அறிவைக் கொண்டு நிலையான அறிவை உடைய இறைவனை ஆன்மா அறியமுடியாது.

எவ்வறிவு அசத்து அறிந்தது
  எனில், உயிர் அறியாது; ஈசன்
அவ்வறிவு அறியான்; அல்லது
  அசேதனம் அறியாது; ஆவி
செவ்விய கருவிகூடின்
  தெரிவு உறாது; அருளில் சேராது;
உவ்இரு வகையது என்னில்
  ஒளி இருள் ஒருங்கு உறாவே. 56

உலகத்தை அசத்து (அதாவது நிலையில்லாதது) என்று அறிந்தது எவ்வறிவு என்று கேட்டால், அறிவித் தாலன்றி அறிய முடியாத உயிர், தானாக அசத்தை அறிய முடியாது.

முற்றறிவுடைய சிவன் வியாபகம் உடையவன். ஆகலான்,அவன் ஒரு சேர அறிவானேயன்றிச் சுட்டியறிவும் உலகத்தை ஏக தேசமாக அறியமாட்டான்.

உயிரும், சிவமும் அல்லாத உலகம் சடம் ஆகலின் உலகமும் அறியாது.

உயிர் பொறிகளோடு கூடி அறியும் என்றால் கருவியோடு தானே கூடும் திறம் உயிருக்கு இல்லையாகலின், திருவருள் கருவியோடு கூட்டுவித்து அறிவித்தாலன்றி உயிர் அறியாது.

திருவருளோடு கூடி உயிர் அறியும் என்று சொன்னால் பிறப்பு நிலையில் உயிர் திருவருளோடு கூடியிருந்தும் உயிர் தானாக அறிவதில்லை.

உயிர் திருவருளோடும் பொறிகளோடும் கூடி அறியும் என்றால் ஒளியும் இருளும் ஒரு விடத்தில் சேருவதில்லை.

உயிர் எப்படித்தான் அறியும் என்றால் அது அடுத்த செய்யுளில் கூறப்படுகிறது.

Koviloor Digital Library

சத்து இது என்று அசத்துத்
தான் அறியாது; அசத்தைச்
சத்து அறிந்து அகல வேண்டா;
அசத்து இது சத்து இது என்று ஓர்
சத்து, இருள் ஒளி அலாக் கண்
தன்மை யதாம்; அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும்
தன்மையால் சதசதத்து ஆமே. 57

அசத்தாகிய பாசம் சடம் ஆகலின், அந்த அசத்தானது, சத்தாகிய சிவத்தை இது சத்து என்று அறியாது.

சத்தாகிய சிவம் வியாபகமுடையது ஆகையால் அசத்தைப் பகுத்தறிந்து நீக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

''அசத்து இது, சத்து இது'' என்று அறியும் அறிவு ஆன்மாவாகிய ஒன்றே தான். (சத்தையும், அசத்தையும் அறியும் இயல்பினை உடையது ஆன்மா)

இத்தகைய ஆன்மா "இருளோடு கூடி இருளல்லாததாயும், ஒளியோடு கூடி ஒளியல்லாததாயும் இருக்கிற கண்" போன்றது.

ஆகவே சத்தாகிய சிவத்தோடு கூடி நின்று அசத்தாகிய பாசத்தை நீக்கிக் கொள்ளும் தன்மை உடையது ஆன்மா. அதனால் ஆன்மா சதசத்து எனப்படும்.

கண் ஒளி விளக்கு அளித்துக்
காட்டிடும் என்னின், முன்னம்
கண் ஒளி ஒன்றும் இன்றாம்;
விளக்க ஒளி கலந்த வற்றைக்
கண் ஒளி அகல நின்றே
கண்டிடும்; வேறா காணா;
கண் ஒளி விளக்கின் சோதி
கலந்திடும் கருத்து ஒன்று அன்றே. 58

Koviloor Digital Library

விளக்கானது கண்ணுக்கு ஒளியைக் கொடுத்துப் பொருள் களைக் காட்டும் என்று கூறினால். விளக்கு காண்பிப்பதற்கு முன்பு கண்ணுக்கு ஒளியில்லை என்று ஏற்படும்.

விளக்கு ஒளி எந்தப்பொருளோடு கலந்து நின்று காட்டுகிறதோ அந்தப் பொருளை, அதற்கு வேறாக நின்று கண் காண்கிறது.

அப்படிக் காணும் போதும் விளக்கின் ஒளியோடு கூடி நின்றே கண் காண்கிறது.

கண் ஒளியும் விளக்கொளியும் கலந்து நிற்கும் என்றாலும் அவை இரண்டும் ஒன்றல்ல, வேறு வேறே.

அதுபோல திருவருள் எதனோடு கலந்து நின்று காட்டு கிறதோ அதனை, அதற்கு வேறாக நின்று ஆன்மா உணரும்.

அங்ஙனம் அறியும் போதும் திருவருளோடு கூடி நின்றே ஆன்மா உணரும்.

ஆன்ம அறியும் திருவருளும் கலந்து நிற்கும் என்றாலும் அவை இரண்டும் ஒன்றல்ல, வேறு வேறே.

ஆன்மா அறிந்து அனுபவிக்கின்ற அனைத்தும் இறையருள் கூட்டுவிக்க நிகழ்கிறது என்றறிக.

ஓர் இடத்தில் இருத்தல், மாயா
உரு நிறைந்திடுதல், ஒன்றாம்
பேரிடத்து உறைதல், தானே
பிறங்கு அறிவாகி நிற்றல்
சோர்வுடைச் சடம் நிகழ்த்தல்
எனும் இவை சொல்லார் நல்லோர்;
ஓர் இடத்து உணரும் உண்மை
ஒளி தரும் உபலம் போலும். 59

1. ஆன்மா உடம்பின் ஓரிடத்தில் இருந்து அறிகிறது என்றும்,

Koviloor Digital Library

2. மாயாகாரியமான உடம்பு முழுதும் நிறைந்து நின்று அறிகிறது என்றும்,
3. எல்லா இடத்திலும் வியாபித்து நின்று தானே அறிகிறது என்றும்,
4. இறைவனால் அறிவிக்கப்படாமல் தானே அறிகிறது என்றும்
5. சடமாகிய மனாதிகளின் வழி அறிகிறது என்றும் இவ்வாறெல்லாம் சைவ சித்தாந்திகள் கூறமாட்டார்கள்.

ஆன்மா அறியும் இயல்பு யாது என்று ஆராயும் போது, தன்னைச் சார்ந்த பொருளின் தன்மையாய் விளங்கும் உபலம் (படிகம்) போல ஆன்மாவும் அசத்தைச் சார்ந்து அசத்தாயும், சத்தைச் சார்ந்து சத்தாயும் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் தன்மைத்து என்பது விளங்கும்.

நான்காம் நூற்பா

ஐந்தவத்தைத் தன்மை

எண்ண ஒன்றும் இலாத அதீதம்
எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும்; சுழுத்தி தன்னில்
நயந்து உளது ஒன்று; பின்னும்
அண்ணிடும்; கனவு தன்னில்
ஆறுஏழ் ஆம்; சாக்கிரத்தின்
கண் உறும் அஞ்சு ஆறு ஆய
கருவிகள் மருவும் தானே. 60

துரியாதீத நிலையில் எண்ணுவதற்கு ஒரு கருவியும் இன்றிப் புருடன் மட்டும் இருக்கும்.

துரியநிலையில் பிராணவாயு என்ற ஒரு கருவி பொருந்தும்.

சுழுத்தி நிலையில் மேலும் சித்தம் என்னும் ஒரு கருவி பொருந்தும்.

Koviloor Digital Library

சொர்ப்பன நிலையில் மேலும் சத்தாதி ஐந்தும் வசனாதி ஐந்தும் மனம், புத்தி, அகங்காரமும் ஆன பதின்மூன்று கருவிகள் பொருந்தும். மேலும் அப்பதின் மூன்றோடு ஒன்பது வாயுகளும் பொருந்தும்.

சாக்கிர நிலையில் மேலும் ஞானேந்திரியம்ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும் பொருந்தும்.

(சாக்கிரம் முதலான நிலைகளில் அவ்வந் நிலைக்குரிய கருவிகள் புருடதத்துவத்துடன் கூடித் தொழிற்படும்).

(ஈண்டுக் கூறப்பட்ட அவத்தை நிலை காரிய கேவலமாகும். இதனையே கீழால் அவத்தை என்றும், சகல கேவலம் என்றும் கூறுவர்)

இவ்வகை அவத்தை தன்னில்
　　எய்திடும் கரணம் எல்லாம்
மெய்வகை இடத்தில் உற்று
　　மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம் அகற்றப்
　　புரிந்திடில், அருளால் ஆங்கே
ஐவகை அவத்தை உய்க்கும்
　　அறிவினால் அறிந்த கொள்ளே. 61

இவ்விதம் காரிய கேவலத்தில் எந்த எந்த இடத்தில் எந்த எந்தக் கருவிகள் இயங்குமோ அதே போல்,அந்தந்தக் கருவிகள் புருவமத்தியான ஒரு இடத்திலேயே பொருந்தியதால் வருகிற ஐந்து அவத்தைகள் உண்டு. அவற்றையும் அறிய வேண்டும். இந்த ஐந்தவத்தை காரிய சகலம் ஆகும். இதனையே மத்தியாலவத்தை என்றும் சகல சகலம் என்றும் கூறுவர்.

பொய்யான உலக விடயங்களைப் பற்றுவதும் விடுவதுமாகிய நிலை ஒழியும் படி குருநாதர் உபதேசப்படி சாதனை செய்ய வேண்டும். அந்தச் சாதனையால் நின்மல சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகள் உண்டாகும். இந்த

Koviloor Digital Library

அவத்தை காரிய சுத்தம் ஆகும். இதனை நின்மலாவத்தை என்றும் கூறுவர்.

நீக்கம் இல் அததும் மாசு
நிறைந்த கேவலமாம் நீர்மை;
சாக்கிரம், கலாதி சேர்ந்த
சலகமாம் தன்மை ஆகும்;
ஊக்கம் இல் இரண்டும் கூடாது
ஒழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிராதீதம்; சுத்தத்
தகைமையது ஆகும் தானே. 62

கருவிகள் படிப்படியாகக் குறைந்து அஞ்ஞானம் நீங்காத நிலை துரியாதீதம் எனப்படும். இந்தத் துரியாதீதமான காரிய கேவலமானது, ஆணவ மலத்தொடு கூடி அநாதியே ஆன்மா இருந்த காரண கேவலத்தை ஒத்திருக்கும்.

சகல சகலம் என்றும் காரிய சகலம் என்றும் மத்தியாலவத்தை என்றும் கூறப்படும். அவத்தையில் நிகழ்வது சாக்கிரம் எனப்படும். இது கலை முதலிய தத்துவங்கள் சேர்ந்து நிற்கிற காரண சகலத்தின் தன்மையை ஒத்திருக்கும்.

சகல சுத்தம் என்னும் காரிய சுத்தமானது, சகலம் கேவலம் என்றும் இரண்டு நிலைகளும் பொருந்தாமல் ஆன்மா திருவருள் நிலையில் அழுந்துகிற சாக்கிரா தீதம் எனப்படும். இந்த நிலை பரமுத்தி நிலையாகிய காரண சுத்தத்தை ஒத்திருக்கும்.

ஐந்தாம் நூற்பா

உயிர்க்கு உணர்த்தும் முறை

மருவிய பொறியில் ஒன்றும்,
மா பூதம் ஐந்தில் ஒன்றும்,
கருவிகள் நான்கும் நீங்காக்
கலாதிகள் ஐந்தும் கூடி,

Koviloor Digital Library

ஒரு புலன் நுகரும் இந்த
ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறாது; அவன் ஒழிந்து, அத்
திரள்களும் செயல் இலாவே. 63

ஆன்மா விடயங்களை அறியும் போது, விடயங்களைப் பொருந்திய ஐம்பொறிகளில் ஏதேனும் ஒன்றை ஒரு சமயத்திலும், மாபூதமான அகபூதம் ஐந்தில் ஏதேனும் ஒன்றையும், அந்தக் கரணங்கள் நான்கையைம், கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்ற ஐந்தையும் கூடி விடயங்களை (அதாவது புலன்களை) அனுபவிக்கிறது.

(அதாவது வித்தியா தத்துவங்கள் அகக் கருவியாக நின்று அந்தக் கரணங்களை இயக்கும். அம்முறையால் ஆன்மா புலன்களை நுகரும்.)

இந்த ஒழுங்குமுறைப்படி யல்லாமல் வேறு எந்த முறையாலும் எந்த ஒரு புலனையும் ஆன்மா நுகரமுடியாது மற்றும் இறைவனின் திருவருளை நீங்கித் தத்துவக்கூட்டம் செயற்பட மாட்டா.

தனக்கு என அறிவு இலாதான்;
தான் இவை அறிந்து சாரான்;
தனக்கு என அறிவு இலாத
வாயில் தான் அறியா, சார;
தனக்கு என அறிவு இலாதான்,
தத்துவ வன்ன ரூபன்;
சகலமும் நுகரும் தானே. 64

ஆன்மா தானாக எதையும் அறியும் அறிவு இல்லாது எனவே ஆன்மா தானாக தத்துவங்களை அறிந்து அவற்றோடு கூட முடியாது.

பொறி புலன்கள் தமக்கென அறிவு இல்லாத சடம் ஆகும். எனவே பொறி புலன்கள் தாமாக ஆன்மாவைக் கூடுகிற வழியை அறிய மாட்டா.

Koviloor Digital Library

தானாக எதையும் அறிய இயலாத ஆன்மா, தத்துவத்தின் வடிவமே தன்வடிவமாகக் கருதிக் கொண்டிருப்பது. (அதாவது உடம்போடு கூடிய உயிர் ஒரோ வழி "எனது உயிர்" என்று கூறும். அதாவது உடம்பைத் தான் என்றும் உயிரை வேறாகவும் கருதும்)

எனவே, எல்லாவற்றையும் ஒரு சேரத் தானாகவே அறியக் கூடிய சிவன், கருவிகரணங்களை ஆன்மாவுக்குக் கூட்டிய செயலால் தான் ஆன்மா அவற்றோடு கூடி எல்லாவற்றையும் நுகரும் (அறியும்).

கண்டு அறிபுலன்கள் காணும்
கருத்தினால்; ஒருத்தன் ஞானம்
கொண்டு உளம் அறியும் என்னில்,
கொள்பவன் முதலி ஆகும்;
மண்டிய உணர்வு உயிர்க்கா
மன்னி நின்று அறியும் என்னில்,
உண்டிட வேண்டுவானுக்கு
ஒருவன் வேறு உண்டல்ஆமே. 65

"ஐம்பொறிகளின் வழியாகக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐந்து விடயங்களையும் ஆன்மா மனத்தைத் துணையாகக் கொண்டறிகிறது. அது போல் சிவனது திருவருளைத் துணையாகக் கொண்டு ஆன்மா தானே விடயங்களை அறியும்" என்று அவிகார வாதிகளின் மதம் பற்றிக் கூறினால், அது பொருந்தாது.

ஏன் எனில் ஆன்மாவே முதன்மையாகி நின்றறியும் என்று ஏற்படும். எனவே இது, "ஆன்மா, தானே அறியும் கர்த்தா" என்ற குற்றமாய் முடியும்.

"சிவனது பரிபூரண ஞானம், ஆன்மாவில் பொருந்தி நின்று ஆன்மாவுக்காக அறியும்" என்று பரிணாமவாதிகள் மதம் பற்றிக் கூறினால் அதுவும் பொருந்ததாது.

Koviloor Digital Library

ஏன் எனில், அது உண்ண வேண்டிய ஒருவனுக்காக மற்றொருவன் உண்பதை ஒக்கும். ஆகவே விகாரமற்ற இறைவனுக்கு விகாரம் கற்பித்தலான குற்றமாய் முடியும்.

இருள் நனி இரவிதான் வந்து
இரித்தலும் இரவில் எண்ணும்
பொருள் நிலை கண்டு மாந்தர்
பொருந்திடு மாறு போல
மருள் நிலை எங்கும் நீங்க
மகிழ்ந்து உயிர் தன்னுள் மன்னும்
அருளையும் ஒழிய, ஞாலத்து
அறிந்த வாறு அறியும் அன்றே. 66

சூரியன் எழுந்து வந்து இருட்டு முழுவதையும் நீக்கிய போது, மனிதர்கள் இரவு நேரத்தில் காணவேண்டும் என்று எண்ணிய பொருளை எல்லாம் அறிந்து மகிழ்வர். ஆனால் துணை செய்த சூரியனை மறந்து விடுவர்.

அதுபோல, கலை முதலிய கருவிகளால் கேவல நிலை முற்றும் நீங்கிய போது, ஆன்மா அறிவு விளக்கம் பெற்று விடயங்களை அறிந்து மகிழும். ஆனால் தன்னுள்ளே நிலைத்த திருவருளின் உதவியை மறந்து விடும்.

உலக மாந்தர் தாமே தம்மறிவால் எல்லாவற்றையும் அறிந்திருப்பதாக நினைப்பது போல, ஆன்மாவும் இறைவன் அறிவிக்காமல் தாமே அறிந்ததாகக் கருதும்.

அறிந்திடும் மனாதி வாயில்
ஆனவை அவன் தனாலே,
அறிந்திடும் என்றும், ஒன்றும்
அறிந்திடா; அவை போல் யாவும்
அறிந்திடும்; அறியும் தன்மை
அறிந்திடா; கன்மத் தொன்மை
அறிந்து அவை நுகருமாறும்
அருளுவன் அமலன் தானே. 67

Koviloor Digital Library

விடயங்களை அறிகிற மனம் முதலிய அந்தக் கரணங்களும் இந்திரியங்களும் ஆன்மா உடன் நின்று செலுத்துவதால்தான் விடயங்களை அறியும். ஆயினும், "ஆன்மாவால்தான் நாம் அறிகிறோம்" என்பதைக் கருவி கரணங்கள் அறியமாட்டா.

கருவி கரணங்கள் ஆன்மாவின் துணையால் எல்லாவற்றையும் அறிவது போல, ஆன்மாவும் திருவருளின் உதவியால் தான் எல்லாவற்றையும் அறிகிறது. ஆயினும், "திருவருளின் துணையால்தான் நாம் அறிகிறோம்" என்பதை ஆன்மா அறியாது.

ஆன்மாக்கள் முன் செய்த வினைகளுக்கு ஏற்பக் கருவி கரணங்களைக் கூட்டுவித்து வினைப்பயனை நுகரச் செய்பவன் இறைவனே.

ஆறாம் நூற்பா

ஞான வாய்மை

(ஞான வாய்மையாவது, சிவஞானத்தின் சொரூப இலக்கணமாகும்)

i. ஞானம் வரும் வழி

காட்டிடும் கரணம் ஒன்றும்
இல்லையேல், காண ஒணாதாம்;
நாட்டிய இவற்றால் ஞானம்
நணுகவும் ஒண்ணா; முன்னம்
ஈட்டிய தவத்தினாலே
இறையருள் உருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக்
குறைகழல் குறுகு மாறே. 68

பிறப்பு நிலையில் ஆன்மாவுக்கு அறிவை விளக்கும் கருவிகரணங்கள் எதுவும் இல்லாவிட்டால் ஆன்மாவால் எதையும் அறிய முடியாது. இந்தக் கருவி கரணங்களைப் பெற்றாலும் ஆன்மா இவற்றால் மெய்ஞ்ஞானத்தைப் பெற முடியாது.

Koviloor Digital Library

முற்பிறவிகளில் செய்த சரியை முதலிய தவப்பயனால், ஆன்மாவுக்கு இருவினை ஒப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் உண்டானபோது, இதுவரை உள் நின்று உணர்த்திய திருவருள், குருநாதர் என்னும் திருமேனி தாங்கி வந்து, கருவி கரணங்களால் ஏற்படுகிற நிலையற்ற தன்மையைத் தீக்கையால் நீக்கி இறைவனது திருவடியை அடையும் பொருட்டு ஞானத்தைக் கூட்டுவிக்கும்.

ஏழாம் நூற்பா

ii. ஞானத்தின் இயல்பு

பல் நிறம் கவரும் தொன்மைப்
படிக நீடு ஒளியும் பன்மை
மன் இலங்கு இயல்பும் தந்த
வளர் ஒளி போல வையம்
தன்னகம் பயிலும் நல்சித்
சடங்களின் தன்மை தாவா
நல் நலம் பெற நிறைந்த
ஞானமே ஞானம் என்பர். 69

பல நிறங்களைத் தன் நிறமாகக் கவரும் இயல்புடையது பளிங்கு. அப் பளிங்கிற்கு அதன் ஒளியையும், பல்நிறம் கொளும் இயல்பையும் கொடுத்தது சூரியஒளி. ஆனால் சூரிய ஒளி விகாரப் படுவதில்லை அதுபோல, உலகில் தொழிற்படுகிற உயிரின் தன்மையையும், சடப்பொருள்களின் தன்மையையும் தான் பொருந்தாமல், ஆன்மாக்கள் நன் நலம் பெறுதற்காக எங்கும் பரிபூரணமாக நிறைந்து நின்று உதவும் சிவஞானமே உண்மை ஞானமாகும்.

மாயை மாமாயை மாயா
வரும் இரு வினையின் வாய்மை
ஆய, ஆர் உயிரின் மேவும்
மருளினில் இருளாய் நிற்கும்;
மாயை மா மாயை மாயா
வரும் இருவினையின் வாய்மை

Koviloor Digital Library

ஆய, ஆர் உயிரின் மேவும்
அருளினில் ஒளியாய் நிற்கும். 70

அசுத்த மாயையும், சுத்தமாயையும், தொடர்ந்து வருகிற புண்ணிய பாவமும் ஆகிய இவற்றின் உண்மையாகிய போகங்களை நுகரும் உயிரிடம் உள்ள சகல நிலையில் ஞானம் வெளிப்பாடமல் மறைந்திருக்கும்.

அசுத்த மாயையும், சுத்த மாயையும், தொடர்கிற புண்ணிய பாவமும் ஆகிய இவற்றின் உண்மைகளை அறிந்து, அவற்றினின்று நீங்கி நிற்கிற பக்குவம் பெற்ற ஆன்மாவிடம் பொருந்திய சுத்த நிலையில் ஞானம் வெளிப்பட்டு ஒளி மயமாய் நிற்கும்.

எட்டாம் நூற்பா

ஞான வாய்மையின் பயன்

தேசு உற மருவும் ஆன்ம
தெரிசனம், ஆன்ம சுத்தி
ஆசு இலா ஆன்ம லாபம்
ஆகமூன்று ஆகும்; மூன்றும்
பாசம் அது அகல ஞானம்
பற்றல், தான் பணியை நீத்தல்,
ஏசு இல் நேயத்து அழுந்தல்
எனும் இவற்று அடங்கும் அன்றே. 71

ஆன்மாவுக்கு ஞானம் உண்டாவதால் விளைகிற பயன்கள் மூன்று; அவையாவன: (1) ஆன்ம தெரிசனம், (2) ஆன்ம சுத்தி, (3) ஆன்ம லாபம்.

இந்த மூன்றும் முறையே, (1) ஆணவமலப் பற்று நீங்கப் பெறுவதால் திருவருளைப் பற்றுதல், (2) தனக்கென ஒரு செயலும் இன்றிக் கிடத்தல், (3) சிவனிடத்து அன்பு மீதூர்ந்து அதில் அழுந்தி நிற்றல் ஆகிய மூன்று வகைப் பயிற்சிகளில் அடங்கும்.

Koviloor Digital Library

ஆன்மா தெரிசனம்

தன் அறிவு அதனால் ஏதும்
தனக்கு அறிவு இல்லை ஏனும்,
தன் அறிவாக எல்லாம்
தனித்தனி பயன் அருந்தும்;
தன் அறிவு அறியும் தன்மை
தன்னாலே தனை அறிந்தால்,
தன்னையும் தானே காணும்
தான் அது ஆகி நின்றே. 72

ஆன்மா தனது இயற்கை அறிவினால் எதையும் அறிகிற அறிவுடைய தன்று.

ஆயினும், தன்னறிவினாலேதான் எதையும் அறிந்து அனுபவிப்பதாக எண்ணிக் கருவிகளின் உதவியால் வரும்போகங்களை ஒவ்வொன்றாக அனுபவிக்கும்.

திருவருளின் உதவியால் ஆன்மா ஞானத்தை அறியுமானால், அப்போது (1) ஆன்ம அறிவு கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறிகிற இயல்பையும், (2) ஆன்மாவாகிய தனது இயல்பையும்ஆன்மா திருவருளோடு கூடி நின்று தெளிவாக அறியும். (இந்நிலையே ஆன்ம தெரிசனம்)

ஆன்ம சுத்தி

தத்துவம் ஆன வற்றின்
தன்மைகள் உணரும் காலை,
உய்த்து அறிந்திட உதிப்பது
ஒளி வளர் ஞானம் ஆகும்;
அத்தன்மை அறியுமாறும்
அகன்றிட அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம்; சுத்த ஞானத்து
ஒரு முதல் தோன்றும் அன்றே. 73

Koviloor Digital Library

தத்துவங்களின் இயல்பை ஆராய்ந்து அறியும் போது, "அவை எல்லாம் சடமாகலின் அவை ஆன்மாவுக்கு அந்நியம்" என்ற உண்மை ஆன்ம அறிவில் தோன்றும். அங்ஙனம் ஆய்ந்தறிந்த அறிவின் பயனாய்த் தோன்றுவதே சிவஞானமாகும்.

இங்ஙனம் "தத்துவங்கள் எல்லாம் சடம்" என்று அறிகிற சுட்டறிவும் ஆன்மாவை விட்டு நீங்கும் போது, ஆன்மா, சிவஞானத்தை அன்றிப் பிறபொருளைச் சாராமல் சிவஞானமே வடிவாய் நின்று தூய்மை பெறும். அப்போது ஞானத்திற்கு முதற்பொருளாய் உள்ள ஞேயமாகிய சிவம் தோன்றும்.

ஞேயம் பற்றிய செய்திகள்

உறை தரும் உணர்வும் அன்றி,
அதன் முதல் உள்ளது என்று இங்கு
அறைவது என் என்னில், அண்ணல்
அருள் எனும் அதுவே அன்றி.
நிறைஒளி முதல் அது ஒன்றி
நின்றிடா; நிமலன் ஆகும்.
இறைவன் முதல்; அவன்தன்
இலங்கு அருள சத்தி யாமே. 74

"ஆன்மாவோடு பொருந்தியுள்ள ஞானம் மட்டுமேயல்லாமல், அந்த ஞானத்துக்கு முதல் ஒன்று இருப்பதாகக் கூறுவது ஏன்" என்றால்

அந்த ஞானமாவது முதல்வனது திருவருளே என்று சொல்லப்படும். அதுமட்டுமன்றி, எங்கும் நிறைந்த சூரிய ஒளி அதற்கு முதலான சூரியனை விட்டு நீங்காமல் இருப்பது போல, ஞானமாகிய குணம் சிவமாகிய முதலை விட்டு நீங்குவதில்லை என்றும் சொல்லப்படும்.

எனவே நிமலனான இறைவன் முதற்பொருள் ஆவன்; அவனிடத்தில் உள்ள திருவருள் ஞானமே சத்தி ஆகும்.

Koviloor Digital Library

சத்தமாம் சத்தி ஞானச்
சுடர் ஆகும்; சிவம் ஒழிந்து, அச்
சத்திதான் இன்றாம்; முன்னைத்
தகவு இலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும்; எங்கும்
அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
வளர் ஒளி போல் மகிழ்ந்தே. 75

நின்மலமான திருவருட் சத்தியானது ஞானமே வடிவாய் இருக்கும். அந்தத் திருவருள் சத்தி சிவத்திலிருந்து பிரிந்து தனி ஒரு முதலாக நிற்பதில்லை.

எங்கும் செறிந்திருக்கிற இருளை நீக்கி வைப்பதோடு சூரியனையும் காட்டுகிற ஒளியைப் போலவே, அநாதியே செறிந்த மூன்று மலங்களையும் நீக்குவதுதோடு கூடத் திருவருட் சத்தியான ஞானமே, சிவமாகிய ஞேயத்தைக் காட்டும்.

(ஞேயம் - அளக்கப்படு பொருள், அது ஈண்டு சிவம்; ஞாதிரு - அளப்பவன்; ஞானம் - அளக்கும் அளவு கருவி)

ஒன்பதாம் நூற்பா

சிவசமவாதியின் கருத்தும் மறுப்பும்

புகல் அரும் அசத்தர், தம் பால்
பொருந்திய அலகையே போல்
அகிலமும் உணரும் ஈசன்
அருள்உயிர் மேவ லாலே,
சகலமும் நிகழ வேண்டும்;
தலைவன் ஐந்தொழிலும் தானே
இகல் அற இயற்றல் வேண்டும்;
என்றது நன்றி இன்றே. 76

"தனக்கெனக் குணமும் செயலும் உண்டென்று புகல முடியாத அளவுக்குச் சத்தி குறைந்தவரைப் பிடித்துக் கொண்ட

Koviloor Digital Library

பேயானது தனது குணத்தையும் செயலையும் பிடிபட்டவரிடம் நிகழ்விக்கும். அதுபோல,

எல்லாவற்றையும் ஒருசேர உணரும் சிவனது திருவருள் ஆன்மாவிடத்துப் பொருந்துவதால், சிவனுக்குரிய எண்குணங் களும் ஐந்தொழிலகளும் ஆன்மாவிடத்திலே நிகழ வேண்டும்" என்று சிவ சமவாதிகள் கூறுவது இறைவன் செய்த நன்றியைக் கொன்ற செயலாக முடியும்.

இன்று, நோக்கு உரை நடக்கும்
இயல்பு இலோற்கு இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை சேர்ந்தால்
நிகழ்வது என்? அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம் பால்
உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன் தொழில் நடாத்தும் மேனி
தனக்க எனக் கொண்டு தானே. 77

தற்சமயம் பார்வையையும், பேச்சையும், நடையையும் இழந்த ஒருவரிடம், பார்வையும் பேச்சும் நடையும் பேய் பற்றினால், பற்றப்பட்டவரிடம் பேயின் பார்வை முதலியன நிகழ முடியாது.

அதுபோல, முத்திபெற்ற ஆன்மாவிடம் பொருந்திய திருவருளால், ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் விளக்கம் பெறுமேயன்றித் திருவருளுக்குரிய ஐந்தொழில் நிகழ முடியாது.

சிவன், தனக்கெனத் திருமேனியைத் தானே கொண்டு ஐந்தொழில் நடத்துவான். ஆனால் தனக்கெனத் தானே திருமேனி கொள்ள முடியாதபடியால், ஆன்மாவால் ஐந்தொழில் ஆற்ற முடியாது" - இது சிவசமவாதியின் கருத்துக்கு மறுப்பு.

ஆன்ம சுத்தியின் பயன்

இந் நிலை தன்னில் மன்னி
எய்திடும் கலாதி போதம்

Koviloor Digital Library

தன் அளவு அறிந்து நிற்கும்
தகவு இலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணம் ஆகா
வகை அதில் அறிவு அடங்கி
மன்னிட வியாபி யாய
வான் பயன் தோன்றும் அன்றே. 78

இன்றைய சகல நிலையில் ஆன்மாவைப் பொருந்தித் தொழிற் படுகிற கலை முதலிய தத்துவங்களால் உண்டாகிற சிற்றறிவை ஆன்மா அறிந்து நிற்கும்.

இனி, சிற்றறிவைச் செய்கிற மலங்கள் நீங்கிய அந்நிலையில் (சகல சுத்த நிலையில்) மலவாசனை தாக்காதபடி ஆன்மா திருவருள் வியாபகத்துள் அடங்கி நிற்கும்.

அங்ஙனம் ஆன்மா சிவத்துள் அடங்கி நிலைபெற்ற போது வியாபக அறிவு என்னும் உயர்வான பலன் ஆன்மாவிடம் தோன்றும். இதுவே ஆன்மசுத்தியால் உண்டாகும் பயன்.

(ஆன்மாவுக்கு மலநீக்கம் ஏற்பட்ட பின்பும் மலவாசனை தாக்கும்.

அப்போது ஆன்மா தனது அறிவிச்சை செயல்களில் செயற்பாடின்றி, இறைவனின் அறிவிச்சை செயல்களில் அடங்கி நின்றால் மாயாமல வாசனையும் கன்மமல வாசனையும் தாக்கமாட்டா. இதனைச் சிவஞான போதம், “இறைபணி நிற்க” என்று குறிக்கிறது.

மேலும் ஆன்மா தன்னை ஒரு தனிப் பொருளாகக் காணாமல் சிவத்தோடு ஒன்றி (ஏகனாகி) நின்றால் ஆணவமல வாசனை தாக்காது. இதனைச் சிவஞான போதம் “ஏகனாகி நிற்க” என்று குறிக்கிறது.

Koviloor Digital Library

ஐக்கியவாத மதக் கருத்துக்கு மறுப்பு

அடைபவர் சிவமே ஆகும்
அது அன்றித் தோன்றும் என்ற
கடன் அது ஏது என்னில், முன்னம்
கண்டிடார் தம்மைப், பின்னும்
தொடர்பு அரும் அருளினாலும்
தோன்றுமா காணா ராயின்,
உடையவன் அடிசேர் ஞானம்
உணர்தல் இன்று, அணைதல் இன்றே. 79

"திருவருளை அடையும் ஆன்மா சிவமாகி விடுதலேயன்றி அந்நிலையில் வியாபக அறிவாகிய பயன் தோன்றும் என்று கூறியது ஏன்" என்று ஐக்கியவாத மதம்பற்றி வினவினால்,

பிறப்புக்கு உட்பட்ட பெத்த நிலையில் ஆன்மாக்கள் ஆணவமல மறைப்புக் காரணமாக வியாபகமாகிய தமது சொரூபத்தை அறியாமல் இருந்தன.

பிறகு பிறவிக்காரணமான மும்மலங்களும் நீங்கப்பெற்றுத் தூய்மை அடைந்த சுத்த நிலையில் திருவருள் துணையிருந்தும் கூட வியாபகமாகிய தமது சொரூபத்தை விளங்கக் காணாமல் போனால் சிவனது அடியாகிய பேரின்பத்தை அடைவதற்குக் காரணமான சிவஞானத்தை ஆன்மா ஆழ்ந்து அறியமுடியாமல் போய்விடும். மேலும் இறைவன் திருவடியைக் கூடமுடியா மலும் போய்விடும்.

பத்தாம் நூற்பா

சாக்கிராதீதம்

பொற்பு உறு கருவி யாவும்
புணராமே அறிவிலாமைச்
சொல் பெறும் அதீதம் வந்து
தோன்றாமே, தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல்
சாக்கிராதீதம் தானே. 80

Koviloor Digital Library

மாயாகாரியமான முப்பத்தாறு கருவிகளும் பொருந்திய சகல நிலையில் இருந்தும்கூடச் சகல நிலைக்கு உட்படாமலும்,

அறியாமை எனப்படுகிற சகல கேவல நிலை ஏற்பட்டாலும் அதில் மயங்காமலும்,

ஆன்மாவிடம் தோன்றி நிற்கிற ஞானசத்தியின் அருளால் யான் எனது என்ற தற்போத சேட்டை நீங்கி நிற்கும் போது ஆன்ம அறிவில், அவ் ஆன்மா சிவத்தோடு ஏகனாகி நிற்கிற உணர்வு தோன்றும்.

இங்ஙனம் ஆன்மா சிவத்தோடு ஏகனாகி நிற்கும் நிலையே சாக்கிராதீத மாகும்.

கருவிகளை ஒடுக்குதற்கு வழி

ஒடுங்கிடா கரணம் தானே
    ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில், நின்றது
    ஒடுங்கிடா, கரணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க, உள்ள
    உணர்வுதான் ஒழியும் வேறாய்
ஒடுங்கிடின் அன்றி மற்று அவ்
    உண்மையை உணர் ஒணாதே. 81

"கருவி கரணங்கள் தாமாக ஒடுங்க மாட்டா. எனவே அவை ஒடுங்கும் வழியை உணர்ந்து ஆன்மா கருவிகைள ஒடுக்கினால் அவை ஒடுங்கும்" என்று வழி கூறினால் அது பொருந்தாது.

ஏன் எனில் அறிவிச்சை செயல்களாய நிற்கிற ஆன்மாவின் தற்போதம் ஒடுங்காமையால், ஆன்மா தன்னிச்சையால் ஒடுக்க நினைத்தாலும் கருவி கரணங்கள் ஒடுங்க மாட்டா.

இனி, "கருவிகரணங்கள் ஒடுங்க ஒடுங்க ஆன்மாவின் தற்போதமும் ஒடுங்கும்" என்று வழி கூறினால் அதுவும் பொருந்தாது.

Koviloor Digital Library

ஏன் என்றால் கருவிகரணங்கள் ஒடுங்க ஒடுங்க ஆன்மாவின் அறிவும் கெட்டுக் கேவல நிலை வந்து ஆன்மாவை ஆணவம் மூடிவிடும்.

இனி, "கருவிகரணங்கள் ஒடுங்கச் சரியான வழிதான் என்ன" என்று கேட்டால்

ஆன்மா கருவிகரணங்களைத் தனக்கு வேறானவை என்று அறிந்து, திருவருளில் ஒடுங்கி நின்றால் கருவி கரணங்கள் ஒடுங்கும். இந்த முறையினால் கருவி கரணங்களை ஒடுக்கினாலன்றி ஆன்மா சிவத்தை அறியவும் முடியாது; அனுபவிக்கவும் முடியாது.

தற்போதம் ஒழிவதற்கு வழி

பற்றிடும் கருவி யாவும்
படர்ந்து உணர்வு அளிக்கும் காலை,
உற்று அறிந்திடுவது ஒன்றின்
உணர்வினின் உண்மை ஆகும்;
மற்று அது பகல் விளக்கின்
மாய்ந்திட வருவது உண்டேல்,
பெற்றிடும் அதனை மாயப்
பிறப்பினை அறுக்க லாமே. 82

விடயங்களைப் பற்றும் ஞானேந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறிவை அளிக்கும் போது, ஆன்மா அவ்விடயங்களில் ஒன்றைப் பற்றிச் சுட்டி அறிவது ஆன்ம அறிவின் இயல்பாகும்.

ஆயினும் பகல் ஒளியில் எரியும் விளக்குத் தான் அணைந்து போகாமல், தனது ஒளி மட்டும் கெட்டு நிற்பது போல, ஆன்மா திருவருளோடுகூடித் தான் அழியாமல் தற்போதமான அறிவிச்சை செயல்கள் கெட்டு நிற்கும் நிலை அவ் ஆன்மாவுக்கு ஏற்படுமானால், அப்போது ஆன்மா சிவத்தை அடையும். அதனால் பிறப்பையும் அறுக்கலாம். (இதுவே தற்போதம் ஒழிதற்கு வழியாகும்)

Koviloor Digital Library

ஆன்ம லாபம்

(ஆன்மலாபமாவது பேரின்பப் பேறு. இதைப் பெறுவதற்கு வழி ஞான நெறி)

முந்திய ஒருமை யாலே
மொழித்தவை கேட்டல், கேட்டல்
சிந்தனை செய்தல், உண்மை
தெளிந்திடல், அது தான் ஆக
வந்தவாறு எய்த நிட்டை
மருவுதல், என்று நான்காம்
இந்தவாறு அடைந்தோர் முத்தி
எய்திய இயல்பி னாரே. 83

(1) முற்பிறப்பில் செய்த சரியை முதலியவற்றின் முதிர்ச்சியாலும், சிவனோடு ஒன்றுபட்டு நிற்றலாலும், அனுபவ ஞானமுடையவர் ஆகிய தேசிகர் உபதேசித்த மொழிகளைக் கேட்டலும், (2) அங்ஙனம் கேட்டவற்றைச் சிந்தித்தலும், (3) கேட்டதன் உண்மையை ஐயம் திரியபறத் தெளிதலும் (4) (தத்+துவம்+அசி) "சிவம் நீ ஆகிறாய்" என்ற அத்துவித நிலை பொருந்தும் படி பிரிவின்றி நிற்றலாகிய நிட்டை கூடலும் என்ற ஞானம் நான்கு வகைப்படும்.

இங்ஙனம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியவர். முத்திபெற்று இயல்பினை உடையோராவர்.

ஞான நிட்டை

பாசம் ஆம் ஞானத் தாலும்
படர் பசு ஞானத் தாலும்,
ஈசனை அறிய ஒண்ணாது;
இறையருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனால் முன்னைச்
சிற்றறிவு ஒழிந்து, சேர்ந்து
நேசமொடு உயர் பரத்து
நிற்பது ஞான நிட்டை 84

Koviloor Digital Library

கருவி கரணங்களால் ஆன்மாவிடம் நிகழும் சிற்றறிவு பாசஞானம் எனப்படும். கருவி கரணம் நீங்கிய போது வியாபகம் பெற்ற ஆன்மா (அகம் பிரம்மாஸ்மி) "நானே பிரமம்" என்று கருதுகிற அறிவு நிலை பசு ஞானம் எனப்படும். இந்தப் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் சிவனை அறிய முடியாது.

சிவனது திருவருளாகிய பதிஞானத் தைப் பொருந்தி, ஒளியுள்ள பதிஞானத்தால் முந்திய ஆன்மபோதமாகிய சிற்றறிவு நீங்கிப் பதி ஞானத்துக்கு மேம்பட்ட சிவனிடத்தில் பேரன்பு செய்து, சிவனருளைக் கூடி அனுபவிப்பதே (அதாவது திருவருளில் அடங்கி அழுந்தப் பற்றி நிற்பதே) ஞான நிட்டை ஆகும்.

உபாய நிட்டை

(ஞான நிட்டை கை கூடாவிட்டால் உபாய நிட்டையைப் பின்பற்ற வேண்டும்)

விளம்பிய வகையில் நிட்டை
மேவிடல் அரிதேல், முன்னம்
அளந்து அறிவு அளித்த வற்றின்
அளவும், மற்று அவற்றினாலே
உளம் கொளும் தனையும், உள்ள
படியும், உற்று உணர்ந்து, செவ்வே
தளந்திடாது உவப்ப, மற்று அத்
தன்மையது ஆகும் தானே. 85

1. சகல நிலையில் விடயங்களை அறிந்து ஆன்மாவுக்கு அறிவித்து வந்த கருவிகளின் இயல்பையும்,
2. கருவிகளின் வாயிலாக அறியும் ஆன்மாவின் இயல்பையும்,
3. ஆன்மாவோடு கலந்து நின்று அறிவித்தும், அறிந்தும் பேருதவி செய்து வருகிற சிவனது அத்துவித நிலையையும்,

ஆன்மா திருவருளோடு கூடி நின்று அறிந்து, அந்த அத்துவித நிலையை மறவாமல் கடைப்பிடித்து இறைவன் திருவடியையே

Koviloor Digital Library

விரும்பி நிற்றலே உபாயமநிட்டையாகும். இந்த உபாய நிட்டையில் பொருந்தி வந்தால் ஞான நிட்டை கை கூடும்.

(உபாய நிட்டையாவது, திருவடிப் பேற்றைப் பெறுவதற்காக உலகப் பொருள்களை அனுபவிக்கும் பொழுதே "இவை அனைத்தும் திருவருளாலேயே நமக்குக் கிடைத்தன" என்ற சிந்தனையோடு சிவனருளை இடைவிடாது நினைந்திருத்தல்.)

ஞானநிட்டையான உண்மை நிட்டையாவது சிவனையன்றி பிறபொருளில் நாட்டமின்றி நிற்றல்.

பாவனையால் சிவத்தைப் பெற முடியாது

பாவிக்கின் மனாதி வேண்டும்;
பயன் இலை; கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில், என்ன?
பழுது உள; பாவகத்தால்
பாவிக்க ஒண்ணாது என்று
பாவிப்பன் என்னின், நீ என்?
பாவிக்க வேண்டா, ஆண்ட
பரன் அருள் பற்றி னோர்க்கே. 86

"சிவனைக் கருவி கரணங்களால் பாவிப்பேன்" என்றால், அந்தப் பாவனையான பயிற்சிக்கு மனம் முதலிய கருவிகள் வேண்டும். சிவன், கருவி கரணங்களுக்கு எட்டாதவன். எனவே கருவி கரணங்களைக் கொண்டு பாவிப்பதால் பயன் எதுவும் கிட்டாது.

இனி, "கருவி கரணங்களை நீங்கி ஆன்மாவாகிய நான் மட்டும் தனித்து நின்று பாவிப்பேன்" என்றால், கருவி கரணங்கள் நீங்கிய நிலையில் ஆன்மா எதையும் நினைக்க முடியாது. எனவே தனித்து நின்று பாவிப்பது என்பது எப்படி முடியும்? மேலும் கருவி கரணங்கள் நீங்கினால் ஆணவமல மறைப்புக்கு உட்பட்டு கேவலநிலை வந்து பொருந்தும்.

Koviloor Digital Library

இனி, "சிவன், கருவி கரணங்களுக்கு எட்டாதவன் என்று எண்ணிப் பாவிப்பேன்" என்றால், அப்போது நீ எந்தவிதமான பாவனையைச் செய்வாய்? கருவி கரணங்கள் கூடிய சகலநிலையிலே சிவனை அறிய முடியாத நீ, கருவிகரணம் நீங்கிய கேவல நிலையில் அவனை எப்படிப் பாவிக்க முடியும்?

இனி எப்படித்தான் அவனைப் பாவிப்பது என்றால், "சிவன் ஒருவனே இறைவன். அவனே நம்மை ஆட்கொள்ள வல்லவன்" என்ற உறுதி ஏற்படவேண்டும். அந்த உறுதி ஏற்பட்டால், ஆன்மா சிவனுக்கு அடிமை என்ற உணர்வு உண்டாகும். அந்த உணர்வினால் திருவருளில் அழுந்தி நிற்கும் அனுபவம் உண்டாகும். இவ்வழியே அவனைப் பாவிக்கும் பாவனையாகும்.

இப்படி திருவருளில் அழுந்தி நிற்கும் அனுபவமே உண்மையான தியானபாவனை.

அத்துவிதம் என்பதன் விளக்கம்

ஒன்று இரண்டு ஆகி ஒன்றின்
ஒருமையாம்; இருமை ஆகி
ஒன்றின் ஒன்ற அழியும்; ஒன்றாது
என்னின், ஒன்று ஆகா; தீயின்
ஒன்று இரும்பு உறழின் அன்றாம்;
உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்;
ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு
உவமை, ஆணவத்தொடு ஒன்றே. 87

1. அத்துவிதம் என்பதற்கு, "பிரமம் என்ற ஒரு பொருளே, கடவுளும், உயிரும் என இரண்டாக எண்ணப்பட்டிருந்து, முத்தி நிலையில் அந்த இரண்டும் ஒன்றாகி விடும்" என்று விளக்கம் கூறினால், அது பொருந்தாது.

ஏன் எனில், முத்திநிலையில் இரண்டும் ஒன்றானால் கடவுளும் உயிரும் ஒரே தன்மையுடையன ஆகவேண்டும். கடவுளின் இயல்பும் உயிரின் இயல்பும் வெவ்வேறாக

Koviloor Digital Library

இருப்பதால் முத்தி நிலையில் உயிர்கள் பிரமத்தோடு ஒன்றாகி விடும் என்பது பொருந்தாது.

2. "அநாதியே ஆன்மாவும் சிவமும் வேறுவேறாய் இருந்து முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் ஒன்றாகி விடும்" என்று விளக்கம் கூறினால் அதுவும் பொருந்தாது.

ஏன் எனில் அநாதியே வேறு வேறாக இருந்த இரண்டு பொருள்களில் ஒன்று முத்தி நிலையில் அழிந்து விடும்படி நேரும். உயிர்கள் என்றும் உள்ளவை. ஆகவே முத்திநிலையில் உயிர்கள் பிரமத்தோடு சங்கமம் ஆகி இல்லாது ஒழியும் என்னும் வாதம் பொருந்தாது.

3. இனி, "முத்தி நிலையில் ஆன்மாவும் சிவமும் ஒன்றாகாமல் வேறாகவே இருக்கும்" என்றால் அது அத்துவிதம் ஆகாது; துவிதம் ஆகும்.

4. "நெருப்போடு சேர்ந்த இரும்பு நெருப்பாவது போலச் சிவத்தோடு சேர்ந்த ஆன்மாவும் சிவத்தின் குணங்கள அனைத்தையும் பெற்றுச் சிவத்துக்குச் சமமாகும்" என்று விளக்கம் கூறினால் அது பொருந்தாது.

ஏன் என்றால், அங்ஙனம் சமமானால் சிவனுக்குரிய ஐந்தொழிலும் ஆன்மாவிடத்திலும் காணப்படவேண்டும். அநாதியே ஆன்மாவிடத்தில் ஐந்தொழிலாற்றல் இல்லாமை யால், முத்தி நிலையிலும் இல்லையாயிற்று. எனவே முத்தி நிலையில் ஆன்மா சிவத்துக்குச் சமமாகும் என்பது பொருந்தாது.

இனி முத்திநிலையில் ஆன்மா சிவத்தோடு கூடி நின்று பேரின்பத்தை நுகரும் என்பதே உண்மை. இதற்கு உவமை கூற வேண்டுமானால், பிறவிக்கு வருவதற்கு முன்பு ஆன்மா கேவல நிலையில் ஆணவத்தோடு கூடி இருட்டன்மை பெற்று ஒன்றித்திருந்த நிலையே உவமையாகும்.

முத்தி நிலையில் ஆணவம்

அழிந்திடும் பாசம் என்னின்,
நித்தம் என்று உரைத்தல் வேண்டா;

Koviloor Digital Library

அரிந்திடாது என்னின், ஞானம்
அடைவது கருதவேண்டா;
அழிந்திடும் சத்தி; நித்தம்
அரிந்திடாது; ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும், பாசம்
அடைந்திடா, மிடைந்தி டாவே. 88

(ஆன்மா சிவமாம் தன்மை பெற்று நிற்கும் முத்தி நிலையில் ஆணவமலம் என்னாகும் என்று ஆராயும் போது)

“ஆணவமலம் அழிந்து விடும்” என்று கூறினால், “பதி, பசு, பாசம் என்ற மூன்றும் எக்காலத்தும் உள்ளவை” என்று சிவாகமங்கள் கூறத்தேவையில்லை.

இனி, “ஆணவம் அழியாது இருக்கும்” என்று கூறினால், ஆன்மா ஆணவத்தோடு கூடியிருக்கும் என்றாகி அது திருவடி ஞானத்தைக் கூடும் என்று கருதமுடியாமல் போகும்.

இனி முத்தியில் ஆணவம் அழியும் என்பதற்குப் பொருள், “ஆன்மாவின் அறிவை மறைத்து நின்ற ஆணவ மலத்தின் ஆற்றல், முத்தி பெற்ற ஆன்மாவிடத்துச் செல்லுபடியாகாது” என்பதே ஆகும். இஃதன்றி நித்தியமான ஆணவம் இல்லாமல் போய் விடும் என்பது பொருளன்று.

இதற்கு உவமை யாது எனில், சூரிய ஒளியின் முன் இருள் நில்லாது என்றால் இருள் அழிந்து விடும் என்பது பொருளன்று. சூரிய ஒளியின் முன் இருள் முனைந்து நிற்காது என்பதே பொருள். இங்ஙனம் ஒளியின் முன் இருள் வலிகுன்றி இருப்பதே, முத்தி நிலையில் ஆணவம் வலிகுன்றியிருப்பதற்கு உவமையாம்.

கன்ம மல நீக்கம்

எல்லைஇல் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்; ஏன்ற
உடல் பழவினைகள் ஊட்டும்

Koviloor Digital Library

தொல்லையின் வருதல் போலத்
தோன்று இருவினைகள் உண்டேல்,
அல் ஒளி புரையும் ஞானத்
தழல் உற, அழிந்து போமே. 89

கன்மமானது சஞ்சிதம், பிராரர்த்தம், ஆகாமியம் என மூன்று வகைப்படும். இந்த மூவகையும் நீங்கும் முறைமை வருமாறு:

எண்ணற்ற பிறவிகளைத் தருகிற நல்வினை, தீவினைகளின் குவியலே சஞ்சித வினை. இந்தச்சஞ்சித வினை, வறுத்த வித்துப்போலத் தீக்கை செய்யும் குருநாதரின் திருநோக்கினால் விரைந்து நீங்கும்.

எடுத்த பிறப்பில் நுகர்வதற்காக நியமிக்கப்பட்ட வினையே பிராரர்த்த வினை. இந்தப் பிராரர்த்த வினை, குருவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஞானிகளின் உடம்பு உள்ளவரை அனுபவிக்கப் பட்டுக் கழியும்.

பிராரர்த்த வினையை நுகரும் போது அதன் வழி ஆகாமிய வினை உண்டாகும். அங்ஙனமே ஞானிகள் பிராரர்த்த வினையை நுகரும் போது ஆகாமிய வினை தோன்றக் கூடும். சூரிய ஒளி இருட்டைப் போக்குவது போல, ஞானகளிடம் பொருந்திய திருவருள் (ஞானம் ஆகாமிய வினையை ஒழித்து விடும்.)

ஐந்தெழுத்தின் இயல்பு

பந்தம் ஆனவை அறுத்தத்
பவுதிகம் உழலும் எல்லை,
சந்தியாது ஒழியாது; இங்குத்
தன்மை போல் வினையும் சாரும்;
அந்தம் ஆதிகள் இலாத
அஞ்செழுத்து அருளினாலே
வந்தவாறு உரை செய் வாரை
வாதியா பேதி யாவே. 90

Koviloor Digital Library

குருநாதரால் ஆணவம், கன்மம், மாயையான மூவகை பந்தங்களும் ஒழிந்த பிறகும் பூத உடம்போடு சஞ்சரிக்கும் ஞானிகளை மலவாசனை தாக்கும். ஆனால் பெருங்காயம் வைத்து எடுத்த பாண்டம் பெருங்காய வாசனையை மெல்ல மெல்ல வீசுவதுபோலப் பிராரர்த்த வினை மெலிந்து தாக்கும்.

குருநாதர் உபதேசித்த முறைப்படி திருவைந்தெழுத்தை அப்போது ஞானி ஓதி வந்தால் அவரைப் பிராரர்த்த வினை தாக்கமட்டடா. மேலும் அவரைத் தன்னிலையில் தாழாமலும் காப்பாற்றும். (இதனால் ஐந்தெழுத்து ஓத வேண்டிய அவசியம் புலனாகும்)

திரு எழுத்து ஐந்தில் ஆனமாத்
    திரோதம், ஆசு, அருள், சிவம் சூழ்
தர, நடு நின்றது ஒன்றாம்
    தன்மையின், தொன்மை ஆகி,
வரும் மனம் மிருதியாலே
    வாசியில் ஆசை இன்றிக்
கருவழிச் சுழலும்; மாறும்
    காதலர்க்கு ஓத லாமே. 91

சூக்கும பஞ்சாக்கரமாகிய சிவாயநம என்பதில் மறைப்பாற்றலும் ஆணவமும் (ந, ம என்று) பின்னே நிற்குமாறும், திருவருளும் சிவமும் (சி, வ என்று) முன்னே நிற்குமாறும் அவ்விரு பகுதிகளும் இருபுறமும் சூழ ஆன்மா (ய என்று) நடுவிலே நிற்கிறது.

இந்த இருபகுதிகளுக்கு நடு நின்ற ஆன்மா, இவ்விரண்டில் ஏதேனும் ஒரு பகுதியைச் சாருகிற தகுதி பெற்றிருப் பதாலும், அநாதியாக வரும் ஆணவத் தொடர்பாலும், மறைப்பாற்ற லாலும், விடய போகங்களை நுகருவதில் விருப்பம் மிகுதியாக் கொள்வதாலும், திருவருளிலும் சிவத்திலும் விருப்பமின்றி இருப்பதாலும் ஆன்மா பிறந்திறந்து சுழலும்.

அந்நிலையில் விடய போகங்களில் விருப்பு வைப்பதிலி ருந்து நீங்கி முத்தியில் விருப்பு வைப்பதில் திரும்புகிவர்களுக்குச்

Koviloor Digital Library

சிவாய நம என்ற சூக்கும ஐந்தெழுத்தை உபதேசிக்கலாம். அவர்களும் குருநாதரிடம் உபதேசம் கேட்டு உச்சரிக்கலாம்.

(முத்தியில் விருப்பு வைக்கும் ஆன்மா, உலகில் வாழும் காலத்தில் துன்பம் இன்றி வாழ்வதோடு, இப்பிறப்பிலேயே முத்தி இன்பம் பெறும். இதுவே சூக்கு பஞ்சாக்கரத்தின் பொருள்)

பஞ்சாக்கரத்தின் மகிமை

ஆசுஉறு திரோதம் மேவாது
அகலுமா, "சிவ" முன் ஆக,
ஓசை கொள் அதனின் நம்மேல்
ஒழித்து அருள் ஓங்கும்; மீள
வாசியை அருளும்; மாய
மற்றது பற்றா; உற்று அங்கு
ஈசனில் ஏகம் ஆகும்;
இது திரு எழுத்தின் ஈடே. 92

சிவாய நம - சூக்கும பஞ்சாக்கரம்

சி - சிவம்

வ - திருவருட்சத்தி

ய - ஆன்மா

ந - திரோதானசத்தி (மறைப்பாற்றல்)

ம - மலம் (ஆணவம், கன்மம், மாயை)

ஆணவமலமும் மறைப்பாற்றலும் (ந, ம என்பது) தொடக்கத்தில் அமையாமல் நீங்கிச் சிகார வகரங்கள் முதலில் அமையும்படி வைத்துச் சிவாய நம என்ற சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதி வரவேண்டும். அப்படி ஓதி வந்தால் நகாரமான திரோதாயி, மகாரமான மலத்தை ஒழித்து வகாரமான அருட்சத்தியாக மாறும் அருட்சத்தியான வகரம் சிகரமாகிய சிவத்தை ஆன்மாவுக்குக் காட்டி அச்சிவத்தை அடையச் செய்யும்.

Koviloor Digital Library

மலமறைப்பு ஒழிந்த ஆன்மா, திருவருட் சத்தியைப் பற்றுக் கோடாகக் கொண்டு அவ்வருளில் அடங்கி இருக்கம். பின்பு திருவருள் துணையால் இறைவனது திருவடியில் அத்துவிதக் கலப்பு உறும். இதுவே திருவைந்தெழுத்தின் ஈடு. (அதாவது திருவைந்தெழுத்தின் பெருமை)

பதினோராம் நூற்பா

அணைந்தோர் தன்மை

தீங்குறு மாயை சேராவகை
வினை திரி விதத் தால்
நீங்கிட, நீங்கா மூல
நிறை இருள் இரிய நேயத்து
ஓங்கு உணர்வு அகத்து அடக்கி
உளத்துள் இன்பு ஒடுங்க, நேரே
தூங்குவர், தாங்கி ஏகத்
தொன்மையில் துகள் இலோரே. 93

மாயா காரியங்கள் பொருந்தாதபடி, சஞ்சித வினை தீக்கையாலும், பிராரத்த வினை அனுபவத்தாலும், ஆகாமிய வினை திருவருள் ஞானத்தாலும் ஞானிகள் நீங்குவர். வினை நீங்கியதும் ஆணவமல இருளும் நீங்குவார், கன்மமும் ஆணவமும் நீங்கப் பெற்ற ஞானிகள் திருவருள் ஞானத்துள் அடங்கியும், திருவருளோடு பிரிப்பின்றி ஏகமாக நிற்கிற சிவத்தால் தாங்கப்பட்டும், தமது அறிவிச்சை செயல்களினுள் பேரின்பம் நிறையவும் அமைந்தவராய் மல வாசனை தாக்காத படி சிவத்தோடு ஏகனாகி ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருப்பர். (இந்த ஞானிகள், சீவன் முத்தர் எனவும் அணைந்தோர் எனவும் குறிக்கப் பெறுவர்)

குறிப்பிடம், காலம், திக்கு, ஆசனம்
கொள்கை, குலம், குணம், சீர்
சிறப்புறு விரதம், சீலம்,
தவம், செபம், தியானம் எல்லாம்

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
Ac. No. 12087

மறுத்து அற ஒழிதல் செய்தல்
மருவிடா; மன்னு செய்தி
உறக்கு உறுபவர் போல், வாய்மை
ஒழிந்தவை ஒழிந்து போமே. 94

1. வழிபடுவதற்கு ஏற்றதாய் சான்றோரால் குறிக்கப்பட்ட தல வரையறையும்,
2. திதி வார நட்சத்திரம் முதலான கால வரையறையும்,
3. இன்ன திசை இன்னதற்குரியது என்னும் திசை வரையறையும்,
4. யோகத்துக்கு உரிய ஆசன வரையறையும்,
5. தமக்கென உரிய கொள்கை வரையறையும்,
6. சாதி அபிமானமும்,
7. சமய ஆசாரமான குணங்களும்,
8. தமக்குரிய வேடமாகிய சிறப்பும்,
9. விரத அபிமானமும்,
10. நல்லொழுக்கமும்,
11. நீர்ப்பல்கால் மூழ்கல் முதலிய தவ ஒழுக்கமும்
12. மந்திர செப வரையறையும்
13. புருவ மத்தியில் தியானித்தலும்

மற்றும் இவை முதலான யாவும் சீவன் முத்தர்களால் அறவே வெறுத்து ஒதுக்கப் படுவனவும் அல்ல; ஏற்றுச் செய்யப் படுவனவும் அல்ல. தல வழிபாடு முதலானவை சீவன் முத்தர்களிடம் காணப் படுதலும் உண்டு; இல்லாது ஒழிதலும் உண்டும்.

சீவன் முத்தர்களிடம் எங்கும் எவையும் சிவமாக் கண்டு வழிபடும் ஒரு செயல் மட்டும் உறுதியாக இருக்கும். மற்ற செயல்கள், தூங்குவோன் கையில் உள்ள பம்பரம் தானே நழுவுதல் போல் நழுவும். (<u>சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்</u>)

Koviloor Digital Library

அகம் புறம் என்றும் இரண்டால்
அருச்சனை புரியும் இந்தச்
சகம் தனில், இரண்டும் இன்றித்
தமோ மயம் ஆகி எல்லாம்
நிகழ்ந்திட, மகிழ்ந்து வாழும்
நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்து அகம் புறம் எனாத
செம்மையார் நன்மை யாரே. 95

அகப்பூசை, புறப்பூசை என்ற இரண்டு வகையால் வழிபாடு செய்து உலக போகத்திலும் வீடு பேற்றிலும் நாட்ட முடையவராய் ஒரு சிலர் இவ்வுலகில் வாழ்வர்.

இனி அகப்பூசை, புறப்பூசை எதுவுமே செய்யாமல் அஞ்ஞானமயமாகி வினைக்கு ஈடாக எது வந்தாலும் அது பற்றிச் சிந்தனை இன்றி தாம் இச்சித்த பொருளை எவ்வகையாலாவது பெற்று மகிழ்ந்து ஒரு சிலர் வாழ்வர்.

பின்னே கூறப்பட்டவர்களைப் போல தாம் பெற்ற திருவருள் அகத்துள்ளதோ, புறத்துள்ளதோ என்ற பாகுபாடு பண்ணாமல், உலகபோக, பரபோக சிந்தனை எதுவும் இன்றி ஞானமயமாகித் தாம் இச்சித்த சிவனை எங்கும் எதிலும் கண்டு மகிழ்பவராய் எல்லாரிடமும் ஒரு தன்மையராகக் காணப் படுவார்கள் சீவன் முத்தர்கள்.

ஞானத்தில் யோகம்

அண்டம் மேவிட அனைத்தும்,
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல் போல் எவையும் ஞானக்
குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில், தானே
அண்டநாயகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே. 96

Koviloor Digital Library

மண் முதலிய நான்கு பூதமும் வானத்தைப் பொருந்தும் போது, வானம் அந்த நான்கு பூதங்களையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும். அதுபோல அண்ட சராசரம் அனைத்தும் திருவருள் வியாபகத்துள் அடங்கி நிற்கும். அதனால், ஞானிகள் உலகப் பொருள் எதையும் திருவருளின் வடிவாகவே காண்பார்கள். காண்பவனாகிய ஞானியும் அண்ட நாயனுக்குத் திருமேனியாக ஆவான். இவ்விதம் அண்ட சராசரங்களை மட்டுமன்றித் தன்னையும் ஆண்டவனின் திருமேனியாக - அவனது இருப்பிடமாக - அறிந்து தியானிப்பது ஞானத்தில் யோகமாகும்.

ஞானத்தில் கிரியை

மண் முதல் கரணம் எல்லாம்
மறு அசத்து ஆக்கி, ஞானக்
கண்ணினில் ஊன்றி, அந்தக்
கருத்தினால் எவையும் நோக்கி,
எண்ணி அஞ்செழுத்தும் மாறி
இறை நிறைவு உணர்ந்து போற்றல்,
புண்ணியன் தனக்கு ஞான
பூசையாய்ப் புகலும் அன்றே. 97

மண் முதலிய தத்துவங்களை ஆன்மாவுக்கு வேறானவை என்றும் அசத்து என்றும் அறிந்து அவற்றினின்று நீங்கி, தன்னை உயர்த்திய திருவருளில் நிலைத்து, அத்திருவருளையே கண்ணாகவும் கொண்டு எல்லாவற்றையும் இறைவனாகவே நோக்கி, சிவாய நம என்ற ஐந்தெழுத்தில் நகர மகரங்களை நீக்கிச் சிவயசிவ என "இருதலை மாணிக்கமாக" ஆக்கிச் செபித்து, சிவன் எல்லாப் பொருளோடும் கலந்து நிற்கும் அத்துவித நிலையை முழு நிறைவாக எண்ணிப் போற்றி வழிபடுதலே ஞான பூசை (அதாவது ஞானத்தில் கிரியை) என்று சிவாகமம் கூறும்.

Koviloor Digital Library

பன்னிரண்டாம் நூற்பா

ஞானத்தில் சரியை

தொண்டர்கள் தாமும், வானோர்
தொழும் திருமேனி தானும்,
அண்டரும் கண்டி லாத
அண்ணலே என வணங்கி,
வெண் தரளங்கள் சிந்த
விழி, மொழி குளற, மெய்யே
கண்டு கொண்டு இருப்பர் ஞானக்
கடல் அமுது அருந்தினோரே. 98

அருட்கடலில் விளைந்த பேரின்ப அமுதைப் பருகும் சீவன் முத்தர்கள், சிவனடியார்களையும் தேவர் வணங்குகிற சிவலிங்கத் திருமேனியையும் சிவனே என்று கருதி வழிபடுவார்கள். அப்போது அவர்களின் கண்கள் முத்துப்போல் நீர்த்துளிகளைச் சிந்தவும், வாக்குத் தழுதழுப்பச் சிவத்தையே கண்டிருப்பர். சீவன்முத்தர் இவ்வாறு வழிபடுதலே ஞானத்தில் சரியை எனப்படும்.

நூற்கருத்து

நிலவு உலோகாயாத ஆதி
நிகழ் சிவாத்துவித அந்தத்துள்
குலவினர் அளவு அளாவாக்
கொள்கையது ஆகி, வேதத்
தலை தரு பொருளாய், இன்பாய்த்
தாவு இல் சற்காரியத் தாய்,
மலைவு அறும் உணர்வால், பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே. 99

உலகில் பேசப்படுகிற உலகாயதம் முதல் சிவாத்துவித சைவம் ஈறாக வழங்கி வருகிற மதங்களைச் சார்ந்தவர்கள் முறையான பிரமாணங்களால் அளக்கப்படாத கொள்கையர் களாக இருப்பதால், வேதாந்தத்தில் உள்ள பொருளாயும்,

Koviloor Digital Library

பேரின்பத்தை விளைவிப்பதாயும், சற்காரிய வாதத்தால் கூறுவதாயும் மலைவு இன்றி இருக்கிற சைவசித்தாந்த அறிவினால், இது காறும் பெத்த முத்தி நிலைகள் வரையறுத்துக் கூறப்பட்டன.

நூல் கேட்டற்குரியார்

திருவருள் கொடுத்து மற்று இச்
சிவப்பிரகசா நல்நூல்
விரிவது தெளியும் ஆற்றால்
விளம்பிய ஏது நோக்கி,
பெருகிய உவமை நான்கின்
பெற்றியில் நிறுவிப், பின் முன்
தரும் மலைவு ஒழியக் கொள்வோன்
தன் வயின் சாற்றலாமே. 100

ஞானாசிரியனால் தீக்கை செய்விக்கப் பெற்றவனாயும், சிவப்பிரகாசம் என்னும் இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்ட பொருளை விரித்துத் தெரிந்து கொள்வதற்காக ஆகமங்களில் கூறப்பட்ட இயல்பு ஏது, காரிய ஏது, அனுபலத்தி ஏது என்னும் மூவகை ஏதுக்களை ஆராயகிறவனாய், நான்குவகை உவமைகளால் பெறத் தக்க பொருளில் கருத்தைப் பதிய வைப்பவனாய் முன்னுக்குப் பின் முரணின்றிச் சைவ சித்தாந்த ஆசான் கூறுவதை நுட்பமாகக் கொள்ளத் தக்கவனாய் உள்ள மாணாக்கனுக்குச் சிவப்பிரகாசம் என்ற நூலை உபதேசிக்கலாம்.

Koviloor Digital Library

திருவருட் பயன்

காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணில், கலைஞானம்
கற்குஞ் சரக்குஅன்று காண்.

அருள்பொழியும் இளம் யானை முகனை மனம், மெய், மொழிகளால் வழிபடுவர்க்கு ஞானசாத்திரம் வருந்தி கற்க வேண்டிய பொருள் ஆகாது. எனவே அந்த திருவடியை வழிபடும் அடியேனின் ஞானநூல் திருவருட்பயன் பிழையின்றி இனிது நிறைவேறும்.

1. பதிமுதுநிலை - இறை இயல்பு

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து 1

அகர எழுத்தின் ஒலி மற்ற உயிர் எழுத்துக்களோடும் மெய் எழுத்துக்களோடும் கலந்து நிறைந்து நிற்பது போலச் சிவன் உயிர்களோடும் சடப்பொருள்களோடும் கலந்தும் நிறைந்தும் நிற்பான் (இது தடத்த நிலை)

அகர எழுத்தின் ஒலி மற்ற உயிர் எழுத்து ஒலிகளுக்கும் மெய் எழுத்து ஒலிகளுக்கும் முதலாய் நிற்பது போலச் சிவன் உயிர்களுக்கும் சடப்பொருள்களுக்கும் முதல்வனாய் ஞானவடிவாய் நிற்பான். (இது சொரூப நிலை)

தன் நிலைமை மன்உயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னம் இலான் எங்கள் பிரான் 2

சிவன் தனது குணங்களை உயிர்கள் சாரும் பொருட்டு உயிர்களுக்குத் திருவருட் சக்தியைத் தருவான். சிவன் தனது திருவருட் சத்தியோடு பிரிப்பின்றி நிற்பான்.

Koviloor Digital Library

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்புஇன்மை யான். 3

சிவன் முழுநிறைவான பெருமையை (பெரியதற்கெல்லாம் பெரியாதாகும் தன்மையை) உடையவன்.

சிவன் எளிதில் அறிய முடியாத நுட்பத்தை (அணுவுக்கும் அணுவாகிற நுட்பத்தை) உடையவன்.

சிவன் எல்லா உயிரிடத்தும் சமமாகச் செலுத்துகிற பேரருள் உடையவன்.

சிவன் எளிதில் அடைய முடியாத அருமைப்பாடு உடையவன். இந்நான்கினால் எதனோடும் ஒப்பிலாதவன்.

ஆக்கி எவையும் அளித்து, ஆசுடன்அடங்கப்
போக்கும்அவன் போகாப் புகல் 4

சிவன் உயிர்களுக்கு வேண்டியவற்றைப் படைப்பவன், படைத்தவற்றைக் காப்பவன், காத்தவற்றை ஒடுக்குவதோடு, ஊழிக்காலத்தில் உயிர்களை ஆணவத் தோடு கேவல நிலையில் நிற்கும்படி ஒடுக்குபவன், படைப்பாதி காரணங்களை மறைப் பவன், ஆணவத்தோடு மற்ற மலங்களையும் போக்கி உயிர்களுக்கு அருள் புரிபவன். இங்ஙனம் ஐந்தொழில் புரிபவன்.

சிவன் என்றும் உயிர்களை விட்டுப் பிரியாத புகலிடமாக (ஆதாரமாக) இருப்பவன்.

அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன். 5

சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் அருவத் திருமேனி நான்கையும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி ஒன்றையும், மகேச்சுரன் உருத்திரன், திருமால், பிரமன் என்னும் உருவத்திருமேனி நான்கையும் சிவன் உடையவன். இவை ஒன்பதும் நவம் தரும் பேதங்கள். திருவைந்தெழுத்தான திருமேனியையும் உடையவன்.

Koviloor Digital Library

பல்ஆர் உயிர்உணரும் பான்மைஎன மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை. 6

சிவன் உயிர்களுக்குத் தனு முதலியவற்றைப் படைத்துத் தருவான். தனக்குத் திருமேனியைப் படைத்துத் தரத் தனக்குமேல் ஒருவன் இல்லாதவன், தன் திருமேனிகளைத் தானே படைத்துக் கொள்கிறவன்.

ஆனா அறிவாய் அகலான், அடியவர்க்கு
வான்நாடர் காணாத மன். 7

சிவன் தேவர்களாலும் காணப் படாதவன், எங்கும் ஞானமே வடிவாய் மறைந்திருப்பவன், ஆயினும் ஞானிகளுக்கு மட்டும் ஒளிக்காமல் தோன்றுபவன்.

எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும்அவன் தானே தனி. 8

நீரில் பொருந்திய சூடுபோல எவ்விடத் திலும் எப்பொருளிலும் இரண்டறக் கலந்திருப்பவன். அவற்றால் யாதொரு தொடக்குமின்றித் தனித்து இருப்பவன்.

நலம்இலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்
சலம்இலன் பேர்சங் கரன் 9

சிவன் பாரபட்சம் இன்றி எல்லார்க்கும் இன்பமே செய்பவன். அதனால் அவனுக்குச் சங்கரன் என்று பெயர் வழங்கும்.

உன்னும் உளது, ஐயம்இலது, உணர்வாய் ஓவாது,
மன்னுபவம் தீர்க்கும் மருந்து 10

சிவன், உயிர்களின் பிறவிக்குக் காரணமாகிய ஆணவமல நோயைத் தீர்க்கும் மருத்துவன்.

2. உயிரவை நிலை - உயிர் இயல்பு

பிறந்தநாள், மேலும் பிறக்குநாள் போலும்,
துறந்தோர், துறப்போர் தொகை 11

Koviloor Digital Library

உயிர்கள் இதுவரை பிறந்து வாழ்ந்த நாட்களை எண்ணிக் கணக்கிட முடியாததைப் போல, இதுவரை முத்தி பெற்ற உயிர்களை எண்ணிக் கணக்கிட முடியாது.

உயிர்கள் இனிமேல் பிறக்கப்போகிற நாட்களை எண்ணிக் கணக்கிட முடியாததைப் போல, இனிமேல் முத்தியடையப் போகிற உயிர்களை எண்ணிக் கணக்கிட முடியாது. அதாவது உயிர்கள் எண்ணிறந்தன வாகும்.

திரிமலத்தார் ஒன்று, அதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தா ராயும் உளர். 12

மும்மலம் உடைய சகலர், ஆணவம், கன்மம் என்ற இருமலம் உடைய பிரளயா கலர், ஆணவம் என்ற ஒரு மலம் மட்டும் உடைய விஞ்ஞானகலர் என உயிர்கள் மூவகைப்படும்.

மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்;
தோன்றலர், தொகுத்து உள்ளார் துணை. 13

மூவகை உயிர்களும் ஆணவப் பிணிப்பு உடையவரே. ஆயினும் மாயையோடு கூடிய சகலர் ஆணவமலப் பிணிப்பை அறியார். மற்ற இருவகையினரும் ஆணவமலப் பிணிப்பை அறிவார்கள்.

கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னோ செயல்? 14

உயிர்கள் நனவில் கண்டவற்றைக் கனவில் கண்டு கலங்குகிற அற்ப அறிவுடையன.

உயிர்கள் தாம் விரும்பியபடி செயற்பட முடியாது. அதாவது ஆன்மாக்களுக்குச் சுதந்தரம் இல்லை.

பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவுஎன்ற பேர், நன்று அற. 15

உயிர்கள் பொறிகள் உதவி இன்றி எதையும் அறிய முடியாது. அதாவது உயிர்கள் அறிவித்தாலன்றி அறிய மாட்டா.

Koviloor Digital Library

ஒளியும் இருளும் உலகும் அவர்கண்
தெளிவில் எனில், என் செய 16

கண்ணுக்குப் பார்க்கும் திறம் இல்லை என்றால், ஒளியும், இருளும், உலகப் பொருள்களும் பார்க்கப்படமாட்டா. அதுபோல உயிர்களுக்கு அறிவிச்சை செயல்கள் இல்லை என்றால், திருவருளால் பேரின்ப நுகர்வும், ஆணவத்தால் மயக்க உணர்வும், உலகப் பொருள்களால் உலக நுகர்வும் இல்லை. எனவே உயிர்களுக்கு அறிவிச்சை செயல்கள் என்ற மூன்று சத்தியும் உண்டு.

சத்து, அசத்தைச் சாராது,அசத்து அறியாது அங்கண், இவை
உற்றசத சத்தாம் உயிர். 17

உயிர்கள் சத்தும் ஆகாமல், அசத்தும் ஆகாமல், சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையன. எனவே உயிர்களுக்குச் சதசத்து என்னும் பெயர் வழங்குகிறது.

இருளில் இருள்ஆகி எல்இடத்தில் எல்ஆம்
பொருள்கள் இலதோ புவி. 18

இருள் வந்தபோது இருளாகியும், ஒளி வந்தபோது ஒளி ஆகியும், உள்ள கண்ணாடி முதலியன உலகில் உள்ளதைப் போல, ஆணவத்தைச் சார்ந்தபோது அறியாமை உடையதாயும், திருவருளைச் சார்ந்தபோது அறிவுடையதாயும் உள்ள உயிரும் உண்டு என்பது உறுதி.

ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
யாமன்கண் காணா தவை. 19

ஆந்தையின் கண்களுக்குச் சூரிய வெளிச்சம் காணப் படாமல் இருளாகவே தோன்றுவதைப் போல, சிவனது ஞானத்தின் துணைக்கொண்டு காணாத உயிர்களுக்குத் திருவரு ளாகிய ஒளி காணப்படாமல் இருளாகவே தோன்றும்.

அன்றுஅளவும் ஆற்றும்உயிர் அந்தோ அருள்தெரிவது
என்று? அளவுஒன்று இல்லா இடர். 20

Koviloor Digital Library

உயிர்கள் திருவருளை அறிந்து கொண்டாலன்றி பிறவித் துயர் நீங்கிப் பேரின்பம் பெற முடியாது.

3. இருள் மலநிலை - ஆணவமல இயல்பு

துன்றும், பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்று என்பது எவ்வாறும் இல். 21

உலகாயதர் கூறுவது போலப் பிறவித் துன்பமும் முத்தியின்பமும் பிறவிக்குக் காரணமான ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களும், முத்திக்குக் காரணமான திருவருளும் இல்பொருள்கள் அல்ல; உள்பொருள்களே. அதாவது ஆணவம் உள்பொருளே.

இருள்ஆனது அன்றி இலது; எவையும் ஏகப்
பொருள் ஆகி நிற்கும் பொருள். 22

இருளானது உலகில் உள்ள எந்தப்பொருளையும் தன்னுள் அடக்கி மறைப்பதைப் போல ஆணவமலம் தான் ஒரே பொருளாக நின்று உயிர்களைத் தன்னுள் அடக்கிப் பசுபதிபாசங்களின் தன்மைகளை அவ்வுயிர்கள் அறியாதபடி மறைக்கும்.

ஒரு பொருளும் காட்டாது உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது. 23

புற இருள் பிறபொருள்களைக் காட்டாது; ஆயினும் தன்னைக் காட்டும். அக இருளாகிய ஆணவம் பிறபொருள் களின் உண்மையையும் காட்டாது, மற்றும் தன் உண்மையையும் காட்டாது.

அன்றுஅளவி உள்ஒளியோடு ஆவியிடை, அடங்கி
இன்றுஅளவும் நின்றது இருள். 24

ஆணவம் உயிருக்கு உயிரான சிவனது வியாபகத்துள் இருந்தும் கூடச் சிவனோடு விரவாது, உயிரோடு மட்டும் விரவி இருக்கும்.

Koviloor Digital Library

பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்கு உண்டு என்றும்
கணவர்க்கு தோன்றாத கற்பு. 25

அளவற்ற உயிர்களோடு கூடியிருந்தும் ஆணவம் உயிர்களுக்குத் தன்னை இன்னார் என்று காட்டிக் கொள்ளாத திறம் உடையது.

பன்மொழிகள் என்? உணரும் பான்மை தெரியாத
தன்மை,இரு ளார்,தந் தது. 26

ஆணவ மலந்தான் உயிர்களுக்குப் பதி, பசு, பாசங்களை உணரமுடியாத மயக்கத்தைக் கொடுப்பது.

இருள்இன்றேல் துன்புஎன்? உயிர்இயல்பேல் போக்கும்
பொருள்உண்டேல் ஒன்றாகப் போம். 27

“ஆணவம் இல்லை” என்று கூறினால், “உயிர்கள் பிறவித் துன்பத்தை அனுபவிப்பதற்குக் காரணம் என்ன” என்ற வினா எழும். அந்த வினாவுக்குச் சரியான விடையளிக்க முடியாது. ஆகையால் ஆணவம் உண்டு என்பது உறுதியாகும்.

“ஆணவம் உயிரின் குணம்” என்றால் முத்தி நிலையில் ஆணவமாகிய குணம் அழியும் போது குணியாகிய உயிர் அழிவதில்லை. எனவே ஆணவம் உயிரின் குணமன்று. ஆணவம் உயிரின் குற்றமே ஆகும்.

ஆசு, ஆதி யேல், அணைவ காரணம்என்? முத்திநிலை
பேசாது அகவும் பிணி. 28

“ஆணவம் இடையில் வந்து உயிரைப் பற்றிக்கொண்ட ஆதிப்பொருள்” என்று கூறினால், “அது இடையில் வந்து பற்றக் காரணம் என்ன” என்ற வினா எழும். மற்றும் முத்தி நிலையிலும் இடையில் வந்து பற்றவும் கூடும். எனவே ஆணவம் ஆதிப்பொருள் அன்று; அநாதியே ஆகும்.

ஒன்று மிகினும் ஒளிகவரா தேல், உள்ளம்
என்றும் அகலாது இருள். 29

Koviloor Digital Library

மாயையால் உடம்பைப் பெற்ற காலத்திலேயே உயிர்கள் திருவருள் துணையால் ஞானத்தைப் பெறாவிட்டால் எக்காலத்தும் ஆணவம் நீங்காது.

விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து. 30

பொழுது விடிகிற வரை இருட்டை ஓட்டுவதற்கு விளக்கு ஓரளவுக்கு உதவுவது போல, முத்தி பெறுகிற வரை ஆணவத்தை ஒடுக்குவதற்கு உயிருக்கு மாயை ஓரளவுக்கு உதவுகிறது. அதாவது ஆணவம்தான் உயிர் அறிவை மயக்குகிறது. மாயை மயக்குவது இல்லை.

4. அருளது நிலை - திருவருளின் உண்மை நிலை

அருளில் பெரியது அகிலத்து வேண்டும்
பொருளில் தலையிலது போல் 31

உலகத்தில் பொருட்செல்வத்தை விட மேலான துணை இல்லை. அதுபோல உயிர்களின் ஈடேற்றத்துக்குத் திருவருளை விட மேலான துணை இல்லை.

பெருக்க நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள். 32

சூரியன் ஜீவராசிகளுக்குத் தேவை யானவற்றைத் தருவதாயும், அவற்றை நுகரச் செய்வதாயும், ஒளியைத் தருவதாயும், இருப்பது போலத் திருவருள் ஆன்மாக்களுக்குக் காரிய கன்மங்களைப் பெருக்கித் தருவதாயும், அக்கன்மங்களுக்கு ஏற்பப் போகங்களை நுகரச் செய்வதாயும், இருவினை ஒப்பு ஏற்படும் போது ஞான ஒளியைத் தருவதாயும் இருக்கும்.

ஊன் அறியாத ஒன்றும், உயிர்அறியாது ஒன்றம், இது
தான் அறியாது ஆர்அறிவார் தான்? 33

உடம்பு சடம் ஆதலின் அறியாது. உயிர் தானாக எதையும் அறியாது, தன்னையும் அறியாது. எனவே திருவருள்தான் ஆன்மாக்களை அறியச் செய்கிறது.

Koviloor Digital Library

பால்ஆழி மீன்ஆறும் பான்மைத்து; அருள் உயிர்கள்
மால்ஆழி ஆழும் மறித்து. 34

பாற்கடலில் வாழும் மீன் பாலை உணவாக ஏற்காமல் புழுப்பூச்சிகளைத் தின்பது போலத் திருவருளின் வியாபகத்துள் இருக்கிற ஆன்மா திருவருளைத் துணையாக ஏற்காமல் உலகப் பற்றையே நாடுகிறது. அதாவது ஆன்மா உலகப் பற்றிலே நாட்டம் கொள்கிறது. இதுதான் திருவருளை அறியாமைக்குக் காரணம்.

அணுகு துணைஅறியா ஆற்றோனில் ஐந்தின்
உணர்வை உணராது உயிர் 35

தனக்குப் பின்னே துணையாக வருகிறவனை அறிந்து கொள்ளாத வழிப் போகக்கனைப் போலவும், தமது அறிவுக்கும் செயலுக்கும் துணையாக உள்ள உயிரை அறிந்து கொள்ளாத ஐம்பொறிகளைப் போலவும் ஆன்மாக்கள் தமக்குத் துணையான திருவருளை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றன.

தரையை அறியாது தாமே திரிவார்
புரையை உணரா புவி. 36

பூமியில் வாழ்வோர் ''பூமியே தமக்கு ஆதாரம் என்று நினையாமல், தமக்குத் தாமே ஆதாரம் என்று நினைப்பது, தமது அறிவீனம்'' என்பதை அறியார். அதுபோலத் திருவருளின் வியாபகத்துள் இருக்கிற ஆன்மாக்கள் திருவருளே தமக்கு ஆதாரம் என்று நினையாமல் தமக்கு தாமே ஆதாரம் என்று நினைப்பது, தமது அறிவீனம் என்பதை அறியமாட்டா.

மலைகெடுத்தோர், மண் கெடுத்தோர், வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். 37

மலையில் இருந்து கொண்டே மலையைத் தேடுபவரும், பூமியில் இருந்து கொண்டே பூமியைத் தேடுபவரும், வானத்தில் இருந்து கொண்டே வானத்தைத் தேடுபவரும், திருவருள் வியாபகத்துள் இருந்து கொண்டே திருவருளைத் தேடுபவரும் தம்மைக் காணவில்லையே என்று தம்மையே தேடுகிற அறிவிலியை ஒப்பார்கள். அதாவது திருவருள் உயிர்களைத்

Koviloor Digital Library

தாங்கும் ஆதாரமாக இருந்தும் உயிர்கள் திருவருளை அறியாதிருக்கின்றன.

வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்துஇருளாம்
கள்ளத்து இறைவர் கடன். 38

உயிர்கள் திருவருளின் வியாபகத்துள் இருந்தும் திருவருளைப் பயன்படுத்திப் பேரின்பத்தை பெறாமல் இருக்கின்றன. இது குளத்து வெள்ளத்தின் நடுவில் இருந்தும் அந்த நீரைப் பயன் படுத்திக்கொள்ளாமல் நாக்கு வறண்டு நிற்பதையும், பொழுது விடிந்த பின்பும் கண்ணை விழித்துப் பாராமல் எங்கும் இருட்டாக இருக்கிறது என்று தடுமாறுவதையும் ஒக்கும். அதாவது திருவருளைப் பயன்படுத்திக் கொள்ளாதது ஆன்மாவின் குறையே யன்றித் திருவருளின் குறையன்று.

பரப்பு அமைந்து கேள்மின்; இது பால்கலன்மேல் பூஞை
கரப்புஅருந்த நாடும் கடன். 39

பாற்குடத்தின் மேல் உள்ள பூனை பாலைக் கைவிட்டுக் கரப்பானைத் தின்ன ஓடுவது போல, மனத்தைப் புறம் போக விடாமல் ஒருமைப் பாட்டுடன் ஞானநூல்களைக் கேட்பது தான் திருவருளைப் பெறுவதற்கு வழி.

இற்றை வரை, இயைந்தும் ஏதும் பழக்கம்இல்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை. 40

திருவருளைத் துணையாகப் பெற்றாலன்றி ஆன்மாவுக்கு முத்திப் பேறு கிட்டாது.

5. அருள் உரு நிலை -
திருவருள் வடிவான குருவின் இயல்பு

அறியாமை உள்நின்று அளித்ததே, காணும்
குறி ஆகி நீங்காத கோ. 41

திருவருள், உயிர்க்கு உயிராய் உள்ளே மறைந்திருந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு

Koviloor Digital Library

தொழில்களைச் செய்தது போல ஐந்தாவதான அருளல் தொழிலைச் செய்வதற்குக் கண்ணால் காணும்படி குருநாதர் வடிவில் வெளிவரும்.

அகத்துஉறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் கண்பரோ தான் 42

ஒருவரின் நோயை அவரது வீட்டில் உள்ளவர் அறிந்து நீக்குவாரேயன்றிப் புறத்தில் உள்ளவர் அறிந்து நீக்குவது இல்லை. அதுபோல ஆன்மாவின் ஆணவமல மறைப்பை ஆன்மாவில் வியாபித்திருக்கும் திருவருள் குருவாய் வந்து நீக்குமேயன்றி வேறெதுவும் நீக்குவதில்லை.

அருளா வகையால் அருள்புரிய வந்த.
பொருள்ஆர் அறிவார் புவி. 43

படைத்தல் முதலிய நான்கு தொழில்களை மறைந்திருந்து செய்ததைப் போலவே, அருளல் தொழிலைச் செய்வதற்குத் திருவருள் தன்னை மறைத்துக்கொண்டு குருநாதர் வடிவத்தில் வந்திருக்கிறது என்பதைப் பக்குவர் அறிவார். அபக்குவர் அறியார்.

பொய்இருண்ட சிந்தைப் பொறியிலார், போதமாம்
மெய்இரண்டும் காணார் மிக. 44

உலக இன்பத்தில் நாட்டம் உடையவரும், ஆணவத்தால் அறியாமை கொண்ட மனத்தவரும், ஞான ஒளியற்றவரும் ஆன அபக்குவர் திருவருளின் வடிவையும், திருவருளால் அதிட்டிக்கப்படுகிற குருநாதர் வடிவையும் அறியார்.

பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி. 45

காட்டுவிலங்குகளைப் பிடிப்பதற்குப் பார்வை விலங்கு இருப்பது போலச் சகல வர்க்க ஆன்மாக்களை வசப் படுத்தத் திருவருள் எடுத்த குருநாதர் வடிவம் உள்ளது. இதை அபக்குவர் அறியார்.

Koviloor Digital Library

திருவருள் போர்த்திக் கொண்ட போர்வையே குருநாதர் வடிவம் என்பதை அபக்குவர் அறியார்.

எமக்குஎன்? எவனுக்கு எவைதெரியும்? அவ்வத்
தமக்கு, அவனை வேண்டத் தவிர். 46

குருநாதரால் என்ன பயன் என்று கேட்டால், எந்தக் கலை எவருக்குத் தெரியுமோ அவரால்தான் அந்தக் கலை பற்றிய ஐயங்களை நீக்கமுடியும். அதுபோல ஞானநூல்களில் உண்டாகும் ஐயங்களைக் குரு நாதரால் தான் நீக்க முடியும். எனவே ஞான நூல்களின் ஐயங்களைப் போக்கிக் கொள்வதே குருநாதரால் கிடைக்கும் பயன். இதனால் குருநாதரின் அவசியம் தெரிகிறது.

விடம், நகுலம் மேவினும்மெய்ப் பாவகனின் மீளும்
கடனில்இருள் போவதுஎவன் கண். 47

பாம்பு கடித்ததால் ஏறிய விடம் கீரிப் பிள்ளை நேரில் வந்தாலும் நீங்காது. கீரிப்பிள்ளையாகத் தன்னைப் பாவிக்கிற மாந்திரீகனால் விடம் நீங்கும். அதுபோல ஆணவமல மறைப்பு திருவருள் உடனிருந்த போதும் நீங்காது. திருவருளால் அதிட்டிக்கப்பட்ட குருநாதரால் நீங்கும். இதனாலும் குருவின் அவசியம் தெரிகிறது.

அகலது அரும்அருளை ஆக்கும்; வினைநீக்கும்
சகலர்க்கு வந்துஅருளும் தான். 48

சிவன் விஞ்ஞானகலரில் பக்குவம் உள்ளவர்க்கு உள் நின்று ஆணவத்தை நீக்கி அருள்புரிவான், பிரளயாகலரில் பக்குவம் உள்ளவர்க்கு முன்னின்று ஆணவத்தோடு கன்மத்தை நீக்க அருள்புரிவான். சகலரில் பக்குவமுள்ளவர்க்குக் குருநாதராக வந்து அருள்புரிவான், திருவருள் குருநாதராக வடிவம் கொள்வது சகலர்க்கு மட்டுமே ஆகும.

ஆர்அறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்
பேரறிவாளன் வாராத பின். 49

Koviloor Digital Library

பேரறிவாளனான சிவன் குருநாதராக வராவிட்டால் வீட்டு நெறியை எவரும் அறிய முடியாது. இதனாலும் குருநாதரின் அவசியம் தெரிகிறது.

ஞானம்இவன்ஒழிய நண்ணியிடும், நற்கல்அனல்
பானு ஒழியப் படின் 50

சூரிய காந்தக் கல்லில் சூரிய ஒளியால்தான் நெருப்பு உண்டாகும். அதுபோல உயிரிடத்தில் குருநாதரால்தான் ஞானம் உண்டாகும். இதனாலும் குருநாதரின் அவசியம் தெரிகிறது.

6. அறியும் நெறி - பேரறிவைப் பெறும் முறை

நீடும் இருவினைகள் நேராக நேர் ஆதல்
கூடும்இறை சக்தி கொளல். 51

நல்வினைப் பயனான இன்பத்தை விரும்புதலுமின்றி, தீவினைப் பயனான துன்பத்தை வெறுத்தலுமின்றி இருவகைப் பயன்களையும் ஒரு படித்தாகப் பாவித்தல் இருவினை ஒப்பாகும்.

இருவினை ஒப்பு ஏற்பட்டால் சத்தி நிபாதம் உண்டாகும்.

ஏகன் அனேகன் இருள், கருமம், மாயைஇரண்டு
ஆகஇவை ஆறு, ஆதி இல். 52

இறைவன், உயிர், ஆணவம், மூலகன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை என்ற ஆறும் அநாதிப் பொருள்கள்.

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர். 53

வினைகளைச் செய்கிற ஆன்மாவும், செய்யப்படுகிற வினைகளும், வினைகளால் வரும் பயன்களும், வினைப்பயன் களை ஊட்டுகிற இறைவனும் ஆகிய நான்கும் உண்டு. (இவை நான்கும் சைவசித்தாந்தத்தின் வினைக் கொள்கைகள்)

ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே, ஊனொடுஉயிர்
தான் உணர்வோடு ஒன்றாம் தரம். 54

Koviloor Digital Library

உடம்பு உயிரோடு ஒன்றுபட்டு நிற்கும் தன்மையைப் போல, உயிர் திருவருளோடு ஒன்றுபட்டு நிற்கும் தன்மை உடையது. (அதாவது உயிர் உடலோடு கூடாவிட்டால் உடல் நிலைக்காது? திருவருள் உயிரோடு கூடாவிட்டால் உயிர் நிலைக்காது?)

தன்நிறமும் பல்நிறமும் தான் ஆம்கல் தன்மைதரும்,
பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ. 55

பளிங்குக் கல்லின் சுயநிறத்தையும், அக்கல்லைச் சார்ந்த பொருள்களின் நிறத்தையும், சூரியனின் கதிர்கள் விளக்கம் செய்வது போல, ஆன்மாவின் சுய இயல்பையும், ஆன்மாவைச் சார்ந்த பொருள்களின் இயல்பையும் ஆன்மாவுக்கு திருவருளே விளக்கம் செய்கிறது.

கண்டுஒல்லை காணும்நெறி கண், உயிர் நாப்பண்ஒளி
உண்டுஇல்லை அல்லாது ஒளி. 56

காணும் கண்ணுக்கும் காணப்படுகிற உலகப் பொருள் களுக்கும் நடுவில் உள்ள கண் ஒளியால் உயிர் உலகப் பொருள் களைக் காணமுடிகிறது. அதபோலக் காணும் உயிருக்கும் காணப்படுகிற சிவத்துக்கும் நடுவில் உள்ள திருவருள் ஒளியால் உயிர் சிவத்தைக் காணமுடிகிறது.

புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை
மன்செயலது ஆக மதி. 57

உலகியலை நாடும் புலன்களின் செயலை ஆன்மா தன்செயலாகக் கருதுவது போலத் தன் செயல்கள் அனைத்தையும் திருவருளின் செயல்களாக ஆன்மா கருத வேண்டும். (அங்ஙனம் கருதி வந்தால் எல்லாம் சிவன் செயலாகி அதனால் விளையும் வினைப்பயனும் தாக்கமாட்டா)

ஓராதே, ஒன்றையம்உற்று உன்னாதே; நீமுந்திப்
பாராதே; பார்த்ததனைப் பார். 58

திருவருள் எப்படி இருக்கும் என்று ஆராயக் கூடாது. உலகப் பொருள்களைப் போலத் திருவருளைச் சுட்டியறிய நினைக்கக் கூடாது. திருவருள் தானாக ஆட்கொள்வதற்கு முன்,

Koviloor Digital Library

திருவருள் ஆட்கொள்ளும் திறத்தை அறிய முயலக் கூடாது. திருவருளைத் தியானித்தலை மட்டும் செய்ய வேண்டும்.

களியே மிகுபுல னாக்கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி. 59

பேரின்ப மகிழ்வே தியானப் பொருளாக எண்ணி, ஞான ஒளியில் ஆன்மா அடங்கி இருக்க வேண்டும்.

கண்டபடி யே, கண்டு காணாமை காணாமை
கொண்டபடி யே, கொண்டு இரு. 60

ஞானம், எப்படி வெளிப்பட்டதோ அப்படியே அதனை அனுபவிக்க வேண்டும்.

ஞானம் பெற்ற பின் அறியாமை தோன்றாதபடி திருவருளின் வசப்பட்டு நிற்க வேண்டும்.

(இங்ஙனம் குருநாதர் வழியாக கேட்டறிவதே அறியும் நெறியாகும்)

7. உயிர் விளக்கம் - உயிர் மலத்திலிருந்து நீங்கும் முறை

தூநிழல்,ஆர் தற்குஆரும் சொல்லார்; தொகும்இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம். 61

வெய்யிலில் வருந்துவோன் நிழலைக் கண்டவுடன் எவரும் சொல்ல வேண்டாமல் தானே நிழலை அடைவான். அதுபோல ஆன்மாவும் திருவருட் சிறப்பை அறிந்தவுடன் தானாகவே திருவருளைச் சாரும்.

தித்திக்கும் பால்தானும் கைக்கும்; திருந்திடும் நாப்
பித்தத்தின் தான்தவிர்த்த பின் 62

பித்தம் இருக்கிறவரை நாக்கிற்குப் பால் கசக்கும், பித்தம் நீங்கியவுடன் பால் தித்திக்கும். அதுபோல மலப்பற்று இருக்கிற வரை ஆன்மாவுக்குத் திருவருள் மறைப்பாற்றலாக நின்று மறைக்கும், மலப்பற்றுக் குறையக் குறைய மறைப்பாற்றல் திருவருளாக நின்று விளக்கம் செய்யும்.

Koviloor Digital Library

காண்பான் ஒளிஇருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விழும். 63

ஆணவத்தால் மயக்கமுற்ற ஆன்மாவுக்குத் திருவருள் தன்னைக் காட்டும் போது, ஆன்மா திருவருளைத் தன் முயற்சியால் கண்டதாக நினைக்கக்கூடாது. அப்படி நினைப்பது ஆணவ முனைப்பையே காட்டும்.

ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல். 64

திருவருளும் ஆணவமும் பிற பொருளை மறைக்கும் தன்மையில் ஒக்கும், ஆனால் திருவருள் மெய்ப் பொருளைக் காட்டும் தன்மையிலும், ஆணவம் பொய்ப்பொருளைக் காட்டும் தன்மையிலும் வேறுபடும்.

கிடைக்கத் தகுமோ, நற் கேண்மையார்க்கு அல்லால்,
எடுத்துச் சுமப்பானை இன்று. 65

அன்புள்ள சுற்றத்தாரைச் சார்ந்த வர்க்குத்தான் தம்மை எடுத்துச் சுமக்கும் துணையைப் பெற முடியும், அதுபோலத் திருவருளைச் சார்ந்த ஆன்மாவுக்குத்தான், தம்முடைய பிராரர்த்த வினையை ஏற்றுக் கொள்கிற துணையைப் பெற முடியும். (எடுத்துச் சுமத்தலாவது பிறர் துன்பத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவருக்குத் துணையாய் இருப்பது)

வஞ்ச முடன்ஒருவன், வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல். 66

இறைவன் ஆன்மாவுக்குச் சேமநிதியாக வைத்துள்ள பேரின்பத்தை மலமயக்கமாகிய வஞ்சத்தை உடைய ஆன்மா கவரமுடியாது. மல மறைப்பு நீங்கிய ஆன்மா திருவருள் துணையால் பேரின்பத்தைப் பெறமுடியும்.

தனக்கு நிழல்இன்றா ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள். 67

சூரிய ஒளியால், தனது ஒளி கவரப்பட்ட பளிங்குத் தூண் சூரிய ஒளியில் அடங்கி விடுவது போலத் திருவருளால், தனது

Koviloor Digital Library

அறிவிச்சை செயல்கள் முனைந்து நிற்காமல் கவரப்பட்ட ஆன்மா திருவருளில் அடங்கி விடும். அதாவது அந்நிலையில் ஆன்மா ஆணவம் ஒடுங்கிச் சிவமாம் தன்மை பெற்று விடும்.

உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருள்ஆர் நிலை 68

இருட்டில் உள்ள பொருளைக் காண விரும்பியவர் தழற்கொள்ளியை முன்னே நீட்டித் தாம் பின்னே நிற்பது போலச் சிவனைக் காண விரும்பிய ஆன்மா திருவருளை முன்னிட்டுத் தான் பின்னதாக அடங்கி இருக்க வேண்டும்.

ஐம்புலனால் தான்கண்டு அகன்றால் அதுஒழிய
ஐம்புலன்ஆர் தாம்ஆர் அதற்கு. 69

ஆன்மா ஐம்பொறிகளால் சிவத்தைக் காணமுயன்று காணமுடியாமல் திரும்பும். ஆகையால் சிவத்தைத் திருவருள் துணையின்றி ஐம்பொறியோ, ஆன்மாவோ காணமுடியாது.

தாமே தரும்அவரைத் தம்வலியி னாற்கருத
லாமே இவன்ஆர் அதற்கு. 70

சிவம் ஆன்மாவுக்குப் பேரின்பத்தைத் தானே தரும். அதற்குமுன் ஆன்மா தன் முயற்சியால் பேரின்பத்தைப் பெற நினைக்கக் கூடாது.

(மேலே கூறப்பட்டவை ஆணவத்தை நீக்கிக்கொள்ள வழிகள்)

8. இன்புறு நிலை - பேரின்பத்தைப் பெறும் முறை

இன்புறுவார் துன்பார்இருளின் எழும்சுடரின்
பின்புகுவார் முன், புகுவார் பின். 71

ஆணவ இருளை ஓட்டுவதற்குத் திருவருளை முன்வைத்து அதன் பின் நன்றி உணர்வோடு போகிறவர்கள் பேரின்பத்தை நுகர்வார்கள்.

Koviloor Digital Library

திருவருளைப் பின்வைத்து அதற்கு முன் தன்முனைப்போடு போகிறவர்கள் பிறவித் துன்பம் நுகர்வார்கள்.

இருவர் மடந்தையருக்கு என்பயன்? இன்பு உண்டாம்,
ஒருவன் ஒருத்தி உறின். 72

இரண்டு பெண்கள் மணந்து கொண்டால் அவர்களுக்கு இடையில் இன்பம் இல்லை. ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக மணந்து கொண்டால் இன்பம் உண்டு. அதுபோல ஆன்மாவும் மறைப்பாற்றலுமாகக் கூடியிருந்தால் பேரின்ப அனுபவம் இல்லை. திருவருள் துணையால் ஆன்மா சிவத்தைக் கூடினால் தான், பேரின்பம் கிட்டும்.

இன்புஅதனை எய்துவார்க்கு ஈயும்; அவர்க்குஉருவம்
இன்பகனம் ஆதலினால் இல். 73

சிவத்தை அடையும் போது ஆன்மாவுக்குச் சிவத்தினால் பேரின்ப அனுபவம் உண்டு. சிவத்துக்கு ஆன்மாவால் பேரின்ப அனுபவம் இல்லை. (ஏன் எனில் சிவத்துக்குப் பேரின்பமே திருமேனி).

தாடலைபோல் கூடியவை தான்நிகழா வேற்றுஇன்பக்
கூடலை, நீ ஏகம்எனக் கொள். 74

தாள் என்ற சொல்லும் தலை என்ற சொல்லும் கூடித் தாடலை என்ற கூட்டுச் சொல் உண்டாவது போலச் சிவமும் ஆன்மாவும் கூடிய நிலை பிரித்தறிய வாராத இன்பக் கூட்டுறவு ஆகும்.

முத்திநிலையில் சிவமும் ஆன்மாவும் கூடி உண்டாகிறதான பிரித்தறிய முடியாத கூட்டுறவு சுத்தாத்துவிதம் எனப்படும்.

ஒன்றாமலும் ஒன்றாது; இரண்டாலும் ஒசைஎழாது
என்றால், ஒன்று அன்று; இரண்டும் இல். 75

முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் ஒன்று என்று கூறினால் அவை ஒன்றுகூட வேண்டிய அவசியம் இல்லை.

முத்துநிலையில் சிவமும் ஆன்மாவும் வேறு வேறான இரண்டு என்று கூறினால் ஆன்மாவுக்குப் பேரின்ப அனுபவம் உண்டாகாது.

Koviloor Digital Library

முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் ஒன்றும் ஆகாமல், இரண்டுமாகாமல் இரண்டற்றதான அத்துவிதக் கலப்பாய் இருக்கும்.

உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரைஒழியப்
பற்றாரும் அற்றார் பவம். 76

பரமுத்தியை அடைந்தவர்களும், பரமுத்தியைப் பெறுவதற்கு உரிய தகுதி உடைய மௌன சமாதியை அடைந்தவர்களும், பேசா அனுபூதி யான மௌன சமாதியைப் பெறாமல் அதனின்று நீங்கி ஞான நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற ஞான நிலையில் நிற்பவர்களும் பிறவி அற்றவர் ஆவார்.

பேய், ஒன்றும் தன்மை பிறக்கம் அளவுமே;
நீ, ஒன்றும் செய்யாமல் நில். 77

பேய் பிடித்தவனுக்குத் தன்னறிவும் தன் செயலும் இன்றிப், பேய் அறிவும் பேய்ச் செயலும் உண்டாகும். அதுபோலச் சிவத்தினால் ஆட் கொள்ளப்பட்ட ஆன்மாவுக்குத் தன்னறிவும் தன் செயலும் கெட்டுச் சிவஞானமும் சிவச்செயலும் உண்டாகும். அந்நிலையில் அந்த ஆன்மா சிவமாம் தன்மை பெற்றதாகும்.

ஒண்பொருட்கண் உற்றார்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண். 78

சரியை, கிரியை, யோக ஆசாரங்களால் ஞானிக்கு வரக்கூடிய பயன் பேரின்பமேயன்றி வேறில்லை.

தூங்குபவன் கையில் உள்ள பம்பரம் தானே நழுவுவது போல, ஞானிகளின், சரியை, கிரியை, யோக ஆசாரங்கள் தாமே நழுவ வேண்டுமேயன்றி வலிந்து நீக்கப்படுபவன அல்ல.

மூன்றாய தன்மை, அவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத இன்பம், அதன் சொல். 79

முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் தம்முள் மிகவும் கலந்து நிற்கும் போது, காண்பவன், காணப்படுபொருள், காட்சி

Koviloor Digital Library

என்ற மூன்றும் பிரித்தறிய வாராதபடி உண்டாகும் இன்பமே பேரின்பம். அது சொல்லால் விவரிக்க முடியாதது.

இன்பில் இனிதுஎன்றல் இன்புஉண்டேல் இன்றுஉண்டாம்.
அன்பு நிலையே அது., 80

இன்பங்களுள்ளே மிக்க இன்பம் பேரின்பம், சிவத்திடம் பேரன்பு உண்டானால் அப்போதே பேரின்பம் உண்டாகும். ஏன் எனில் பேரன்புக்கு நிலைக்களம் பேரின்பமே.

9. ஐந்தெழுத்து அருள்நிலை - ஐந்தெழுத்தை ஓதும் முறை

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகும். 81

சைவ ஆகமங்களும், வேதங்களும், மற்ற ஞான நூல்களும் ஐந்தெழுத்தின் பொருளை உணர்த்தும் நூல்களாகும்.

இறை, சக்தி, பாசம், எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள். 82

சிவம், சத்தி, ஆணவம், மறைப்பாற்றல், உயிர் என்னும் ஐந்தும் ஓங்காரமான பிரணவத்துள் பொருந்தி உள்ளன.

ஓம் என்ற பிரணவத்துள் அ, உ, ம் என்னும் மூன்று எழுத்தொலிகள் உள்ளன. அவற்றுள் அகாரம் சிவம்; இதில் சத்தி அடங்கும். உகரம் உயிர். மகாரம் ஆணவம்; இதில் மறைப்பாற்றல் அடங்கும்.

ஊன நடனம் ஒருபால்; ஒருபால்ஆம்
ஞானநடம்; தான்நடுவே நாடு. 83

சிவாயநம என்ற ஐந்தெழுத்தில் ஊனநடனமான நகாரமும் மகாரமும் ஒரு பக்கத்தில் உள்ளன. ஞான நடனமான சிகாரமும் வகாரமும் மற்றொரு பக்கத்தில் உள்ளன. உயிராகிய யகாரம் நடுவே உள்ளது.

Koviloor Digital Library

ஆன்மாவின் பெத்த நிலையும், முத்தி நிலையும் ஐந்தெழுத்தில் அடங்குதல்

விரியமந மேவி, யவ்வை மீளவிடா; சித்தம்
பெரியவினை தீரப் பெறும். 84

நகாரமான மறைப்பாற்றல் உயிரைச் சார்ந்து இயக்கிய வுடன், மகாரமான ஆணவத்தின் ஆற்றல் விரிந்து யகாரமாகிய உயிரைப் பிறவியிலிருந்து மீளாதபடி தடுக்கும். (இந்த ஊன நடனம் பெத்த நிலையைக் குறிக்கும்)

உயிர் தனது மூலகன்மம் நீங்க வேண்டுமானால் வகாரமான திருவருள் துணையை நாடவேண்டும். திருவருள் துணையால் உயிர் சிகாரமான சிவத்தை அடையும். (இந்த ஞான நடனம் முத்தி நிலையைக் குறிக்கும்)

மாலார் திரோதம் மலம்முதலா மாறுமோ
மேல்ஆக மீளாவிடின் 85

பெத்த நிலையில் நமசிவய என்னும் தூல பஞ்சாக்கரத்தை ஓதினால் ஆணவமலம் நீங்காது. சிவயநம என்று ஓதுவதே சிறந்தது.

ஆராதி ஆதாரம்; அந்தோ அதுமீண்டு
பாராது மேல்ஓதும் பற்று. 86

ஆதாரமான சிகாரத்தை முன்வைத்தே ஓதி வருக. மீளவும் நகாரத்தை முன் வைத்து ஓதுகிற பற்று வேண்டா.

சிவம், முதலே ஆமாறு சேருமேல், தீரும்
பவம், இதுநீ ஓதும் படி. 87

சிவயநம என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதினால் பிறவிக்குக் காரணமான ஆணவமலம் ஒழியும். அதுவே ஓத வேண்டிய முறை.

வா,சி அருளி, அதை வாழ்விக்கும் மற்றுதுவே
ஆசுஇல் உருவமும்ஆம் அங்கு. 88

வகாரமாகிய திருவருட்சத்தி சிகாரமான சிவத்தை காட்டி ஆன்மாவைப் பேரின்பத்தில் வாழவைக்கும்.

Koviloor Digital Library

முத்திநிலையில் திருவருட்சத்தியே ஆன்மாவுக்குச் சொருபத் திருமேனியாக இருக்கும்.

ஆசுஇல்ந, வா நாப்பண் அடையாது; அருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு 89

சிவயநம என்ற சூக்கும பஞ்சாக்கரத்தில் வகார நகாரங்களுக்கு (அதாவது திருவருளுக்கும் மறைப் பாற்றலுக்கும்) நடுவில் யகாரமான உயிர் நிற்கிறது. இது பெத்த நிலை. எனவே பெத்தான்மாக்கள் சிவயநம என ஓதவேண்டும்,

சிவயசிவ என்ற அதிசூக்கும பஞ்சாக்கரத்தில் வகார சிகாரங்களுக்கு (அதாவது திருவருட் சத்திக்கும் சிவத்துக்கும்) நடுவில் யகாரமான உயிர் நிற்கிறது. இது முத்தி நிலை. எனவே உலகப்பற்றை அறவே விட்ட சீவன் முத்தர்கள் சிவயசிவ என்று ஓதவேண்டும்.

எல்லா வகையும் இயம்பும், இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து 90

'ஆன்மா திருவருளை விட்டு நீங்கி நிற்க முடியாது" என்பதை எண்ணி எல்லா நூல்களும் "பெத்த, முத்தியாகிய இருநிலையிலும் எல்லாம் தரவல்லது ஐந்தெழுத்தே" என்று கூறும்.

நமசிவய, சிவயநம, சிவயசிவ என்னும் மூவகை ஐந்தெழுத்துக்களும் (தம்மிடம் வகாரமும் யகாரமும் சேர்ந்தே நிற்பதைக் காட்டி) "திருவருளை விட்டு உயிர் நீங்கி நிற்க முடியாது" என்பதை எடுத்துரைக்கும்.

10. அணைந்தோர் தன்மை - ஞானிகள் ஒழுகும் முறை

ஓங்குஉணர்வின் உள்அடங்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்
தூங்குவர்மற்று ஏதுஉண்டு சொல். 91

சீவன்முத்தரான ஞானிகள் திருவருளில் அழுந்தி தம் உணர்வில் பேரின்பம் தேங்க ஆனந்த நித்திரையில் இருப்பர்.

சீவன்முத்தர்களுக்குப் பேரின்பம் நுகர்வதைத் தவிர வேறு எந்தச் செயலும் இல்லை.

Koviloor Digital Library

ஐந்தொழிலும் காரணர்க ளாம், தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக. 92

சுத்தமாயா புவனத்தில் சிவன் நடத்தும் ஐந்தொழில் களையோ, அசுத்தமாயா புவனத்திலும், பிரகிருதி மாயாபுவனத் திலும் திருவருளால் அதிட்டிக்கப்படுகிற காரணர்கள் செய்யும் தொழில்களையோ, உலக போகம் நுகரும் தொழில்களையோ சீவன் முத்தர்கள் பொருந்த மாட்டார்கள். அவர்கள் சிவானுபவம் ஒன்றற்கே உரியார்.

எல்லாம் அறியும் அறிவறினும் இங்குஇவர்ஒன்று
அல்லாது அறியார் அற. 93

எல்லாவற்றையும் ஒருசேர அறியும் ஞானம் பெற்றிருந்தும் சீவன் முத்தர்கள் திருவருள் ஞானத்தை மட்டுமே அறிவர்.

புலன்அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர்; போதார்
தலம்நடக்கும் ஆமை தக. 94

நிலத்தில் நடக்கும் ஆமை இடர்வந்தபோது தனது றுப்புக்களை உள்ளே அடக்கிக்கொள்வதுபோலச் சீவன் த்தர்கள் இடர் வருவதற்முன்பே ஐம்புலன்களையும் தம்முள் டக்கித் தமது முதல்வனான சிவத்திடம் அடங்கி இருப்பர்.

சீவன் முத்தர்கள் உலக விடயங்களில் புலன்களைச் செலுத்த ட்டார்கள்.

அவனைஅகன்று எங்குஇன்றாம்; ஆங்குஅவனாய் எங்கும்
இவனைஒழிந்து உண்டாதல் இல். 95

சிவம் எங்கும் நிறைந்த வியாபகம் உடையது. அதுபோலச் சீவன் முத்தர்கள் சிவமாம் தன்மை பெற்றிருப்பதால் எங்கும் நிறைந்த வியாபகம் உடையவர்.

உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு
எள்ளும் திறம்ஏதும் இல். 96

சீவன் முத்தர்கள் உள்ளேயும் வெளியேயும் எல்லாவற்றையும் சிவமாகவே காண்பவர்கள்.

Koviloor Digital Library

சீவன் முத்தர்கள் எல்லாவற்றையும் சிவமாகக் காண்பதால் எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாதவர் ஆவர்.

உறுந்தொழிற்குத் தக்க பயன்உலகம்; தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன் 97

ஆன்மாக்கள் பயன்கருதிச் செருக்கோடு செய்யும் வினைகளுக்குப் பிறவியே பயன். சீவன் முத்தர்கள் பயன் கருதாமலும் செருக்கின்றியும் செய்யும் வினைகளுக்குப் பேரின்பமே பயன்.

ஏன்ற வினை, உடலோடு ஏகும்; இடை யேறும் வினை
தோன்றில், அருளே சுடும். 98

சீவன் முத்தர்களின் பிராரர்த்த வினை உடலூழாய்க் கழிந்து போகும்.

சீவன் முத்தர்களிடம் நடுவிலே வினை தோன்றினால் அந்த ஆகாமிய வினையைத் திருவருளே ஏற்றுப் போக்கி விடும்.

மும்மை தரும்வினைகள் மூளாவாம்; மூதறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம். 99

இம்மை, மறுமை, அம்மைப் பயன்களைத் தருகிற வினைகள் சீவன் முத்தர்களைத் தாக்க மாட்டா. (அம்மை - வீடுபேறு).

சீவன் முத்தர்களுக்குப் பரமுத்தி இன்பம் சரீரம் பெற்ற இம்மையிலேயே கிட்டும்.

கள்ளத் தலைவர் துயர்கருதித் தம்கருணை
வெள்ளத்து அலைவர் மிக 100

பெத்தான்மாக்களின் துயரத்தை நீக்கும் பொருட்டுச் சீவன் முத்தர்கள் தமது கருணைப் பெருக்கால் உலகெங்கும் திரிவர்.

❀ ❀ ❀ ❀

Koviloor Digital Library

கொடிக்கவி

கொடிக்கவி, மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பதினோராவது நூல். இது உமாபதி சிவாச்சாரியரால் ஆக்கப்பட்டது. தில்லையில் ஏறாமல் தடைப்பட்ட கொடியை உமாபதி சிவம் நான்கு பாடல்கள் பாடித்தானே ஏறும் படிச்செய்ததால் கொடிக்கவி எனப் பெயர் பெற்றது.

1. உயிரின் குறிக்கோள்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; ஒன்று மேவிடில்,ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள் அடராது; உன் உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர், அருள் கூடும்படி கொடி கட்டினனே. 1

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்

ஒளி உள்ள போது இருள் தெரிவ தில்லை; ஒளி இல்லாத போது இருள் புலப்படும். இந்த அனுபவத்தைக் கொண்டு சமான்ய மக்கள், "ஒளியும் இருளும் ஒரே இடத்தில் இருக்க மாட்டா" என்று கூறுவார்கள்.

ஒளியும் இருளும் சூக்குமப் பொருள்கள். எனவே அவை இரண்டும் ஒரே இடத்தில் இருக்க முடியும் என்பதை ஆழ்ந்த அனுபவ ஞான முடையவர்கள் அறிவார்கள்.

திருவருள் உயிருக்கு அறிவு விளக்கம் செய்வதால் திருவருளை ஒளி என்ற சொல்லாலும், ஆணவம் உயிரின் அறிவை மறைப்பதால் ஆணவத்தை இருள் என்ற சொல்லாலும் சித்தாந்திகள் கூறுவார்கள்.

"திருவருளாகிய ஒளிக்கும், ஆணவமாகிய இருளுக்கும் இருப்பிடம் ஒன்றே தான். அந்த ஒன்று உயிர்தான்" என்கிறார் உமாபதிசிவம்.

Koviloor Digital Library

ஒன்று மேவிடில் ஒன்று ஒளிக்கும்

சூரிய ஒளியின் முன் இருள் தெரிவதில்லை. இருள் தெரியாமையால் இருள் அழிந்து விட்டது என்று கருதக்கூடாது. சூரிய ஒளி மிக்கு இருப்பதால் அவ்வொளியில் இருள் மறைந்து இருக்கிறது என்று நுனித்து அறிய வேண்டும்.

இரவில் ஓர் அறையில் சிறிய விளக்கு எரிந்தால் சிற்றொளியும் இருளும் காணப்படும். விளக்கு இருக்கிற இடத்தில் சிறிது ஒளி தெரியும். வெகுதொலைவில் விளக்கொளி தெரியாமல் இருளே தெரியும். அதாவது இருள் மிகுந்த இடத்தில் சிறிய ஒளி மறைந்து நிற்கிறது.

அதுபோல, உயிர் ஆணவத்தை அழுந்தப்பற்றினால் திருவருள் மறைந்து நிற்கும். உயிர் திருவருளை அழுந்தப் பற்றினால் ஆணவம் மறைந்து நிற்கும். அதாவது திருவருளாகிய ஒளியும் ஆணவமாகிய இருளும் ஒரே இடத்தில் இருந்தாலும் இவற்றுள் ஒன்று மேம்பட்டால் மற்றொன்று மறைந்து நிற்கும். இவற்றுள் எதுவும் அழிந்து விடுவதில்லை.

ஒளியை இருள் அடராது

ஆணவம் மேலிடும் போது திருவருள் மறைந்து நின்றாலும் ஆணவம் திருவருளைச் சென்று பற்றாது. அதாவது ஆணவம் உயிரைப் பந்திக்குமே தவிரத் திருவருளைப் பந்திக்காது.

திரிமலத்தே குளிக்கும் உயிர்

திருவருள் மேலிட்டு உயிர்க்கும் அறிவு விளக்கத்தைச் செய்யும், ஆணவம் மேலிட்டு உயிரின் அறிவை மறைக்கும். இவை மாறி மாறி நடக்கும்.

நல்வினை நுகர வரும்போது திருவருளின் உதவி உயிருக்குக் கிடைத்தாலும், தீவினை நுகர வரும் போது ஆன்மா, ஆணவ கன்ம மாயையான மும்மலத்தில் மூழ்கிக்கிடக்கும். மும்மலத்தில் மூழ்கும் நிலையே உயிர்க்குப் பெரும்பான்மையாக இருக்கிறது.

Koviloor Digital Library

அருள் கூடும்படி கொடி கட்டினேன்

திருக்கோயில்களில் திருவிழா நடப்பதும் கொடி ஏற்றுவதும் உலக நன்மை கருதியே நடக்கின்றன. கொடி ஏறினால் உலக உயிர்கள் இம்மையில் சுக போகமும் மறுமையில் பரபோகமும் பெறுவர். இவ்விரண்டும் திருவருளால் தான் பெற முடியும்.

மும்மலத்தில் மூழ்கிக்கிடக்கும் உயிர் ஈடேற்றம் பெற்றுத் திருவருளைப் பெறவேண்டும் என்னும் ஆசையால் (இத்தில்லை நகரில் திருக்கோயிலில் கோபுர வாசலில்) கொடி கட்டுகிறேன் என்று கூறுகிறார் உமாபதி சிவம்.

2. உயிருக்கு அருளும் முறைமை

பொருளாம் பொருள் ஏது? போது ஏது? கண் ஏது?
இருளாம் வெளி ஏது? இரவு ஏது? - அருளாளா
நீ புரவா வையம்எலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசல் கொடி. (2)

பொருளாம் பொருள் ஏது ... இரவு ஏது:

கொடிமரத்தின் மூன்றில் ஒரு பங்கு பூமியில் புதைக்கப் பட்டு, மற்ற இருபங்கு வானளாவி உயர்ந்து நிற்கிறது. இக்கொடி மரமானது பாதளத்தை ஊடுருவிய திருவடியையும் வானத்தை ஊடுருவிய திருமுடியையும் உடைய சிவனை நினைவூட்டுகிறது.

கொடிச்சீலை கொடிமரத்தைச் சுற்றி உச்சிவரை செல்கிறது. இக்கொடிச் சீலையானது சிவனை விட்டுப் பிரியாதிருக்கிற திருவருளை நினைவூட்டுகிறது.

கொடிச்சீலையின் ஒருமுனையில் இடபத்தின் வடிவம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்த இடபமானது, திருவருளின் வியாபகத்தில் அனாதியே தங்கியிருக்கிற ஆன்மாவை நினைவூட்டுகிறது.

கொடிமரத்தின் நடுப்பாகமானது ஆன்மா பிறப்பிற் பட்டு, ஆணவ கன்ம மாயையால் கட்டுண்டு வாழும் சகல நிலையை நினைவூட்டுகிறது.

Koviloor Digital Library

கொடிமரத்தின் அடிப்பாகமானது, ஆன்மா ஆணவத்தோடு மட்டும் கூடி அறிவின்றிக் கிடக்கும் கேவல நிலையை நினைவூட்டுகிறது.

பொருளாம் பொருள்	சிவன்	கொடிமரம்
போது(ஒளி)	திருவருள்	கொடிச்சீலை
கண்	உயிர்	இடபம்
இருளாம் வெளி	சகல நிலை	கொடிமரத்தின் நடுப்பாகம்
இருளாம் இரவு	கேவலநிலை	அடிப்பாகம்

அருளாளனான கூத்தப்பிரான் புரந்து வருகிற வையத்தில் உள்ள உலகாயதர் "சிவம் ஏது, திருவருள் ஏது, உயிர் ஏது, சகல நிலை ஏது, கேவல நிலை ஏது - ஒன்றும் இல்லை" என்கின்றனர்.

அருளாளனான சிவன், உயிர்களுக்குத் திருவருளைத் துணையாக வைத்து, உயிரைக் கேவல நிலையிலிருந்து மீட்' தனுவாதிகளை உதவிச் சகல நிலைக்கு உயர்த்தி, பின்பு நிலையான உயரிய இடத்துக்கு உயர்த்துகிறான்.

- இவை எல்லாம் கொடிமரத்தின் தத்துவங்கள்.

வையம் எல்லாம் அறிய

உலகில் வாழும் உலகாயதர் - பொருளாம் பொருள் (சிவன்) முதலியன இல்லை என்றவர்கள் - "அவை எல்லாம் உண்டு என்று தெரிந்து கொள்ளும் பொருட்டுக் கொடி கட்டுகிறேன்.

அதாவது பொருள் எல்லாவற்றுள்ளும் மேலான சிவபரம்பொருளும் உண்டு; சூரியனைக் காட்டுகிற அவனது ஒளி போல (போது - ஒளி), சிவத்தைக் காட்டுகிற திருவருளும் உண்டு; சூரிய ஒளியால் சூரியனைக் காண்கிற கண்போல, திருவருளால் சிவனைக் காண்கிற ஆன்மாவும் உண்டு; இருளும்

Koviloor Digital Library

ஒளியும் மாறி மாறி வரும் நிலை போலத் திருவருளால் அறிவு விளக்கமும் ஆணவத்தால் அறியாமையும் மாறி மாறி வருகிற சகல நிலையும் உண்டு; எப்போதும் இருளாகவே இருக்கிற இரவு போல எப்போதும் அறியாமை நிலவுகிற கேவல நிலையும் உண்டு. இதனை உலகாயதரும் சாமான்ய மக்களும் உணர வேண்டும் என்பதற்காகக் கொடி கட்டுகிறேன்.

நீ அறியக் கொடி கட்டினேன்

எனவே, தில்லைக்கூத்தனாம் அருளாளனே! உன்னையே சாட்சியாக வைத்துத் தில்லைக்கோயிலின் கோபுரவாசலில் கொடிகட்டுகிறேன்.

- இவ்வாறு உமாபதிசிவம் கூறுகிறார்.

3. திருவருளை வேண்டுதல்

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்க உணர்வு அரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்து அறிவுதம்மில் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி. (3)

கொடி கட்டுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, திருக்கோயில் திருவிழாத் தொடங்குகிறது என்பதை அறிவிப்பதற்காகக் கொடி கட்டுதல், மற்றொன்று, சமயவாதம் செய்வோர் தம்கோட்பாட்டைக் கூறப் பிற மதத்தாரை அழைப்பதற்காகச் கொடி கட்டுதல்.

கொடிகவியான இந்நூலின் முதல் இரண்டு செய்யுட்கள், முதற்காரணத்தை வைத்துப் பாடப்பட்டவை. பின்னிரண்டு செய்யுட்கள் இரண்டாம் காரணத்தை வைத்துப் பாடப் பட்டவை.

திருவிழாத் தொடக்கத்துக்காகக் கட்டிய கொடியையே இரண்டாம் காரணத்துக்காகவும் உமாபதி சிவம் கொள்கிறார். இதனைப் பின்னிரண்டு செய்யுட்களின் பொருள் அமைப்பால் ஊகித்து அறிய வேண்டும்.

Koviloor Digital Library

உணர்வரிய தன்மையன்

எல்லாம் வல்ல பரம்பொருள் எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு சொல்லாலும், மிக நுண்ணிய மனத்தாலும், நுண்ணுணர் வாலும் அறிய முடியாத தன்மை உடையது.

இப்படி எல்லாவற்றாலும் அறியப்படாதவன் சிவன் என்றால், அவன் எவ்வாற்றாலும் அறியப்படாத சூன்ய மாவான், மற்றும் அவனால் ஆன்மாவுக்குப் பயனில்லை.

ஆனால் சிவன், ஒருவாற்றான் அறியப் படுதலின்றியும் ஒருவாற்றான் அறியப் படாமையின்றியும் அமைதலின் அவன் சூனியமும் அன்று; ஆன்மாவுக்குப் பயன் படாதவனும் அன்று.

நோக்கிப் பிரித்து

சிவனின் சொரூப இலக்கணம், பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறிய வாராது. இதனை நுணுகி அறிந்து அவ்விரண்டு ஞானங்களையும் பிரித்து நீக்கிப் பதிஞானத்தால் சிவஞானி காண்பான்.

சிவஞானி அவனருளே கண்ணாகக் கொண்டு காண்பதால், அப்போது திருவருள் ஞானம் சிவனது சொரூபத்தைச் சிவஞானி காணுமாறு செய்யும்.

அறிவு தம்மில் பிரியாமை

சிவனது அறிவிச்சை செயல்கள், ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை எப்போதும் பிரியாதிருக்கும் என்பதைச் சிவஞானிகள் அறிவார்கள்.

திருவருள் ஞானத்தால் இதை அறிந்த சிவஞானியான குருநாதரை அணுகிப் பக்குவான்மாக்கள் இதனை அறியமுடியும்.

அருள்நல்கக் கொடி (கட்டினேன்)

இந்தச் சித்தாந்த உண்மையைக் குருநாதரை அணுகிப் பக்குவான்மாக்கள் அறிந்து கொள்வதற்குச் சிவன் திருவருள் புரிய வேண்டிக் கோபுர வாசலில் கொடி கட்டினேன்.

- இவ்வாறு உமாபதிசிவம் கூறுகிறார்.

Koviloor Digital Library

4. திருவைந்தெழுத்து விளக்கம்

அஞ்சு எழுத்தும்எட்டு எழுத்தும், ஆறு எழுத்தும் நாலு எழுத்தும்
பிஞ்சு எழுத்தும் மேலைப்பெரு எழுத்தும் - நெஞ்சு அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி. (4)

மந்திரம் என்பது பிரணவம், பீசம், அக்கரம், கோடி என்னும் நான்கு அங்கங்களை உடையது. ஓம் கம் கணபத்யாய நம: என்ற மந்திரத்தில் ஓம் - பிரணவம்; கம் - பீசம்; கணபத்யாய - அக்கரம்; நம: - கோடி, (கோடி அந்தம் என்றும் வழங்கும்)

அஞ்செழுத்து

நமசிவய, சிவயநம, சிவயசிவ என்பவற்றில் ஒவ்வொன்றிலும் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. எனவே இவை, அஞ்செழுத்து என்றும் பஞ்சாக்கரம் என்றும் வழங்கும்.

நமசிவய - தூல பஞ்சாக்கரம்

சிவயநம - சூக்கும பஞ்சாக்கரம்

சிவயசிவ - அதிசூக்கும பஞ்சாக்கரம்

நமசிவய என்பது நமசிவாய என்றும், சிவயநம என்பது சிவாய நம என்றும் வழங்கும்.

உலகபோகத்தை விரும்புகிறவர் நமசிவாய என்று ஓதவேண்டும். முத்திப்பேற்றை விரும்புகிறவர் சிவயாநம என்று ஓதவேண்டும். உலகப்பற்றை அறவே விட்ட சீவன்முத்தர் ஓதுவது சிவயசிவ.

சிவயநம என்பதில் ஒவ்வொரு எழுத்தும். ஒவ்வொரு பொருளைத்தரும். எனவே ஒவ்வொரு எழுத்தும் ஓரெழுத்தொரு மொழியாகிப் பதம் எனவும் கூறப்படும். சுந்தரர் தம் தேவாரத்தில் அஞ்செழுத்தை அஞ்சுபதம் என்று கூறி உள்ளார்.

Koviloor Digital Library

சி என்பது சிவம்

வ என்பது திருவருட்சத்தி

ய என்பது உயிர்

ந என்பது மறைப்பாற்றல்

ம என்பது மலம்

சிவயநம என்பதில் சிவ என்பது இறைப் பகுதி. ய என்பது உயிர்ப் பகுதி. நம என்பது தளைப்பகுதி. எனவே சிவயநம என்பது இறை, உயிர், தளை மூன்றையும் குறிப்பதை அறியலாம்.

மற்றும் சிவ என்பது ஞான நடம். சிவ என்பது யகரமான உயிரைச் சிவமாம் தன்மை பெறச் செய்வதால் ஞானநடம் ஆயிற்று. நம என்பது ஊனநடம். நம என்பது யகரமாகிய உயிரைப் பிறப்பில் ஆழ்த்துவதால் ஊன நடம் ஆயிற்று. (ஊனம் - பிறப்பு)

எட்டெழுத்து

ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம என்பது எட்டெழுத்து. (எழுத்து எண்ணும் போது புள்ளி பெற்ற மெய்யெழுத்துக்களை நீக்கி மற்றைய எழுத்துக்களையே எண்ண வேண்டும்).

ஓம்	இபிரணவம்	ஒருஎழுத்து
ஹாம் ஹௌம்	பீசம்	இருஎழுத்து
சிவாயநம	அக்கரம்	ஐந்தெழுத்து

ஆக எட்டெழுத்தாயின.

ஆறெழுத்து

ஓம் சிவாயநம என்பது ஆறெழுத்து

Koviloor Digital Library

நாலெழுத்து

ஓம் சிவாய என்பது நாலெழுத்து. சிவயசிவ என்பதில் ஈற்றில் உள்ள இரண்டெழுத்தை நீக்கிச் சிவாய என்றோ சிவய என்றோ உச்சரித்தாலும் அது அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றே கூறப்படும்.

எழுத்துக்கள் கூடினாலும் குறைந் தாலும் அவை பஞ்சாக்கரம் என்றே வழங்கப்படும் என்று சிவஞான முனிவர் தெரிவிக்கிறார். எனவே அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து பேதப்பட்டாலும் இவை யாவும் பஞ்சாக்கரம் என்றே வழங்கப்படும்.

பிஞ்செழுத்து

சிவாயநம என்பதில் உள்ள வகரம் பிஞ்செழுத்தாகும், வகரம் திருவருட்சத்தியைக் குறிக்கும். இதுவே உயிரோடு கூடிநின்று அவ்வுயிர் பக்குவப்பட்டபின் சிவத்தைக் காட்டுகிறது. பிஞ்சு முதலில் தோன்றிப் பின்பு பழமாதலைப் போலத் திருவருள் முற்பட்டு நின்று பின்பு சிவத்தைக் காட்டுதலின் வகரம் பிஞ்சு எழுத்து எனப்பட்டது.

பெருஎழுத்து

சிவாயநம என்பதில் உள்ள சிகரம் மேலைப் பெரு எழுத்தாகும். திருவருளின் துணையால் உயிர் இறுதியில் பெறத்தக்க பெரும் பேறு சிவம் ஆகையால் சிகரம் மேலைப் பெரு எழுத்து எனப்பட்டது.

பேசும் எழுத்து

சிவாயநம என்பதில் உள்ள வகரம் பேசும் எழுத்தாகும்.

திருவருள் ஞானம் உயிரோடு கூடி அறிவு விளக்கம் செய்யும் முறையில் தொடர்பு கொள்வதால் பேசும் எழுத்து எனப் பட்டது.

Koviloor Digital Library

பேசா எழுத்து

சிவாயநம என்பதில் உள்ள சிகரம் பேசா எழுத்தாகும். முத்தியில் சிவமும் ஆன்மாவும் அத்துவிதக்கலப்புற்று இருக்கும் போது உயிர் சிவத்தால் பேரின்பம் நுகரும். ஆனால் சிவம், ஆன்மாவால் எந்த விகாரமும் இன்றி இருக்கும். இதனால் சிவம் பேசா எழுத்து எனப்படும்.

கூசாமல் காட்டக் கொடி (கட்டினேன்)

இது காறும் கூறியவை போன்ற ஐந்தெழுத்தின் அதிநுட்ப மான செய்திகள் அனைத்தையும் பக்குவான் மாக்களுக்கு எளிமையாக விளக்கிக் காட்டும் பொருட்டுக் கோபுர வாசலில் கொடி கட்டுகிறேன்.

- இவ்வாறு உமாபதி சிவம் கூறுகிறார்.

* * * * *

4. உண்மை நெறி விளக்கம்

(தசகாரியம் - ஞானப்படிகள் பத்து)

இந்த நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பதின் மூன்றாவது நூலாக இடம் பெற்றிருக்கிறது. இது உமாபதி சிவாச்சாரியாரால் ஆக்கப்பட்டது. காலம் கி.பி.1312.

இந்த நூல் ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனது. ஆறு செய்யுட்களை உடையது. ஆணவத்தில் கட்டுண்ட உயிர், கட்டு நீங்கி இறைவனை அடைவதற்குரிய தசகாரியம் என்னும் பத்து படி நிலைகளை விளக்குகிறது. பத்து வகையான ஞானப்படிகள் (1) தத்துவ ரூபம் (2) தத்துவ தரிசனம் (3) தத்துவ சுத்தி (4) ஆன்ம ரூபம் (5) ஆன்ம தரிசனம் (6) ஆன்ம சுத்தி (7) சிவ ரூபம் (8) சிவ தரிசனம் (9) சிவ யோகம் (10) சிவபோகம்.

Koviloor Digital Library

தசகாரியங்கள் - பொதுவான விளக்கம்

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி

மண்முதல் சிவம் அது ஈறாம் வடிவு காண்பதுவே ரூபம்
மண்முதல் சிவம் அது ஈறாம் மலம், சடம் என்றல் காட்சி
மண்முதல் சிவம் அது ஈறாம் வகைதனில் தான் நிலாது,
கண்நுதல் அருளால் நீங்கல், சுத்தியாய்க் கருதும் அன்றே. 1

1. தத்துவ ரூபம்

முப்பத்தாறு தத்துவங்களின் வடிவு காண்பதே தத்துவ ரூபம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றம், ஒடுக்கம், இயல்புகள், செயற்பாடுகள் ஆகியவற்றைச் சாத்திர நூல் வாயிலாக அறிவது தத்துவ ரூபமாகும்.

2. தத்துவ தரிசனம்

முப்பத்தாறு தத்துவங்களும் மலம், சடம் என்று அறிவது தத்துவ தரிசனம் என்று உண்மை நெறிவிளக்கம் கூறுகிறது.

அதாவது தத்துவங்கள் மாயையில் தோன்றி மயக்கத்தைச் செய்வதால் மலம் என்றும், அறிவில்லாதன ஆகையால் சடம் என்றும் அறிந்து பின்பு அவை சடமாயினும் அறிவித்தாலன்றி அறிய முடியாத ஆன்மாவுக்கு அறிவு விளக்கம் உண்டாக வேண்டி இறைவனால் தரப்பெற்றவை என்றும், தத்துவங்களால் வரும் அறிவு சட அறிவே என்றும் தெளிவாக அறிவது தத்துவ தரிசனம் ஆகும்.

3. தத்துவ சுத்தி

முப்பத்தாறு தத்தவங்களில் தோய்ந்து நிற்காமல் திருவருளால் ஆன்மா அவற்றினின்றும் நீங்கி நிற்பது தத்துவ சுத்தி என்று உண்மைநெறி விளக்கம் கூறுகிறது.

Koviloor Digital Library

அதாவது “ ஆணவ மலப்பற்று அறுவதற்காகவே தத்துவக் கூட்டத்தை இறைவன் ஆன்மாவுக்குத் தந்துள்ளான். எனினும் ஆணவமும் தத்துவக் கூட்டமும் சடம்; ஆன்மா அறிவுடைப் பொருள். எனவே ஆன்மா தத்துவக்கூட்டத் தொடர்பு கொள்ளுவது பொருத்தமற்றதாகும்” என்பதை அறிந்த ஆன்மா திருவருள் துணையால் தத்துவங்களின் தொடர்பில் பற்றற்று நிற்பதே தத்துவ சுத்தி ஆகும்.

ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி

பாய் இருள் நீங்கி ஞானம் தனைக்காண்டல் ஆன்மரூபம்
நீயும் நின்செயல் ஒன்று இன்றி நிற்றலே தரிசனம் தான்;
போய் இவன் தன்மை கெட்டுப் பொருளில் போய் அங்குத் தோன்றாது
ஆய்விடில் ஆன்மசுத்தி அருள் நூலில் விதித்தவாறே. 2

4. ஆன்ம ரூபம்

ஆணவத்தால் அறிவு மறைக்கப்பட்ட ஆன்மா மாயா மலத்தால் சிறிது அறியாமை நீங்கப் பெறுகிறது. எனவே ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்ற ஞானத்தைப் பெறுவது ஆன்மரூபம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது “ஆன்மா ஆணவத்தைச் சார்ந்த போது அறியாமை மயமாயிற்று; பிறகு மாயையைச் சார்ந்த போது சிறிது அறிவு பெற்றுத் தத்துவங்களே நாம் என்று கருதும்படி தத்துவ மயமாயிற்று. இவ்வியல்புகளை உணர்ந்து “ஆன்மா சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையது” என்று அனுபவத்தால் அறிவது ஆன்ம ரூபமாகும்.

5. ஆன்ம தரிசனம்

ஆன்மாவின் அறிவும் செயலும் திருவருளாலேயே நிகழ்கின்றன. எனவே ஆன்மாவுக்கென எந்த ஒரு செயலும் இல்லை என்று அறிவது ஆன்ம தரிசனம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

Koviloor Digital Library

அதாவது, "ஆன்மா தத்துவக் கூட்டத்தால் அறிவு பெற்றாலும் தத்துவங்கள் சடமாகலின் தாமாக இயங்க மாட்டா; அவை திருவருளாலேயே இயங்குகின்றன. எனவே ஆன்மாவின் அறிவும் செயலும் திருவருளாலேயே நிகழ்கின்றன" என்பதை அனுபவத்தால் அறிவது ஆன்ம தரிசனமாகும்.

6. ஆன்ம சுத்தி

ஆன்மா தன் செயலற்று திருவருளில் சென்று அதனுள் அடங்கி நிற்பது ஆன்ம சுத்தி என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது, "ஆன்மா தன் செயலால் ஆவது எதுவும் இல்லை; எல்லாம் சிவன் செயலே" என்று அனுபவத்தால் உணர்ந்து திருவருளில் அழுந்தி நிற்பது ஆன்ம சுத்தியாகும்.

சிவ ரூபம்

எவ்வடிவுகளும் தான் ஆம் எழில்பரை வடிவுஅது ஆகிக்,
கவ்விய மலத்து ஆன்மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வம்விண்டு அகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்று
செவ்வியே உயிருள் காண்டல் சிவரூபம் ஆகும் அன்றே 3

7. சிவ ரூபம்

சிவன் திருவருட்சத்தியைத் திருமேனியாகக் கொண்டு, மலத்தால் கவ்வப்பட்ட ஆன்மாவை ஈடேற்றம் செய்யும் பொருட்டு மாயையிலிருந்து தனு, கரண, புவன, போகங்களைப் படைத்தும், நிலைபெறுவித்தும், ஒடுக்கியும் பல பிறவிகளை ஆன்மாவுக்குக் கொடுத்து அறிவு விளக்கம் செய்து ஆன்மா பக்குவம் எய்திய போது குருவாகவும் திருமேனி தாங்கிக் காட்சி தந்து தானாக்கித் திருவருளோடு கூட்டி மேலாக்குவான் என்று அறிந்து குருவையே சிவமாகக் காண்பது சிவரூபம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது, "சிவன் திருவருட்சத்தியைத் திருமேனியாகக் கொள்பவன்; எல்லாப் பொருளிலும் கலந்து ஒன்றாய்

Koviloor Digital Library

இருப்பவன்; ஆணவத்தால் கவ்வப்பட்ட ஆன்மாவை ஈடேற்றம் செய்ய ஆன்மாவுக்குத் தனு, கரண, புவன, போகங் களை வழங்குபவன். ஆன்மாவுக்கப் பல பிறவிகளைத் தந்து ஆன்ம அறிவை விளக்கி மலபரிபாகம் உண்டாக்குபவன். திருவருட் சத்தியை ஆன்மாவிடம் பதிப்பவன். குருவாக எழுந்தருளி ஆன்மாவை உயர்த்துபவன்" என்று சிவனது இயல்புகளை ஆன்மா அனுபவத்தால் அறிவது சிவ ரூபமாகும்.

சிவ தரிசனம்

பரை, உயிரில் யான் எனது ஒன்றற நின்றது அடியாம்;
பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றல், அதுமுகமாம்;
உரைஇறந்த சுகம் அதுவே முடிஆகும் என்றுஇவ்
உண்மையினை மிகத் தெளிந்து பொருள் வேறு ஒன்று இன்றித்
தரைமுதலில் போகாது, நிலையினில் நில்லாது
தற்பரையில் நின்று அழுந்தாது, அற்புதமே ஆகித்
தெரிவு அரிய பரம ஆனந்தத்தில் சேர்தல்
சிவன் உண்மைத் தரிசனமாய்ச் செப்பும் நூலே 4

8. சிவ தரிசனம்

சிவம் குருவாக எழுந்தருளி உபதேசித்தவுடன் யான், எனது என்னும் பற்று அறவே நீங்கி ஆன்மா திருவருளை அறியும். இது திருவடி தரிசனம்.

திருவடியோடு ஒன்றிய ஆன்மா எங்கும் எதிலும் சிவனைக் காணும், இது திருமுக தரிசனம்.

அந்நிலையில் குருவின் உபதேசத்தால் எதையும் பேச முடியாத நிலைமை அடைந்து பரசுகத்தை அடைதல் திருமுடி தரிசனம். இந்த மூன்று உண்மைகளை அனுபவத்தால் தெளிவாக உணர்ந்து சிவத்தைத் தவிர வேறு எதிலும் தொடர்பு கொள்ளாமல் நான் பிரமம் என்னும் பசு ஞானத்தில் நில்லாமல் எங்கும் எதிலும் சிவத்தைக் காணும் அனுபவம் சிவ தரிசனம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

Koviloor Digital Library

அதாவது சிவம் குருவாக வந்து ஆட்கொண்டபோது எங்கும் எதிலும் சிவமாகக் காணும் அனுபவம் சிவ தரிசனமாகும்.

சிவ யோகம்

எப்பொருள் வந்து உற்றிடினும், அப்பொருளைப் பார்த்து, அங்கு
எய்தும் உயிர்தனைக் கண்டு, இங்கு அவ்வுயிர்க்கு மேலாம்
ஒப்பில் அருள் கண்டு, சிவத்து உண்மைகண்டு, இங்கு
உற்றது எல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே, நினைப்பும் அதுதானே,
தரும் உணர்வும் பொசிப்பும் அதுதானே ஆகி,
எப்பொருளும் அசைவு இல்லை என அந்தப் பொருளோடு
இசைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே. 5

9. சிவ யோகம்

எங்கும் எதிலும் சிவமாகக் காணும் அறிவைப் பெற்றிருத்தும் ஒரோவழி மல வாசனையால் ஒருபொருளை உலகப் பொருளாக நினையும் நினைவு வந்தால், அப்பொருளுக்குள் உயிர் இருப்பதையும், உயிருக்குள் திருவருள் இருப்பதையும், திருவருளே சிவமாகத் திகழ்வதையும் உற்றறிந்து, பார்க்கப்படும் பொருளையே சிவமாக உணர்ந்து அச்சிவம் வேறு, நாம் வேறு என்ற உணர்வு தோன்றாதபடி சிவத்தோடு ஆன்மா உள்ளும் புறமும் ஒத்து ஒன்றாய் நிற்பதே சிவயோகம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது ஆன்மா சிவத்தோடு உள்ளும் புறமும் ஒத்து ஒன்றாய்ச் கூடியிருப்பது சிவயோகமாகும்.

சிவ போகம்

பாதகங்கள் செய்திடினும், கொலை, களவு, கள்ளுப்
பயின்றிடினும், நெறியல்லா நெறி பயிற்றிவரினும்
சாதிநெறி தப்பிடினும், தவறுகள் வந்திடினும்,
தனக்குஎன ஓர்செயல் அற்றுத்தான் அதுவாய் நிற்கில்,

Koviloor Digital Library

நாதன் அவன் உடல் உயிராய், உண்டு உறங்கி, நடந்து
நானா போகங்களையும் தானாகச் செய்து
பேதம் அறநின்று, இவனைத்தான் ஆக்கிவிடுவன்;
பெருகு சிவபோகம் எனப் பேசும் நெறி இதுவே 6

10. சிவ போகம்

சிவஞானி தன்வசமிழந்து எங்கும் எதிலும் சிவத்தைக் காணும் போது பழக்க வாசனையால் பாதகங்கள் செய்தாலும், கொலை, களவு, கள்ளுண்ணல் என்பவற்றைச் செய்தாலும், நெறியல்லா நெறியில் பழகினாலும், சாதி ஒழுக்கம் தவறினாலும், வேறுதவறுகள் செய்தாலும், தனக்கென எச்செயலுமின்றித் தான் சிவமேயாகி நின்றால் சிவம் அந்த ஆன்மாவின் உடலுக்கு உடலாயும், உயிருக்கு உயிராயும் தானும் உண்டு, தானும் உறங்கி, நானா போகங்களையும் சிவபோகமாக ஆக்கி ஆன்மாவைத் தானாக்கி விடுவான். இதுவே சிவபோகம் என்று உண்மை நெறி விளக்கம் கூறுகிறது.

அதாவது சிவமாம் தன்மைபெற்ற ஆன்மா சிவத்துள் ஒடுங்கிச் சிவபோகத்தை நுகர்வது சிவ போகம் ஆகும்.

தசகாரியங்கள் - சிறப்பான விளக்கம்

தத்துவ ரூபம் முதலிய பத்து செயற்பாடுகளும் முன் கூறப் பட்ட அதே வரிசை முறையில் அனுபவத்துக்கு வாரா. ஒரு செயற்பாட்டில் வேறு செயற்பாடுகள் இணைந்து அனுபவத்துக்கு வரும்.

அதாவது ஆன்ம ரூபத்தில் தத்துவ ரூபமும், தத்துவ தரிசனமும் இணைந்து அனுபவத்துக்குவரும். சிவ ரூபத்தில் தத்துவ சுத்தியும், ஆன்ம தரிசனமும் இணைந்து அனுபவத்துக்கு வரும். சிவ தரிசனத்தில் ஆன்ம சுத்தி இணைந்து அனுபவத் துக்கு வரும். சிவ யோகம், சிவ போகம் என்ற செயற்பாடுகள் தனித்தனி அனுபவங்களாக விளையும்.

Koviloor Digital Library

எனவே தத்துவ ரூபம் முதலிய தசகாரியங்கள் எண்ணிக் கையில் பத்தாக எண்ணப் பட்டுப் பத்து படிநிலைகளாகக் கூறப் பட்டாலும் அனுபவத்துக்கு வரும்போது ஐந்து படிநிலைகளாகச் சுருங்கிவிடும். இவ்வாறு இணைந்து சுருங்கி வரும் முறையே சிறப்பு விளக்கங்களாக அமைகின்றன. இந்த இணைப்பு முறை சிவஞான போதத்தில் 7, 8, 10, 11 ஆம் நூற்பாக்களில் உணர்த்தப் பட்டுள்ளன.

சி.போ. 7ஆம் நூற்பா

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது; அசத்துஇலது; அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

இந்த நூற்பாவில், "இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" என்ற தொடரில் "ஆன்மா சார்ந்ததன் வண்ண முடையது" என்ற ஆன்ம இயல்பு கூறப்படுவதால் இத்தொடர் ஆன்ம ரூபத்தைக் குறிக்கிறது.

மற்றும் "அசத்து இலது" என்ற தொடரில் "தத்துவங்கள் தோன்றி, நின்றழியும் சூனியம்" என்பது உணர்த்தப்படுவதால் இத்தொடர் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் இரண்டையும் குறிக்கிறது.

எனவே 7 ஆம் நூற்பாவில் "ஆன்ம ரூப அனுபவத்தில் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் என்ற அனுபவங்கள் இணைந்து அறியவரும்" என்பது உணர்த்தப்பட்டது.

சி.போ. 8 ஆம் நூற்பா

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த, விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

இந்நூற்பாவில், "தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த" என்ற தொடரில் சிவனே குருவாக வந்து உபதேசிப்

Koviloor Digital Library

பான் என்னும் சிவத்தின் இயல்பு கூறப்படுவதால் இத்தொடர் சிவ ரூபத்தைக் குறிக்கிறது.

"விட்டு" என்ற சொல்லில் தத்துவக் கூட்டத்திலிருந்து விடுபட்டு நிற்றலான தத்துவ நீக்கம் கூறப்படுவதால் இச்சொல் தத்துவ சுத்தியைக் குறிக்கிறது.

"அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே" என்ற தொடரில் திருவருளாலேயே ஆன்மாவின் அறிவும் செயலும் நிகழ்கின்றன என்பது குறிப்பாய் உணர்த்தப்படுவதால் இத்தொடர் ஆன்ம தரிசனத்தைக் குறிக்கிறது.

எனவே 8 ஆம் நூற்பாவில், சிவ ரூப அனுபவத்தில் தத்துவ சுத்தியும், ஆன்ம தரிசனமும் ஆகிய அனுபவங்கள் இணைந்து அறியவரும் என்பது உணர்த்தப்பட்டது.

சி.போ. 9 ஆம் நூற்பா

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி விதிஎண்ணும் அஞ்செழுத்தே.

இந்த நூற்பாவில் "ஞானக் கண்ணினில் சிந்தை நாடி" என்ற தொடரில் திருவடி ஞானத்தால் தனது மனத்துள்ளே ஆராய்ந்து சிவனைக் காணும் போது குருவே சிவம் என்றும், எங்கும் எதிலும் சிவமே உளது என்றும், சிவக்காட்சி அனுபவம் புலப்படும் என்று கூறுவதால் இத்தொடர் சிவ தரிசனமாகும்.

"பாசம் ஒருவ" என்ற தொடரில் ஆன்மா பாசம் நீங்கித் தன் செயலற்றுத் திருவருளில் அழுந்தி நிற்கும் என்று குறிப்பிடுவதால் இத்தொடர் ஆன்ம சுத்தியைக் குறிக்கும்.

எனவே 9 ஆம் நூற்பாவில் "சிவ தரிசன அனுபவத்தில் ஆன்ம சுத்தி அனுபவமும் இணைந்து அறியவரும்" என்பது உணர்த்தப்பட்டது.

Koviloor Digital Library

சி.போ. 10 ஆம் நூற்பா

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

இந்நூற்பாவில், "ஏகன் ஆகி" என்ற தொடர் ஆன்மா தன்செயலற்று முதல்வனோடு ஒன்றுபட்டு நிற்கும் என்று குறிப்பிடுவதால் இத்தொடர் சிவ யோகம் ஆகும். இந்தத் தசகாரிய அனுவத்தோடு இணைந்து வருகிற மற்றொரு தசகாரியம் இல்லை.

சி.போ. 11 ஆம் நூற்பா

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

இந்த நூற்பாவில், "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்ற தொடர், "ஆன்மா இறவாத இன்ப அன்பினால் திருவடிக்கண் சிவபோகத்தை நுகரும்" என்று குறிப்பிடுவதால் இத்தொடர் சிவபோகம் ஆகும். (இந்தத் தசகாரிய அனுபவத் தோடு இணைந்து வருகிற மற்றொரு தசகாரியம் இல்லை)

பத்துபடி முறைகளாகக் குறிக்கப்படும் தசகாரியங்களைச் சிவஞான போத நூற்பாக்களில் ஐந்து படிநிலைகளாக மெய்கண்டார் அடக்கிக் காட்டியிருப்பதே சிறப்பான விளக்கமாகும்.

❑ ❑ ❑ ❑

மேற்கண்ட உமாபதி சிவத்தின் "அட்டகத்தின்" (4) நான்கு நூல்களுக்கு முழுயான தெளிவு கூறப்பட்டது. மீதமுள்ள (4) நான்கு நூல்கள் அமரர் தா.ம. வெள்ளைவாரணம் அவர்கள் முழுமையான தெளிவு நூல் செய்ய இறையருள் கூட்டவில்லை. எனவே அதிமுக்கியமாக கருதப்படாத அந்நான்கு நூல்களுக்கு அவர்கள் முன்னம் எழுதி அளித்த குறிப்புரைகளை பின்னே சேர்க்கப்பட்டு அட்டக நூல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

5. வினாவெண்பா

வினா வெண்பா, மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்பதாவது நூல். இது உமாபதி சிவாச்சாரியாரால் ஆக்கப் பெற்றது. இந்த நூல் 13 வெண்பாக்களால் ஆனது. உமாபதி சிவம் தம் ஆசிரியரிடம் வினாவி அறிந்த நுட்பமான செய்திகளை வினாவாக வெண்பா வடிவில் அமைத்திருப்பதால் வினாவெண்பா எனப் பெயர் பெற்றது. இந்நூலில் வினாக்கள் மட்டுமே உள்ளன. காலம் 1297

இந்நூலில் கண்ட செய்திகளுள் சில:

1. **வினா:** ஒளியும் இருளும் வியாபகப் பொருள்கள். ஆகவே இரண்டும் ஒரே இடத்தில் இருக்க முடியும். ஆனால் ஒளியுள் இருள் ஒடுங்கியே இருக்கும். அது போல ஆன்மா அநாதியே ஆணவத்தோடு இருந்த போதே இறைவனோடும் ஆன்மா இருந்தது. அப்போது இறைவன் முன் ஆணவம் ஒடுங்கித் தானே இருக்க வேண்டும். ஆனால் ஆன்மா இறைவனை அறியாமல் இருந்தது? எப்படி? (பாடல் - 1)

   விடை: படலத்தால் மறைக்கப்பட்ட கண்ணை உடைய குருடன், மருத்துவரின் அருகில் இருந்தாலும், குருடனால் மருத்துவரைக் காணமுடியவில்லை. அதுபோல ஆணவ மறைப்புக்கு உட்பட்ட ஆன்மா தன்னோடு உள்ள இறைவனை அறிய முடியவில்லை.

2. **வினா:** ஆணவமல மறைப்பு நீங்கும் பொருட்டு இறைவன் ஆன்மாவுக்கு தனுகரணங்களைத் தருகிறான். அவற்றைப் பெற்ற பின்பும் ஆணவ மல மறைப்பு நீங்காமல் இருப்பதேன்?(பாடல் - 2)

   விடை: உடலின் நோயை நீக்க மருத்துவன் மருந்து தருகிறான். அங்ஙனம் மருந்து கொடுத்தும் நோய் உடனே நீங்கவில்லை. மருந்து அருந்துவதோடு, மருத்துவன் கூறிய அறிவுரைப்படி நடந்தும் வந்தால் நோய்

Koviloor Digital Library

நீங்குகிறது. அதுபோல ஆணவமலம் நீங்க இறைவன் தனு கரணங்களைத் தருகிறான். தனுவாதிகளைப் பெற்றதோடு இறைவன் கூறிய நீதி நெறிப்படி ஒழுகினால்தான் ஆணவமலப் பற்று நீங்கும்.

3. வினா: அநாதியே ஆணவமல மறைப்புக்கு உட்பட்ட ஆன்மாவுக்கு அநாதியே இல்லாத பதிஞானம் தோன்றும் என்பது சற்காரிய வாதத்துக்குப் பொருந்துமா? (பாடல் - 3)

விடை: ஆன்மா அநாதியே ஆணவத்தோடு கூடி அறிவு மறைக்கப் பட்டிருக்கும். அந்நிலையிலேயே இறைவன் ஆன்மாவோடு அநாதியே ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருக்கிறான். எனவே ஆன்மாவுக்கு அப்போது பதிஞானம் உண்டு என்பது தெளிவாகிறது. அப்பதிஞானம் அப்போது விளங்காது ஒடுங்கி இருந்ததேயன்றி, இல்லாமல் இல்லை. அங்ஙனம் விளங்காதிருந்த பதிஞானம் பிறகு விளக்கமுற்றது. எனவே சற்காரிய வாதத்துக்குப் பொருந்தும்.

4. வினா: ஆன்மா கருவிகரணங்களைக் கொண்டே அறிவு விளக்கம் பெறுகிறது. இந்த அறிவு ஒருகால எல்லையில் அழிந்து விடும். இந்த நிலையற்ற அறிவைக் கொண்டு, காலங்கடந்த இறைவனை எப்படி அறிந்து கொள்ள முடியும்? (பாடல் 5)

விடை: உண் கலத்தில் உள்ள உணவை உண்பவன் உணவில் கருத்தைச் செலுத்தினால் உண்கலம் தெரியாது. உண் கலத்தில் கருத்தைச் செலுத்தினால் உணவை உண்டு மகிழ முடியாது. அதுபோலவே பாசக் கருவிகளைக் கொண்டு அறிவு விளக்கம் பெறும் ஆன்மா, தம் கருவிகரணங்களைத் தம் கருவி கரணமாகக் கருதினால் சிவம் தோன்றாது. தம் கருவி கரணங்களைச் சிவமாகவே பாவித்தால் சிவம் தோன்றும்.

❋ ❋ ❋ ❋ ❋

Koviloor Digital Library

6. போற்றிப் பஃறொடை

போற்றிப் பஃறொடை, மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பத்தாவது நூல். இது உமாபதி சிவாச்சாரி யாரால் ஆக்கப் பெற்றது. இது பல தொடைகளால் (அதாவது 95 கண்ணிகளால்) நீண்டு வந்த வெண்பாவாக அமைந்திருப்பது. மற்றும் சிவமே குருவாக வந்து அருளிய திறங்களை எடுத்துரைத்து இடை இடையே குருநாதர்க்குப் போற்றி கூறியிருப்பதால் போற்றிப் பஃறொடை எனப் பெயர் பெற்றது. காலம் கி.பி.1298.

இந்நூலில் கண்ட முக்கியச் செய்திகள் சில:

1. ஆணவத்தின் இயல்பு (கண்ணி 7 மு 10)

நெல்லுக்கு உமியும், தவிடும், செம்புக்குக் களிம்பும் கடல் நீரில் உப்பும் அநாதி காலமாக இருப்பது போல ஆணவம் உயிர்களை அநாதியே பற்றியிருப்பது. ஆணவம் வடிவமற்றது. மணியைப் பாம்பு உள்ளடக்கி வைத்திருப்பது போலவும், விறகு நெருப்பை உள்ளடக்கி வைத்திருப்பது போலவும் ஆணவம் தன் வியாபகத்துள் உயிர்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது. இந்த ஆணவம் ஆன்மாக் களின் அறிவாற்றலை ஆவாரக சக்தியால் மறைத்து வைத்திருக்கிற கொடிய தொழிலை உடையது.

2. முதல் பிறப்பு நிலை (சகலநிலை) உண்டான விதம் (கண்ணி 10 மு 13)

ஆணவத்தால் ஆன்மாவின் அறிவாற்றல் மறைக்கப்பட்ட நிலையை அறிந்து, அவ்வுயிரின் இச்சைக்கு ஏற்ப இறைவன் மாயா காரியமான உடம்புகளை, கட்புலன் இல்லாத குருடனுக்கு ஊன்று கோல் கொடுப்பது போல் கொடுக்கிறான். அந்நிலையில் முதலில் நுண் உடல்களைத் தந்து பிறகு பருவுடலை இறைவன் தருகிறான். நுண் உடலின் மனத்தினது விருப்பு வெறுப்புகளை வினையாக்கி அவ்வினைகளின் பயனாகப் பருவுடலை தருகிறான். தத்துவக்கூட்டங்களின் வழியாக ஞானத்தை வழங்குகிறான்.

Koviloor Digital Library

[stamp]

3. நரக தண்டனை (கண்ணி 42 மு 47)

ஆயுட்காலம் முடிந்த உயிரை எமதூதர் பிடித்துப் போய் எமதருமனிடம் நிறுத்துவர். எமதருமன் அந்த உயிரைப் பார்த்து, "பாவியே! நீ எத்துணையோ பிறவி எடுத்த பின்பு இப்பிறப்பிலும் இனிப்பிறவாமைக்குரிய எண்ணம் உன்னிடம் ஏற்பட வில்லையோ" என்று இரக்கமுடன் பேசிப் பின்பு தனது நடுநிலை தவறாமைப் பொருட்டு எமதூதர்களை நோக்கி, "இந்த உயிர் செய்த தீவினைக்கு, உற்ற தண்டனையைக் கொடுங்கள்" என்பான்.

எமதூதர்கள் அந்த உயிரைச் செக்கில் இட்டு ஆட்டியும், தீக்குழியில் தள்ளி எரித்தும், நெருப்புத்தூணைத் தழுவச்செய்தும், இரும்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சிச் செவியில் நுழைத்தும், நாக்கை வாளால் வெட்டியும், உன் உடம்புத் தசையை நீ தின்னு என்று உலக்கையால் அடித்தும், ஆழமான நகரக்குழியில் ஆழ்த்தியும் துன்புறுத்துவர்.

❋ ❋ ❋ ❋

7. நெஞ்சுவிடு தூது

நெஞ்சு விடு தூது, மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பன்னிரண்டாவது நூல். இது உமாபதி சிவாச்சாரியாரால் ஆக்கப் பெற்றது. 129 கண்ணிகளை உடைய ஒரே கலிவெண் பாவால் ஆனது. உமாபதிசிவம் தம்மைத் தலைவியாகவும் தம் ஆசிரியரைத் தலைவனாகவும் பாவித்துக் கொண்டு அவரிடம் மாலை வாங்கி வரும்படித் தமது நெஞ்சைத் தூது விடுவது போல் இந்நூலைச் செய்திருப்பதால் இது நெஞ்சுவிடு தூது எனப் பெயர் பெற்றது. காலம் கி.பி.1312.

இந்நூல் கூறும் செய்திகளில் சில:

1. நெஞ்சுக்கு உரைத்த நீதி (கண்ணி 23 மு 29)

"ஆண்டவனான உள்ளத்தைத் தவிர வேறு உறவுமில்லை" என்பதையும் இறைவனது மேம்பட்ட ஞானத்தையும்

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 12087

தலைப்பட்டவரே முற்றும் துறந்தவராவார். மற்றவர்கள் உலகமயக்கில் மயங்கி பிறப்பிறப்பு என்ற வலையில் சிக்கிக் கொண்டவராவார்." என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் குறட்கருத்தை நெஞ்சமே! நீ விரும்பி ஏற்கவில்லை. மெய் முதலிய ஐம்புலனும் ஆசைப்பட்டதையே செய்து அவர் வழியை கைவிடாமல் பின்பற்றினாய், பாவம் என்னும் பெருங்கடலில் அழுத்தினாய். பெண்களின் கண் வலையில் சிக்கிக் கலவி என்னும் கலையைப் பழகினாய். உயிருக்கு உய்திதரும் உண்மை நூல்களைப் பயின்று செருக்கினால் நாவினால் கொடுஞ்சொற் களைப் பேசினாய். அதனால் சாவும் பிறப்புமான தொடர்ச் சியில் அகப்பட்டு உனது உயிரின் துன்பநிலையை அறிவாயாக.

2. தசாங்கம்

பாட்டுடைத்தலைவனுக்கு மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்ற பத்து உறுப்புக்களும் இன்னின்ன என்று சிறப்பித்துக் கூறும் பகுதி தசாங்கம் எனப்படும்.

உமாபதி சிவம் தன்நெஞ்சத்தை மறைஞான சம்பந்தரிடம் தூது விடுகிற இந்த சிற்றிலக்கியத்தில் மறைஞான சம்பந்தரான பாட்டுடைத் தலைவரின் தசாங்கம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

1. குணக்குன்று (கண்ணி 39) சாத்வீகம் என்ற குணமாகிய மலை.
2. ஆனந்தம் என்பதோர் ஆறு (கண்ணி 57) பேரானந்தப் பெருக்காகிய ஆறு.
3. நண்ணரிய தொரு நாடு (கண்ணி 58) வேதங்களையும் ஆகமங்களையும் கற்ற அறிவால் மட்டும் அடையமுடியாத வீடுபேறான நாடு.
4. ஒட்டற்று வீற்றிருக்கும் ஊர் (கண்ணி 60) தேடி ஓடுதலைக் கைவிட்டு நின்ற சிந்தை சிவஞான மோன சமாதியில் ஓடுதலைக் கைவிட்டு நிலையாக நின்ற இடமே ஊர்.

Koviloor Digital Library

5. அருள்மேலாய் விளங்கும் அலங்கல் (கண்ணி 63) உலகப்பற்றான மயக்கத்தை உடையவரின் மனத்தைத் தன் மாட்டுக் கவர்வதற்கு திருவருள் மேலோங்கும் மாலை.

6. எண்ணத்து நில்லாமல் நிற்கும் நீள்வாசி (கண்ணி 65) உலகத்தாரின் பசு ஞான, பாச ஞானங்களுக்கு அகப்பட்டு நிற்காமல் அப்பாலாய் நிற்கும் இறைவனது பேராற்றலாகிய குதிரை.

7. ஞான ஆணை (கண்ணி 73) திருவருள் ஞானமாகிய யானை.

8. கடைதுன்பம் நீக்கும் கொடி (கண்ணி 74) உயிரிடம் பொருந்திய துன்பத்தை போக்கும் கொடி.

9. இன்பர் உளேநின்று முழக்கும் முரசு (கண்ணி 77) இனிய யோகியரின் உள்ளத்தில் முழங்குகிற முரசு.

10. உலகும் உலகால் உணர ஒண்ணா ஊரும், இலகி நடக்கும் எழில் ஆணை (கண்ணி 79)

பிரபஞ்சமும் பிரபஞ்சத்தால் உணர முடியாத பர வெளியும் ஆன இடங்களில் நடக்கின்ற திருஇறை ஆக்ஞையான ஆணை.

☆ ☆ ☆ ☆

8. சங்கற்ப நிராகரணம்

சங்கற்ப நிராகரணம் மெய்கண்ட சாத்திரம் பதினான் கனுள் பதினான்காவது நூல். இது உமாபதி சிவாச்சாரியாரால் ஆக்கப் பட்டது. இந்நூலின் பாயிரத்தில் ''ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம் வாழும் நல் சகனம் மருவா நிற்க'' என்று கூறப்பட்டதால், இந்நூலின் காலம் சக ஆண்டு 1235 என்று தெரிகிறது. அதாவது கி.பி. 1313. இந்நூல் 13 ஆசிரியப் பாக்களும் ஒரு வெண்பாவுமாக 14 செய்யுட்களால் ஆனது. 9 மதவாதிகளின் கொள்கைகளும் மறுப்புக்களும் கூறப்பட்டி ருப்பதால், இந்நூல் சங்கற்ப நிராகரணம் எனப் பெயர் பெற்றது. (சங்கற்பம் - கொள்கை, நிராகரணம் - மறுப்பு)

Koviloor Digital Library

மறுக்கப்பட்ட மதங்கள்

1. மாயாவாதி மதம்
2 ஐக்கியவாதி மதம்
3. பாடாண வாத சைவம்
4. பேத வாத சைவம்
5. சிவ சமவாத சைவம்
6. சிவ சங்கிராந்த வாத சைவம்
7. ஈசுவர அவிகார வாத சைவம்
8. சிவாத்துவித சைவம் (நிமித்த காரண பரிணாம வாதி மதம்)
9. சைவ வாத சைவம்

இந்நூலில் மறுக்கப்பட்ட முக்கிய மதங்கள் சில:

1. மாயாவாதி மதம்

கொள்கை 1: மாயை உண்டு என்றோ இல்லை என்றோ உறுதியாகக் கூறமுடியாது.

மறுப்பு: பிரமம் மாயையோடு கூடிச் சீவனாகப் பிறக்கிறது என்று மாயாவாதிகள் கூறுவார்கள். மாயையை யார் உண்டாக்கியது என்றால் அவர்களிடம் பதில் இல்லை. மாயை உள் பொருள் என்பதையோ, பிரமமே மாயையை உண்டாக்கியது என்பதையோ மாயாவாதிகள் ஏற்பதில்லை. பிரமம் மாயையோடு ஏன் கூடிற்று என்று கேட்டால் அதற்கும் அவர்களிடம் பதில் இல்லை. இவை எல்லாம் பிரமத்தின் விளையாட்டு என்று அவர்கள் கூறுகிறார்கள். எனவே மாயாவாதியிடம் மாயையைப் பற்றிய கொள்கை குழப்பமாகவே உள்ளது.

கொள்கை 2: இறைவனின் இயல்பு உணரப் படுவது என்றோ உணரமுடியாதது என்றோ உறுதியாகக் கூறமுடியாது. அது அநிர்வசனம்.

Koviloor Digital Library

மறுப்பு: அநிர்வசனம் என்பதற்கு உறுதியாகக் கூற முடியாதது என்று பொருள். மாயாவாதிகள், "பிரமம் மாயையோடு கூடினால் சீவனாகிறது. மாயையை விட்டு நீங்கினால் பிரமமாகிறது." என்பார்கள். எனவே பிரமம், உயிர் என்பன பற்றிய கொள்கை அவர்களிடம் தெளிவாக இல்லை.

கொள்கை 3: சீவன் பிரபஞ்சத்தை விட்டு நீங்கியதும் வெறும் பாழ் என்ற சூனியம் தோன்றுமேயன்றி ஞான சொரூபம் சீவனுக்கு இல்லை. எனவே பிரமம் நிற்குணம்.

மறுப்பு: குணமின்றி எந்தப் பொருளும் இல்லை. எனவே பிரமம் நிற்குணம் என்பது பொருந்தாது. மற்றும் சூனியம் என்பது ஒன்றுமே இல்லாமையைக் குறிக்கும். மற்றும் பிரபஞ்சத்தை விட்டு நீங்கிய சீவன் சூனியமாகுமேயன்றி ஞான சொரூபமாகாது என்றால், பிரமம் சூனியம் என்றாகி, மாயாவாதியின் மதம் சூனிய வாத மாக முடியும்.

2. பாடாணவாத சைவம்

கொள்கை 1: ஆணவ மலப்பற்று என்பது உயிரின் குணம்.

மறுப்பு: ஆணவம் உயிரின் குணம் என்றால் ஆணவமலம் உயிரிடம் எப்போதும் இருக்க வேண்டும். அதாவது உயிர் எக்காலத்திலும் அறியாமையிலேயே இருக்க வேண்டும். ஆனால் உயிருக்கு அனுபவம் வளர வளர அறிவு விளக்கம் உண்டாவது கண் கூடு. எனவே அறியாமை உயிரின் குணமன்று, உயிரின் குற்றமே.

கொள்கை 2: உயிரின் குணமாகிய ஆணவம் முத்தியிலும் உயிரை விட்டு நீங்காது முத்தியில் உயிர் சிவத்தோடு கூடாமல் மலத்தில் அடங்கிப் பாடாணம் (கல்) போல் கிடக்கும்.

மறுப்பு: உயிர் முத்திநிலையில் கல்லைப் போல் கிடக்கும் என்றால், உயிர் அநாதியே ஆணவத்தோடு கூடி அறிவு மறைக்கப்பட்டிருந்த கேவல நிலைக்கும் பாடாண வாதி கூறும்

Koviloor Digital Library

முத்திநிலைக்கும் வேறுபாடின்றிப் போகும். எனவே உயிர் பிறவி எடுக்கும் சகல நிலை பயனற்றதாகி விடும்.

3. சிவசம வாத சைவம்

கொள்கை 1: முத்திபெற்ற உயிர், சிவனுக்குச் சமமாகி விடும், அடிமை ஆவதில்லை. எனவே முத்தி பெற்ற உயிர் ஐந்தொழில் செய்யும்.

மறுப்பு: சிவன் எதனாலும் பற்றப்படாதவன் தனித்து நிற்கும் தன்மையன். ஆனால் உயிர் தனித்து நிற்கும் தன்மை இல்லாதது, சார்ந்ததன் வண்ணமாவது. உயிர் அநாதியே ஆணவத்தைப் பற்றி மலமாம் தன்மை பெறுகிறது. பிறகு இறைவன் அளித்த தனுவாதிகளைப் பெற்று, உலகப் பற்றுடையதாகிறது. மலச்சார்பைப் படிப்படியாக விட்டுச் சிவத்தைச் சார்ந்து சிவமாம் தன்மைபெறுகிறது. எனவே உயிர் முத்தியில் சிவமாம் தன்மை பெறுகிறதேயன்றிச் சிவத்துக்குச் சமமாவ தில்லை. அநாதியே ஐந்தொழில் ஆற்றும் தன்மையில்லாத உயிர், முத்தி நிலையில் ஐந்தொழில் ஆற்றும் என்பது சற்காரிய வாதத்துக்குப் பொருந்தாது.

கொள்கை 2: முத்திநிலையில் பதி ஞானத்தால் உயிர் தன்னையும் சிவத்தையும் காணலாம்.

மறுப்பு: கண் ஒரு பொருளைக் காணும் போது காணப் படும் பொருளைக் காணுமேயன்றிக் காண்கின்ற கண்ணாகிய தன்னைக் காணாது. அதுபோல ஆன்மா சிவஞானத்தால் சிவத்தைக் காண்கின்ற போது சிவத்தைக் காணுமேயன்றிக் காண்கின்ற ஆன்மாவாகிய தன்னைக் காணாது.

4. சிவசங்கிராந்தவாத சைவம்

கொள்கை: ஐம்பொறிகளான பசுகரணங்கள் பதிகரணங் களாகித் தத்துவ ஞானத்தை விளக்குகின்றன. எனவே இறைவன் குருவாக வரத் தேவையில்லை.

Koviloor Digital Library

மறுப்பு: பசுகரணங்கள் உயிரின் அறியாமையை நீக்குமேயன்றி அறிவு விளக்கம் தரமாட்டா. உயிர் உணர்த்த உணரும் தன்மையுடையதாகையால் உயிர்க்குத் திருவருள் உணர்தினாலன்றி அறிவு விளக்கம் உண்டாகாது; திருவருள் குரு வடிவில் நின்று உணர்த்தினால் தான் பசுகரணம் பதிகரணமாக மாறும். எனவே குருவின் துணை தேவையாகிறது.

5. சிவாத்துவித சைவம்
(நிமித்தகாரண பரிணாம வாதம்)

கொள்கை 1: முத்திநிலையில் ஆன்மா இறைவனோடு ஒன்றாகி விடுவதால், அவனருளால் ஆன்மா பேரின்பத்தை நுகரும் என்பது பொருந்தாது.

மறுப்பு: முத்தி நிலையில் ஆன்மா இறைவனோடு ஒன்றாகி விடுகிறது என்பதானது, சிவம் வேறு தான் வேறு என்று இல்லாமல் ஆன்மா சிவமாம் தன்மையில் கலந்து நிற்கிறதேயன்றிச் சிவமாகவே ஆகிவிடுகிறது என்பதைக் குறிக்காது. பொருட்டன்மையால் சிவமும் உயிரும் வேறே.

உயிர் எந்தப் பொருளைச் சார்கிறதோ அந்தப்பொருளுக்கு அடிமையாகிவிடும். இம்முறையில் சிவத்தைச் சார்ந்த ஆன்மா சிவத்துக்கு அடிமையாகிறது. எனவே தனது அடிமையான ஆன்மாவுக்குச் சிவனின் அருள் பேரின்பத்தை வழங்குகிறது. அதனால் முத்தி நிலையில் உயிர் பேரின்பத்தை நுகர்கிறது.

கொள்கை 2: கடலுள் சென்ற ஆற்று நீர் மீண்டும் ஆற்றுள் வருவது போலப் பரமுத்தி அடைந்த உயிர் மீண்டும் பிறவிக்கு வரும்.

மறுப்பு: ஆற்றுநீர் கடலில் புகும்போது கடலின் முன் எல்லையில் புகுந்த நீர் மீண்டும் ஆற்றுக்குள் வரலாம். ஆனால் கடலின் நடுவே சென்று கலந்த ஆற்று நீர் மீண்டும் ஆற்றுக்குள் வருவதில்லை. அதுபோலப் பதமுத்தி பெற்ற உயிர் ஒரோ வழி பிறவிக்கு வரலாம். ஆனால் பரமுத்தி பெற்ற உயிர் மீண்டும் பிறவிக்கு வராது.

❑ ❑ ❑ ❑

Koviloor Digital Library



வெளியீடு

சீனு. அருணாசலம்

அமைப்பாளர்
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம், சிதம்பரம் கிளை
16, சின்னக்கடை தெரு, சிதம்பரம் - 608 001
☎ 04144-231166

Koviloor Digital Library

திருவாவடுதுறைஆதீன சைவசித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம்

சிதம்பரம் கிளையின்

வெளியீடுகள் ...

- சைவசித்தாந்த - வினாடி வினா
- மெய்கண்ட சாத்திரங்கள் 14 ஓர் அறிமுகம்
- ஆறாறு தத்துவம் ஏது?
(36 தத்துவ விளக்கம்)
- சிவஞான போதம் &
சிவஞான சித்தியார் தெளிவு
- மெய்கண்ட சாத்திரம் 14 நூல்களில்
வினாக்கள்
- பண்டார சாத்திரங்கள் 14 - ஓர் அறிமுகம்

அச்சில் ...

- திருவுந்தியார் திருகளிற்றுப்படியார்
தெளிவு

வேல்ராஜ், சிதம் ☎ 225426